

சி. வி. வேலுப்பிள்ளை






100வது ஜனன தின நினைவு மலர்

வெளியீடு
சி.வி. ஜனன தின நூற்றாண்டு நினைவுக்குழு
ஹட்டன்

சி. வி. வேலுப்பிள்ளை

100 ஆவது ஜனன தின நினைவு மலர்



வெளியீடு :

சி.வி. நூற்றாண்டு ஜனனதின நினைவுக்குழு

ஹட்டன்

மாத்தளை செல்வா என இலக்கிய வட்டத்தில் பரவலாக அறியப்படும் திரு. எச். எச். விக்கிரமசிங்க அவர்கள் சி. வி. வேலுப்பிள்ளை மீது கொண்ட பேரபிமானம் காரணமாக இம்மலரின் தயாரிப்பு செலவுக்கு அப்பாலான அச்சு செலவுக்கு பூரண அனுசரணை வழங்கியுள்ளார். இவர் மாணவனாக இருந்த காலம் முதல் சி. வி. அவர்கள் அமரர் ஆகும் வரை சி.வி. யோடு நல்லுறவுகளைப் பேணியவர். அவர் குறித்த ஓர் சிறு அறிமுகத்தையும் சி.வியுடன் அவர் இயங்கியமை தொடர்பிலும் சுருக்கமான பதிவினை வழங்க வேண்டியது மலராசிரியரின் கடப்பாடு என உணர்கின்றேன்.

தற்போது தொலை தொடர்புகள் தகவல் தொழில்நுட்ப பிரதி அமைச்சர் கௌரவ பிரபா கணேசன் அவர்களின் ஒருங்கிணைப்புச் செயலாளராக செயற்படும் விக்கிரமசிங்க இதற்கு முன்பதாக அமைச்சர் அமரர் பெ. சந்திரசேகரனோடு இணைந்து அவர் அமரராகும் வரை (2010 ஜனவரி) செயற்பட்டவர்.

உலகலாவிய இந்திய வம்சாவளியினரோடு இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரையும் இணைக்கும் பயணத்தில் கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு நாடுகளுக்குச் சென்று சேவையாற்றுவதன் உன்னதம் உணர்ந்து கனடிய இந்திய வம்சாவளி சமூக சேவைக்கான அதியுயர் விருது கனடா பாராளுமன்றத்தில் வழங்கி கௌரவித்துள்ளது. கடந்த நான்கு தசாப்தங்களாக இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் எஸ். எம். கார்மேகம் முதலான பல மலையக ஆளுமைகள் மற்றும் மலையகம் கடந்த ஆளுமைகளோடும் இணக்கபூர்வமாக பணியாற்றிவரும் தொடர்ச்சியில் இவரின் இன்றைய வகிபாகம் நுணுக நோக்க வேண்டியதாயினும் விரிவஞ்சி அவரின் சில பணிகளை மாத்திரம் தொட்டுக்காட்ட வேண்டியது இத்தருணத்தில் அவசியமாகும்.

- சி. வி. யின் வீடற்றவன் நாவல் வைகைறை பிரசுரமாக நூலுருப்பெறும் போது அதனை முன்னெடுத்த அப்போதைய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் அவர்களோடு துணை நின்று செயற்பட்டவர்.
- தட்டச்சு பிரதியாக இருந்த சி. வியின் "நமது கதை" பின் தமிழகத்தில் இர.சிவலிங்கத்தின் முன்னுரையோடு 'நாடற்றவர் கதை' யாக நூலுரு பெற அக்கறை செலுத்தி பங்களித்தவர்.
- கலை ஒளி முத்தையாப்பிள்ளை ஞாபகார்த்தமாக, வீரகேசரி மலையக எழுத்தாளர்களுக்காக நடத்திய சிறுகதை போட்டியில் பரிசு பெற்ற சிறுகதைகளை மலையக பரிசு கதைகள் எனும் மகுடத்தில் வெளிவரவும் பரிசளிப்பு நிகழ்ச்சி சிறப்புற நடைபெறவும் வழி செய்தவர்.
- மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான தமிழோவியன் கவிதைகள் சாகித்ய பரிசு பெற்ற கவிதை நூல் உருவாக காரணமாக இருந்தவர்.
- மாத்தளை வடிவேலனின் 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' எனும் நூலை ஆக்கச்செய்து பதிப்பித்து வெளியிட்டார்.
- அமரர் பெ. சந்திரசேகரன் அவர்கள் மறைவைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட அனுதாப உரைகளை தொகுத்து 'மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ. சந்திசேகரன்' என்ற நூலை உருவாக்கி லண்டன் மாநகரித்திலும் டென்மார்க்கிலும் வெளியீட்டு விழா நடத்தி பெருமை சேர்த்தவர். முற்றும் இதன் சிறப்புப்பிரதிகளை 2014 ஜனவரி புதுடில்லியில் வைத்து தற்போதைய பிரதமரும், முன்னாள் குஜராத் மாநில முதலமைச்சரும் மாண்புமிகு ஸ்ரீநரேந்திர மோடி அவர்களிடம், முன்னாள் வெளிநாட்டு இந்தியர்களின் நலன்துறை ஸ்ரீவயலார் ரவி அவர்களுக்கும் வழங்கி பெருமை சேர்த்தவர்.
- தமிழ்நாட்டு ஆதீனகர்த்தாக்களும் சிவாச்சாரியார்களும், ஞானவான்களும் பாராட்டி மகிழ்ந்த ஐந்துபிட்டி ஜெயந்திநகர் ஸ்ரீசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் கும்பாபிசேக மலரின் (1996) தொகுப்பாசிரியராக செயற்பட்டு ஆன்மீக பணி செய்தவர்.

நூலின் பெயர் : சி.வி. வேலுப்பிள்ளையின் 100 ஆவது ஜனன தின நினைவு மலர்

தொகுப்பாசிரியர்கள் : சு. முரளிதரன், இரா. சந்திரமோகன்

பதிப்புரிமை : சி. வி. நூற்றாண்டு ஜனன தின நினைவுக்குழு - ஹட்டன்

பதிப்பகம் : காயத்திரி பப்ளிகேஷன் - தெஹிவளை 011 - 4981906

வெளியீடு : 04.10.2014

பக்கங்கள் : 112

உற்பத்தி விலை : 200.00

மாமனிதனின் நினைவைப் போற்றக் கிடைத்த அரிய வாய்ப்பு

தடம் பார்த்துச் செல்பவர்கள் மனிதர்கள். தடம் பதித்துச் செல்பவர்கள் மாமனிதர்கள். காலத்துக்கு காலம் மாமனிதர்கள் வையகத்தில் தோன்றி மனிதர்களை வழிநடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மலையகத்தில் அரசியலில் தடம்பதித்துச் சென்றவர்கள் தொழிற்சங்கத்தில் தடம் பதித்துச் சென்றவர்கள், இலக்கியத்தில், கல்வித்துறையில், சமூக நலனில் தடம் பதித்துச் சென்றவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள், இருக்கிறார்கள்.

ஆனால், எல்லாத்துறைகளிலும் சிறப்பாக தடம் பதித்து வெற்றிகரமாக செயல்பட்ட மாமனிதர் மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் மட்டுமே. திறமைசாலிகளை மறைத்தும், மறக்கடித்தும் சரித்திரம் எழுதினாலும் அவர்தம் புகழ் மங்குவதில்லை.

சி.வி. அவர்களின் சிறப்புத் தகுதிகளை தோண்டி வெளிக்கொண்டவர்கள் என்றவகையில் அந்தனிஜீவா, சு.முரளிதரன், சாரல்நாடன், மு. சிவலிங்கம், சுப்பையா ராஜசேகர் போன்ற பலரும் பாராட்டத்தக்கவர்கள். சி.வி அவர்களின் பல்துறை ஆளுமைகள் பற்றிய ஆக்கங்கள் இம்மலரில் பலராளும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

அம்மனிதனின் நூற்றாண்டு ஜனனதின விழாவை சிறப்பாக முன்னெடுக்கும் விழாவையும், ஏனைய நிகழ்வுகளையும் சிறப்பாக நிறைவேற்றிட பலரும் துணை நிற்கின்றனர். மலையகத்தின் பிரபல இலக்கிய நண்பர்கள் அனைவரும் தங்கள் ஆக்கங்களை மலரில் இடம்பெறச் செய்துள்ளனர்.

கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், வர்த்தகத்துறையினர், மக்கள் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் என அத்தனை பேரும் விழா வெற்றிபெற ஒத்துழைப்பு நல்கினர். குறிப்பாக ஸ்ரீபாத கல்வியற்கல்லூரி ஆசிரியர் பயிலுனர்கள் மற்றும் நிர்வாகத்தினரின் பணி பாராட்டுக்குரியது.

சி.வி. நூற்றாண்டு ஜனன தின விழா சிறப்பாக நடந்து முடிய கைகொடுத்த அத்தனை உள்ளங்களுக்கும் விழாக்குழு சார்பாக மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மு. நேசமணி
விழாக்குழு தலைவர்,
88/2, டன்பார் வீதி, அட்டன்.

விழாக்குழு செயலாளரின் செய்தி

சி.வி. என்றழைக்கப்படும் கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளையின் நூற்றாண்டு விழா இவ்வருடம் (1914 – 2014) கொண்டாடப்பட பல இடங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு விருகின்றன. இவ்வேளையில் அட்டனில் கடந்தசில மாதங்களுக்கு முன்னரேயே இவ்விடயம் தொடர்பாக ஒரு குழு அமைக்கப்பட்டு விழா சிறப்புற இடம்பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தில் பிறந்து வளர்ந்து இந்த மலையக மண்ணையும் மக்களையும் நேசித்தவர் சி.வி. ஆவார். இம்மக்களின் உழைப்பு, அவர்கள் தம் அபிலாசைகள், சிறுசிறு சந்தோசங்கள், நம்பிக்கைகள், பாரம்பரிய பழக்கவழக்கங்கள், பாமரத்தனங்கள் என இவர்கள் தம் எல்லா வகையான உணர்வுகளையும் அவர்களோடு ஒருவராக வாழ்ந்து தமது படைப்புகளினூடாக ஆங்கில மொழியில் வெளிக்கொணர்ந்தவர்.

சி.வி.க்கு விழா எடுப்பதும் அவர் பற்றி வெளிவராத விடயங்களை வெளிக் கொணர்வதும், ஆவணப்படுத்தும் எமது கடப்பாடாகும் என்பதை உணர்ந்து அட்டன் சி.வி. நூற்றாண்டு ஜனன தின விழாகுழு பயனுள்ள தகவல்கள் பல அடங்கிய இம்மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறது.

சி.வி.யின் பன்முக ஆளுமையை வெளிப்படுத்தும் வகையில் பல்துறைச் சார்ந்தோரும், பல அரசியல் சார்புடையோரும் ஒருங்கிணைந்து செய்த ஏற்பாட்டின் வெளிப்பாடே இம்மலர். சி.வி. பற்றிய ஆவணப்படம், விழா நிகழ்வுகள் தொடர்பாக காத்திரமான பல நல்லாலோசனைகளையும் தகவல்களையும் பலர் எமக்கு தந்துதவி உள்ளனர். மேலும் பொருள் உதவி செய்தவர்கள் பலர் உள்ளனர். மிளிர வட்டக்கொடை இராஜசேகரன் தனது பங்களிப்பைத் தந்துள்ளார். கிங்ஸ்லி கோமஸ் ஆவணப்படத்தை மெருகூட்டுவதற்காக வட்டக்கொடைக்கே நேரடியாக சென்று தகவல்களைத் திரட்டியுள்ளார். இவர்களுக்கும் இணைச்செயலாளர் இரா. சந்திரமோகன், தலைவர் மு. நேசமணி இப்படிப்பலரும் தொடர்ந்து தத்தமது பங்களிப்பை செய்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் விழாக்குழு சார்பாக நன்றி கூறிட விளைகிறேன்.

நன்றி, நன்றி, நன்றி

மொழிவரதன்
(C. மகாலிங்கம்)
விழாக்குழு செயலாளர்

மலர் பிரதம ஆசிரியர் கருத்துப் பதிவு

சி.வி. யைப் பற்றி பிரக்ஞைபூர்வமாக மீளறிமுகம் செய்துவைத்த அமரர் சாரல்நாடன், 'குமுறத் தொடங்காத எரிமலையும், கொதிநிலை எட்டாத நீரும் சி.வி.யின் படைப்புகளின் பாணியாக அமைந்து, உடல் உழைப்பைத் தரமாத்திரமேலாயக் கானவர்கள் மலைநாட்டுமக்கள் என்று வேரோடிபோன எண்ணத்தை மாற்றி அமைக்க வழி சமைத்திருக்கின்றன என்பதை மறுக்க யாராலும் முடியாது என்றும் இலங்கையில் தேயிலை உள்ளவரை, தேயிலை மக்களைப் பற்றிச் சிந்தித்த சி.வி. வேலுப்பிள்ளையின் படைப்புகளும் நின்றுநிலைக்கும் என்பது உறுதி' என்பார். அதன் தொடர்ச்சியில் சி. வி. வேலுப்பிள்ளையின் நூற்றாண்டினையொட்டி ஹட்டன் நகரை மையமாகக் கொண்ட புத்திஜீவிகளும் இயங்காற்றல் கொண்டவர்களும் இணைந்து கொண்டாடும் விழாவுக்குப் பெருமை சேர்ப்பதாகவும் ஒரு வரலாற்று பதிவாகவும் இம்மலர் வெளிவருகின்றது.

இம்மலர் தாங்கியுள்ள அம்சங்கள் சி.வி. அவர்கள் குறித்து பலவித தரிசனங்களைத் தரக்கூடும். அதுமட்டுமல்லாமல் ஒரே ஆளுமையைக் குறித்து பலரும் எழுதுவதால் கூறியது கூறல் காணப்படலாம். மேலும், சி.வி.யின் மீது வைத்திருக்கும் பெரும் பற்றுகாரணமாக மிகைப்பட கூறல் என்பதையும் பல இடங்களில் காண்பதாக உணரலாம். என்றாலும் நிறைவாக மலையகத்தில் இதுவரை சி.வி. யின் ஞானத்தைக் கொண்டதான மற்றொரு ஆளுமை தோன்றவில்லை என்பதை இம்மலர் உணர்த்து வதாக அமையும் எனலாம். அத்தோடு சாரல்நாடனுக்குப் பின் தற்போது சி.வி. பற்றிய தேடல்கள் அதிகரிக்க தொடங்கியிருப்பதையும் இம்மலரில் அவதானிக்கலாம்.

இம்மலர் வெளிவர துணைநின்ற குறிப்பாக இணையாசிரியர் என்ற பணிக்கும் அப்பால் செயற்பட்ட இரா. சந்திரமோகன் இந்நூற்றாண்டுகொண்டாட்டத்தின் முக்கிய மானதும் நம்பிக்கைக்குமுரிய இளைஞர் என்பதை நிரூபித்திருக்கின்றார் என்பதை பதிவு செய்வதில் பெருமை கொள்கின்றேன்.

இறுதிநேர அசுர அவசர முயற்சிக்கு கைகொடுத்த காயத்திரி பப்ளிகேஷன் உரிமையாளர் வே. நவமோகன் உட்பட துணை நின்ற அனைவருக்கும் பணிவின் வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

– சு. முரளிதரன்

உள்ளடக்கம்

01. "மக்கள் கவிமணி" சி.வி.யின் வாழ்வும் பணியும் - அந்தனி ஜீவா 07
02. நினைவாண்டு – எலியாசன் 12
03. மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை பன்முக ஆளுமை - டி. அய்யாத்துரை 14
04. சி.வி.க்கு கௌரவ "கலாநிதி" பட்டம் - "தமிழ்மணி" தங்கம் 22
05. மலையகம் மறக்காத மக்கள் கவிஞன் – கிங்ஸ்லி கோமஸ் 25
06. வியாபித்து நிற்கும் சி.வி. – எஸ். ஜே. பயிான் 28
07. சாகா வரம் பெற்ற சி.வி - இரா. சந்திரமோகன் 29
08. நான் உணர்ந்த சி. வி. ஓர் அனைத்தும் நிறைந்த ஆளுமை – கலாபூசணம் மு.சிவலிங்கம் 30
09. மறுமலர்ச்சிக்காக இலக்கியம் படைத்த பேனா போராளி....! – சிவலிங்கம் சிவகுமார் 35
10. சி.வி.யின் எழுத்துத் திறம்! - கவிஞர். மு. முத்துவேல் 39
11. மக்கள் மனதில் என்றும் சீவிக்கும் "சிவி" - எஸ். சிவசுந்தரம் 41
12. சி. வி. வேலுப்பிள்ளையின் பன்முக ஆளுமையும் பணிகளும் - மல்லியப்புசந்தி திலகர் 43
13. சி.வி. ஆளுமையின் அடையாளம் - துரைசாமி நடராஜா 53
14. எங்களோடும் சி.வி. சில நாட்கள் - மல்லிகை சி. குமாரின் ஓர் அனுபவப் பகிர்வு 55
15. மலையக மக்களின் அடையாளப் போராட்டத்தில் சி. வி. வேலுப்பிள்ளையின் வகிபங்கு - பெ. முத்துலிங்கம் 59
16. மறைந்தும் மறையாத மலையகத்தின் மாணிக்கச் சுடர் அமரர் சி. வி. வேலுப்பிள்ளை - எஸ். முருகையா 63
17. சி.வி. சில குறிப்புகள் - மொழிவரதன் 66
18. துன்பியல் வரலாற்றை உலகறியச் செய்த சி. வி. – ப. மோகன் சுப்ரமணியம் 68
19. கவிமணி சி.வி ஓர் இலக்கிய போராளி – தாமரை ஏ. யோகா 70
20. மலையகம் பெற்றெடுத்த மாபெரும் கவிஞன் சி. வி. வேலுப்பிள்ளை - எஸ். ராமையா 74
21. சி. வி. பிறக்கட்டும் - சுப்பையா ராஜசேகர் 77
22. சி. வி. யின் இலக்கிய நோக்கும் பணியும் - லெனின் மதிவானம் 81
23. தேயிலைத் தோட்டத்திலே... - குருசாமி தர்சணகுமார் 90
24. இனிப்படமாட்டேன் - இரா. உமேஸ்நாதன் 93
25. மலையக இலக்கிய வளர்ச்சியில் சி. வி. வேலுப்பிள்ளை அவர்களின் வகிபங்கு - குமார் மதிவதினி 96
26. சி.வி. யின் இலக்கியத்தில் முற்போக்கு செல்நெறி – அழகு கனகராஜ் 99
27. EMINENT LITERATUS LATE C.V. VELUPILLAI – T. R. GOPALAN 105
28. முத்திரையால் பெருமை பெரும் சி. வி. வேலுப்பிள்ளையின் மாட்சி 107
29. சி.வி. ஜனனதின நூற்றாண்டு நினைவு விழாக்குழு பற்றிய விபரம் 110
30. பாடசாலை மட்ட கவிதை மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் 111
31. திறந்த போட்டிப் பிரிவுகள் 112

"மக்கள் கவிமணி" சி.வி.யின் வாழ்வும் பணியும்


– அந்தனி ஜீவா

மலையக இலக்கிய முன்னோடிகளில் ஒருவரும், மலையகமக்கள் கவிமணி எனப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவருமான அமரர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களை ஒரு கவிஞராகவும், தொழிற்சங்கவாதியாகவும் பலர் அறிந்துவைத்துள்ளனர்.

மக்கள் கவிமணி சி. வி. அவர்கள் எழுத்தாளர், கவிஞர், தொழிற்சங்கவாதி, தலவாக்கொலைக்கு பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தவர். இத்தனைக்கும் மேலாக மக்களை நேசித்த மனிதாபிமானி, மானுடம் பாடிய வானம்பாடி.

மக்கள் கவிமணியான சி.வி. வேலுப்பிள்ளை தன் வாழ்நாள் முழுவதும் மரணம் அவரை அணைத்துக் கொள்ளும் வரையில் ஒரு முழுநேரத் தொழிற்சங்கவாதியாகப் பணியாற்றிக் கொண்டு சலசலப்பில்லாமல் தன் இலக்கியப் பணியை ஒரு ஞானத்துவம் போல இயற்றி வந்தவர். இளமைக் காலம் முதல் அமரராகும் வரை அவரது வாழ்வும் எழுத்தும் இரண்டறக் கலந்தே வந்துள்ளது.

1930களுக்குப் பின் மலையகத்தில் ஒருமாற்றம் ஏற்படத் தொடங்கியது. 1940களுக்கு பின் அந்த மாற்றத்தில் ஒரு வேகம் தென்படத் தொடங்கியது. இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் சி.வி.



மணிக்கொழுந்தும் மலையகமும்

தமிழகத்தில் மணிக்கொடி சகாப்தம் உதயமாயிற்று. மலையகத்தையும் எட்டிப்பார்க்கத் தவறவில்லை. ஈழத்து இலக்கிய உலகிலும் இந்த மணிக்கொடி ஒரு மறுமலர்ச்சிக் குழுவை உருவாக்கியது போல, மலையகத்தில் ஒரு கோஷ்டி உருவாகாவிட்டாலும் சி. வி. கே. கணேஷ், பொ. கிருஷ்ணசாமி போன்றவர்கள் தனிநபர்களாகச் செயற்பட்டுள்ளதை வரலாறு சுட்டிக் காட்டுகின்றது.

மலையக இலக்கிய வளர்ச்சிக்கு சி.வி.க்கு முன்னர் ஒருசிலரும் உந்து சக்திகளாக இருந்தாலும் சி.வி. ஆரம்பம் முதல் தனது எழுதும் கை சக்தி இழக்கும் வரை மலையகத்தை நேசித்தது மாத்திரமன்றி, அதன் வளர்ச்சியில் பெரும் அக்கறைகாட்டி வந்தார். அன்னார் வாழ்வும் எழுத்தும் இரண்டறக் கலந்து இருந்தது. அவருடன் இரு தசாப்தங்களாக மிக நெருங்கிப் பழகியவன் என்ற முறையில் அவருடைய இலக்கியப் பங்களிப்பை இன்றைய தலைமுறையினர்க்குக் கோடிட்டுக் காட்டுவதற்காகவே இக்கட்டுரையை எழுதலானேன்.

கே. நடேசஐயர்

மலையக மக்களிடையே ஓர் எழுச்சிக்கு வித்திட்ட பெருமை தொழிற்சங்கவாதியான கோ. நடேசையரைத்தான் சாரும். தென்னிந்தியப் பிராமணரான கோ. நடேசஐயர் தஞ்சாவூரில் அரசாங்க உத்தியோகம் பார்த்துவிட்டு, பின்னர் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி, அப்பத்திரிகைக்காகச் சந்தாதிரட்ட 1915 ஆம் ஆண்டு இலங்கை வந்து "தேசநேசன்" என்ற தமிழ்த் தினசரியின் ஆசிரியரானார். 1925 ஆம் ஆண்டு முதல் தோட்டத் தொழிலாளர்களின் நடவடிக்கைகளில் அக்கறைகாட்டினார்.

இவர் தோட்டம் தோட்டமாகச் சென்று மகாகவி பாரதியாரின் தேசிய உணர்வைத் தூண்டும் பாடல்களைத் தம் மனைவியோடு பாடினார். அவைகளைத் துண்டுப் பிரசுரங்களாகப் பரப்பினார். இதன் தாக்கம் மலையகமெங்கும் எதிரொலித்தது.

மகாகவி பாரதியாரின் கரும்புத் தோட்டத்திலே என்ற பாடலும், நாவலப்பிட்டி பெரியாம்பிள்ளை எஸ். எஸ். நாதன், கந்தசாமி கணக்குப்பிள்ளை, எம்டன் ஏ. விஜயரத்தினம் ஆகியோரின் பாடல்களும் சிறுசிறு நூல் வடிவமாக துண்டுப் பிரசுரங்களாக மலையக மக்களிடையே பரப்பப்பட்டன.

1940களுக்குப் பின் மலைநாட்டில் கல்வி எல்லாருக்கும் உரியதாயிற்று. கல்வியின் காரணமாக மலையகத்தில் மாற்றமும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. மகாகவி பாரதி, தாகூர், சரோஜினிதேவி ஆகியோரின் கவிதாசக்தியால் கவரப்பட்ட சி. வி. கவிதையின் மூலம் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தலானார்.

மக்கள் கவிமணியான சி.வி. வேலுப்பிள்ளை வட்டக்கொட அருகிலுள்ள மடக்கும்புர தேயிலைத் தோட்டத்தில் 1914 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். ஆரம்பத்தில் அவர் தோட்டப் பாடசாலைகளில் கல்விகற்று, பின்னர் அவர் அட்டனிலும், நுவரெலியாவிலும் கொழும்பு நாலந்தாவிலும் கல்விகற்றுள்ளார்.

தாகூரின் ஆசிபெற்றார்

அட்டனில் மிஷனரி பாடசாலையில் கல்விகற்கும் பொழுது கல்லூரி அதிபராக இருந்த ஸ்டீபன் ஜோசப் ஓர் எழுத்தாளர். இயற்கையிலேயே சி. வி. நாலந்தாக் கல்லூரியில் கல்விகற்கும் பொழுது, பாரதகவியரசர் தாகூர் இலங்கைக்கு வருகைதந்தார். அப்பொழுது சி.வி. தனது காதல் கவிதை நாடகமான "விஸ்வமாஜினி" யை அச்சிட்டு அவரிடம் கொடுத்து ஆசிபெற்றார்.

கல்லூரியை விட்டு வெளியேறியவுடன் இளைஞரான சி.வி. யின் நினைவில் மலையக மக்களைப் பற்றிய சிந்தனை எழுந்தது. இந்தச் சமூகம் இப்படி ஒதுக்கப்படுவதற்கு என்ன காரணம் என சிந்தித்தார். இந்தச் சமூகத்தில் ஒரு மாற்றமும் மறுமலர்ச்சியும் ஏற்படவேண்டுமானால் கல்விதான் அதற்குத் தகுந்த ஆயுதம் எனக் கண்டார். 1935ஆம் ஆண்டில் கவியரசர் தாகூரின் பெயரில் பூண்டுலோயாவில் கல்விக்கூடமொன்றை அமைத்தார். பின்னர் தான் பிறந்த ஊரான வட்டக்கொடயில் மகாகவி பாரதியாரின் பெயரில் சங்கமொன்றை நிறுவினார். சிலகாலத்திற்குப் பின் பொருளாதார நெருக்கடி காரணமாக நுவரெலியாவிலுள்ள காமினி வித்தியாலயத்தில் ஓர் ஆங்கில ஆசிரியராகச் சேர்ந்தார்.

ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இளமையின் கோலத்தால் காதல் கவிதைகளை நிறைய எழுதினார். அதனைத் தனது நெஞ்சுக்கு நெருக்கமான நண்பரான ஸ்டேசன் மாஸ்டரிம் காட்டியபொழுது, அவர் அந்தக் கவிதைகளைப் படித்துவிட்டுச் சொன்ன கருத்துக்கள் காரணமாக "தனது எழுத்துக்கள் தான் வாழுகின்ற சமூகத்திற்குப் பயன்பட வேண்டும்" என்று காதல் கவிதைகளை கிழித்து எறிந்துவிட்டுத் தனது மக்கள் படும் துன்ப துயரங்களை எழுத எண்ணங்கொண்டார்.

தொழிற்சங்கப் பணியில்

சி.வி. தனது சமூகம் ஒடுக்கப்படும் நிலைகண்டு அவர்களின் பிரச்சினைகளில் ஒரு பார்வையாளனாக இராமல், அதில் பங்காளியாக வேண்டும் என்ற எண்ணத்தில் 1940 களில் தொழிற்சங்கப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1947 இல் மலையக மக்களின் தலவாக்கொல்லைப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன் இலங்கை இந்தியன் காங்கிரஸ் செயலாளராகப் பணியாற்றினார். இதுவே பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக மாற்றப்பட்டது.

1965 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை விட்டுவெளியேறி வி.கே. வெள்ளையனுடன் இணைந்து தொழிலாளர் தேசியசங்கத்தை ஸ்தாபித்தார். இதன் நிர்வாகச் செயலாளராக 1948 ஆம் ஆண்டு நவம்பர் பதினொராம் திகதி தனது இறுதி மூச்சுவிடும் வரை பதவி வகித்தார்.

மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை முழுநேரத் தொழிற்சங்கவாதியாகப் பணியாற்றினாலும் எழுத்துப் பணியை மறந்துவிடவில்லை. தொழிற்சங்கத் துண்டுப்பிரசுரங்களை, பிரசார ஏடுகளைக் கூட காவியநயத்துடன் எழுதினார்.

பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் சி.வி. யின் படைப்புக்களை விமர்சித்தபொழுது 'சி.வி. எழுதிய அனைத்தும் இலக்கியமே' என குறிப்பிட்டார்.

சி.வி.யின் வேதனை

மக்கள் கவிமணிக்குப் பெரும் புகழும் தேடித் தந்தது "இலங்கையின் தேயிலைத் தோட்டத்திலே...." என்ற கவிதைப் படைப்புத்தான். இந்த நூலின் மூலம் மலையக மக்களின் துன்ப துயரங்களை, சோகப் பெருமூச்சுகளை, வாழ்வின் அவலங்களைத் தனது கவிதா ஆற்றலின் மூலம் வெளிப்படுத்தினார்.

"புழுதிப் படுக்கையில் புதைந்து என் மக்களை போற்றும் இரங்கற் புகழ்மொழி இல்லை பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை பரிந்தவர் நினைவுநாள் பகருவாரில்லை....."

இவ்வாறுதான் வாழ்ந்த சமுதாயமான மலையக மக்களின் வாழ்வைக் கவிதையாகத் தமிழில் அல்ல ஆங்கிலத்தில் உலகறியச் செய்தார். இந்தக் கவிதைப் படைப்பைத் தமிழில் தந்தவர் இன்னொரு மலையகக் கவிஞரான சக்தி பாலையா. இது இவரது மூன்றாவது நூலாகும். முதலாவது 'வீஸ்வமாஜினி' என்ற வசன காவியம். நாலாவதாக "உழைக்கப்பிறந்தவர்கள்" என்ற நடைச் சித்திரம்.

இதுமாத்திரமல்ல, தினகரன், வீரகேசரி ஆகிய தேசிய பத்திரிகைகளில் வாழ்வற்றவாழ்வு, எல்லைப்புறம், பார்வதி, வீடற்றவன், இனிப் பாடமாட்டேன் ஆகிய நாவல்களைத் தொடராக எழுதியுள்ளார். கடைசி மூன்று நாவல்களும் இவரால் தமிழில் எழுதப்பட்டவை.

மக்கள் கவிமணியின் படைப்புக்கள் அனைத்து மலையகத்தையும் படம் பிடித்துக் காட்டுபவை. 'உழைக்கப் பிறந்தவர்கள், என்ற நடைச் சித்திரம் மலையக மக்களின் பழக்கவழக்கங்களை, சடங்குமுறைகளை அப்படியே தத்ரூபமாகச் சித்தரிக்கின்றது.

சி.வி.யின் "வீடற்றவன்" நாவலில் வரும் ராமலிங்கத்தின் கதை மலையகத்தின் கதையாகும். மலையக உழைக்கும் தொழிலாளர்கள் வீடற்றவர்கள் மாத்திரமல்ல, நாடற்றவர்களும் கூட என்ற உண்மையை இந்த நாவல் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இது வெறும் கதையல்ல, மலையக மக்களின் இரத்தமும் தசையும் உணர்ச்சியும் நிரம்பிய வரலாறாகும்.

சி.வி. இறுதியாக எழுதியது 'இனிப்பாடமாட்டேன்" என்ற நாவலாகும். இந்நாவலின் முன்னுரையில் தமிழகத்து இலக்கிய விமர்சகரான திரு.ரகுநாதன் "அவரதுகதைகளில் நாம் உண்மையான வாழ்க்கையைக் காணமுடிகிறது. நறுக்குத் தெறித்தாற் போன்ற சுருக்கமான வாக்கியங்களில் சற்றேனும் உணர்ச்சிப் பெருக்கு உள்ளாகாமல், உள்ளதை உள்ளவாறே கூறும் உத்தி அவரது கதைகளில் ஓர் அலாதியான சிறப்பாகும். நூலாசிரியரின் அடக்க சுபாவத்தைப் போலவே அவரது கதைகளும் அடக்கமும் அமைதியும் மிக்கவை" எனக் கூறுகின்றார்.

ஓர் இலக்கிய ஆசிரியன் தான் வாழுகின்ற சமுதாயத்தையும் காலகட்டத்தையும்

தன் சிருஷ்டிகளால் எடுத்துக் காட்டிவிட்டால் அந்தச் சிருஷ்டி பயனுள்ள படைப்பாகாது என்பதை உணர்ந்து, சி. வி. தான் படைத்த படைப்புகளை யதார்த்தபூர்வமான கலைதத்துவ வடிவமாகத் தந்துள்ளார்.

நாட்டார் பாடல்களில் நாட்டம்

மலையக நாட்டார் பாடல்களில் சி. வி. க்குப் பெருவிருப்பு. நாட்டார் பாடல்களை வரலாற்று ரீதியாக ஆராய்ந்தால் வரலாற்றுத் தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம். மலையக நாட்டார் பாடல்களைத் திரட்டி மலை நாட்டு மக்கள் பாடல்கள் என்ற பெயரில் நூலாகத் தந்துள்ளார் சி.வி.

இந்த நாட்டுப் பாடல் தொகுதியில் மலையகத்திற்கு உழைப்பதற்காக ஆட்கூட்டி வந்த வரலாற்றை, கண்டிச் சீமைக்கு ஆட்கூட்டிவந்தபோது பிறந்த பாடல்கள் முதல் இங்கு வந்த தொழிலாளர்கள் தலைமுறை தலைமுறையாக இங்கே வாழ்ந்து இங்கே இறந்தவர்கள் என எண்ணி இரங்கும் ஒப்பாரிப் பாடல் வரை, வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களையும் பிரதிபலிக்கும் பாடல்கள் காதல் பாடல்கள் முதற்கொண்டு கடவுள் வழிபாடு வரை பல்வேறு வகைப் பாடல்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன.

"எங்களுடைய தேசத்தின் மக்களைப் போல் உலகில் எந்தப் பகுதி மக்களும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கேள்விப்பட்ட தேயில்லை" என அவர்களுக் காகப் புரட்சிக் கீதம் இசைத்தான் சிலி நாட்டு கவிஞன் பாப்லோநெரூடா. அதைப்போலத் தோட்டத் தொழிலாளருக்காகப் பாடினார் சி.வி.

(மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளையின் 14.09.2014 அன்று கொழும்பில் நடைபெற்ற நூற்றாண்டுவிழா ஆரம்ப நிகழ்வில் ஆற்றிய நினைவுப் பேருரையின் சுருக்கம்)

நினைவாண்டு

– எலியாசன்

காராண்டக் குன்றத்தில்
கதிராட வைத்தவனைக்
கைகூப்பி வணக்கம் செய்வோம்!
நூற்றாண்டு பிறந்தவனின்
நிறைவாண்டு கொண்டாடும்
நினைவாண்டை போற்றி வைப்போம்!

பேராண்டான் புகழாண்டான்
பாருழைக்கும் ஏழைக்கே
பணியாண்டே அமைதி கொண்டான்!
ஊரான நினைப்போர்கள்
உலைவைத்தே பிழைத்திருப்பார்
உத்தமனைக் காண்பதெங்கே!

ஒருநூறு ஆண்டுகள் வாழ்ந்தவன் சிந்தனை
நம்மிடம் தோன்றாதோ!
குருவழி மாணவன் என்றதோர் கொள்கையை
போற்றிட வேண்டாமோ!
அரும்பணி நாயகன் சி. வி. யைக் கண்டவர்
நாமெனச் சொல்வோமோ!
தெருவழிக் குப்பையை தோளில் சுமப்பவர்
நம்மினம் ஆவதுண்டோ?

சிந்தையில் மந்தமோ வந்தது கேடென
சிந்தனை செய்திடுவீர்!
பந்தமும் பாசமும் பக்குவம் கெட்டப்பின்
பங்கமே வேறிலையே!
பந்தியில் ஒன்றென குந்தியிருந்தவர்
போக்கினைக் கண்டறிவாய்!
சிந்தை செழுமையில் சந்தம் பிறந்திட
போற்றுவேன் திருநாமம்!

நானிலம் முற்றிலும் மேன்நிலைக் கண்டபின்
நாம்சினும் ஏழைகளோ!
ஊனுயிர் வாழ்வது ஏந்திய எச்சிலில்

என்பது கேவலமே!
ஏன்கினும் கோழையாய் ஏங்கியே சாவதோ
எண்ணிட வேண்டாமோ!
வானுயர் கொள்கையை தந்தவன் சீவியே
சிந்தையில் கொள்வீரே!

தத்துவம் பேசுவார்! தக்கதை செய்வார்
தக்க தலைவராமோ!
இத்தனைக் காலமும் எத்தனைத் துன்பமோ!
பேரிடர் பட்டதெல்லாம்
வைத்துக் கணக்கிட வாழ்வில் சுகமென
வாய்த்தது ஒன்றுமில்லை!
நித்தம் உழைப்பவருக்கான தலைமகன்
நாமினி காண்பதென்றோ!

வாழும் உயிர்கொரு கோழைக்குணமென்றால்
வாழ்வதில் அர்த்தமில்லை!
கூழைக் குடித்துடன் கந்தலை சுற்றியே
காலமும் ஓட்டுவதோ!
ஏழைக் குடிசையில் ஏந்தியத் தீபமாய்
ஏற்றவை சொல்லிவைத்தான்!
வேலுப்பிள்ளையொரு வேந்தனாய் நின்றிருந்
தானவன் தாள்பணிவோம்!

எங்கள் குலமாதா வேலுப்பிள்ளை யென்றொரு
வேந்தனைப் பெற்றடைந்தோம்!
சங்கம் முழங்கிடும்! அங்கம் குலுங்கிடும்
சான்றவன் பேர்கேட்டால்!
பங்கம் வருமெனின் பொங்கி எழுகென
போரிட வைத்தானே!
தங்கும் படிக்கொரு இச்சை வைத்துயிர்க்
காப்பதில் அர்த்தமென்ன!

நாமெலாம் ஓரினம்! நாமெலாம் ஓர்குலம்
மானிட சாதிகளே!
பூமியில் வாழ்வதும் பூதலம் ஆள்வதும்
பேகிழைப் பாளராமே!
அமெழு தோழனே! ஆர்ததெழு சிங்கமே
சீவியின் சிந்தனையில்!
பூமிக் குடையவர் பேருழைப் பாளராம்
போரிடு இக்கணமே!

☼

மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை பன்முக ஆளுமை

– டி. அய்யாத்துரை

விட்டக்கொடை மடக்கொம்புர தோட்டத்து பெரியக் கங்காணி கண்ணப்பன் வேலுசிங்கம் தெய்வானையம்மாள் தம்பதிகளுக்கு 1914ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதம் 14 ஆந் திகதி சி.வி. வேலுப்பிள்ளை பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை தலவாக்கலை சென். பெற்ரிக் கல்லூரியிலும், நுவரெலியா திருத்துவக் கல்லூரியிலும், பின்பு கொழும்பு நாலந்தா கல்லூரியிலும் கல்வி கற்று வெளியேறினார்.

கல்வி கற்கும் காலத்திலேயே கவிதை புனையும் ஆற்றலையும் பெற்றிருந்தார். அத்தோடு பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அடக்குமுறை, சுரண்டல், அறியாமை இருள் படர்ந்திருப்பதை அறிந்து மனதில் வேதனையடைந்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் அறியாமை என்ற இருள் அகலவேண்டுமானால் கல்வி அறிவு புகட்டுவதே பிரதான காரணியாகும். கல்வியறிவு மூலமாக அறியாமை இருளை அகற்ற அவர் மேற்கொண்ட செயலைக்கண்டு சிலர் ஆத்திரமடைந்தனர். தோட்டங்களுக்குள் சி. வி. வேலுப்பிள்ளையின் நடமாட்டத்தை தடுக்க பல யுக்திகளைக் கையாண்டனர். இதனை தொழிலாளர்கள், இளைஞர்கள் அறிந்து இவருக்கு வேண்டிய பாதுகாப்பையும் கொடுத்துவந்தார்கள்.

இதை அறிந்த தோட்டத் துரைமார்கள் இவரின் தந்தையிடம் மகன் தோட்டத்துக்குள் சென்று தொழிலாளர்களை சந்திப்பதை தடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எச்சரிக்கை செய்தனர்.

தந்தையார் மகன் சி. வி. வேலுப்பிள்ளையை அழைத்து இந்த வீடயத்தைக்கூறி தோட்டங்களுக்குள் செல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென கடிந்து கொண்டார். தந்தையின் உத்தரவை ஏற்காமல் தன் விருப்பப்படியே தோட்டங்களில் தின்னைப் பள்ளிகள் மூலம் கல்வியை வளர்க்க முற்பட்டதோடு பாரதி சங்கம் அமைத்து இளைஞர்களை அணித்திரட்டி பாரதி பாடல்களை மக்கள் மத்தியில் பரவிடச் செய்தார்.

இதனால், ஆத்திரமடைந்த தந்தை செலவுக்குப் பணம் கொடுப்பதை நிறுத்தினார். பூண்டுலோயா நகரில் தாகூர் வித்தியாலயத்தில் பணிப்புரிந்த ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் போனதால் நுவரெலியா திருத்துவக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியர் பணியை மேற்கொண்டு அதன்மூலம் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு சம்பளம் வழங்கினார்.

இலக்கியத்துறையில் ஆங்கிலத்தில் பத்மாஜினி என்ற நூலை எழுதினார். 1934 ஆம் ஆண்டு வங்கத்து கவிஞர் ரவீந்திரநாத்தாகூர் இலங்கை வந்தார். ஹொரணையில் ஸ்ரீபாளி என்ற பண்பாட்டு நிலையம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டினார்.

தாகூர் இலங்கையில் பல பாகங்களுக்கு சுற்று பிரயாணம் செய்து இலக்கிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இந்த சமயத்தில் எண்ணற்ற கவிஞர்களும் எழுத்தாளர்களும் அவரை சூழ்ந்துகொண்டு இலக்கியப் பணிபற்றி அறிந்துக் கொண்டனர்.

இந்த சமயத்தில் மலையகத்தில் இருபது வயது நிரம்பிய இளம் கவிஞர் சி.வி வேலுப்பிள்ளை அவர் எழுதிய பத்மாஜினி என்ற ஆங்கில நாடக நூலை தாகூர் அவர்களிடம் கொடுத்து அதைப் பார்க்கும்படி கூறினார். அதைப்பார்த்தபோது தாகூர் நடையில் அமைந்திருப்பதை அறிந்து மகிழ்ந்து சி.வி. வேலுப்பிள்ளைக்கு ஆசீர்வாதம் வழங்கினார்.

1930 களில் மலையகத்தில் பிறந்த ஒருவர் ஆங்கிலத்தில் கவிதை எழுது கின்றாரென்றால் அது வியக்கத்தக்க சாதனையாகும். இலங்கையில் புதிய இலக்கியம் அரும்பிக் கொண்டிருந்தக் காலக்கட்டத்தில் மலையக இலக்கியம் மணம் வீசியதென்றால் நமது கவிஞர் எத்தகைய சாதனை புரிந்துள்ளார் என்பதை இன்றைய இலக்கிய பரம்பரையினர் உணர்ந்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களின் நலன், பாதுகாப்புக்கருதி 1939 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை இந்தியன் காங்கிரசில் இணைந்து அதன் இணைச் செயலாளர்களில் ஒருவராக செயற்பட்டார். தலவாக்கொல்லை பிரதேசத்தில் காங்கிரசின் ஏசெண்டாக பணியாற்றி ஒரே ஆண்டில் ஐம்பதாயிரம் உறுப்பினர்களை சேர்த்தப் பெருமை இவரையே சாரும்.

மலையக காந்தி கே. இராசலிங்கம் அவர்களின் தூண்டுதலால் தொழிற்சங்கப் பணியில் தீவிரமாக ஈடுப்பட்டார். அந்தக் காலத்தில் மலைநாட்டில் தொழிற்சங்கம்



நடத்துவது சூறாவளியோடு மோதுவதற்கு ஒப்பானது. சிங்கள இனவாதம், வெள்ளைத்துரைமார்களின் ஆணவம், அரசாங்கத்தின் அலட்சியப் போக்கு ஆகிய அனைத்து சக்திகளுக்கும் ஈடுகொடுத்து தொழிற்சங்கம் அமைத்து தொழிலாளர்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். தீர்க்க முடியாவிட்டால் போராட்டம் நடத்த தயாராக வேண்டும்.

1946 ஆம் ஆண்டு யட்டியந்தோட்டை உருளவள்ளி தோட்டக்காணியை அரசாங்கம் கிராம விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் சுவீகரித்து அங்கு வாழ்ந்த தொழிலாளர்களை வெளியேற்ற எடுத்த முயற்சியை எதிர்த்து கே. ஜீ. எஸ். நாயர் தலைமையில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தார்கள். இந்த போராட்டத்திற்கு ஆதரவாக அட்டன் மாநிலத்தைச் சேர்ந்த எண்பதாயிரம் தொழிலாளர்களை வேலை நிறுத்தப் போராட்டத்தில் சி. வி. வேலுப்பிள்ளை இறக்கினார். அத்தகைய போராட்டக் குணமுள்ள வீரராக மக்களால் மதிக்கப்பட்டார்.

சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் இளமை துடிப்பும், செக்கச் சிவந்த மேனி, ஆறடி உயரம், கம்பீரமான நிமிர்ந்த நடை, அழகிய தோற்றத்திற்கேற்ப புன்னகைப் பூத்த முகம், பார்ப்பவரை சுண்டி இழுக்கும் காந்தப் பார்வை, இந்தியப் பாணியில் சர்வானி உடையணிந்து தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பவனி வந்தார்.

1947 ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸ் வேட்பாளராக தலவாக்கொல்லை தொகுதியில் போட்டியிட்டார். சி. வி. வேலுப்பிள்ளை தொழிற்சங்கப் பணியின் மூலமாக தோட்டத்துரைமார்களின் சிம்ம சொப்பனமாக விளங்கினார். இதனால் இந்த தேர்தலில் சி. வி. வேலுப்பிள்ளைக்கு எதிராக துரைமார்கள் செயற்பட்டார்கள்.

தலவாக்கலை நகரில் தேர்தல் பிரச்சாரத்திற்காக அமைக்கப்பட்ட மேடை இரவோடிரவாக சிங்கள காடையர்களைத் தூண்டி உடைக்கப்பட்டது. தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுப்பட்டிருந்த சி. வி. வேலுப்பிள்ளை தகவல் அறிந்து அக்கரைப்பத் தனையில் இருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் புடைசூழ ஊர்வலமாக வந்து மேடை உடைக்கப்பட்ட இடத்தில் தனது வாகனத்தை நிறுத்தி அதன்மேல் ஏறி நின்று பிரச்சாரம் செய்து வெற்றிப் பெற்று பாராளுமன்றம் சென்றார்.

இலங்கைக்கு 1948 ஆம் ஆண்டு பெப்பிரவரி 4 ஆம் திகதி சுதந்திரம் கிடைத்தது. இந்த முதலாவது சுதந்திர பாராளுமன்றத்தில் அன்றைய பிரதமர் டி. எஸ். சேனா நாயக்கா அவர்கள் இலங்கையில் வாழும் பத்து இலட்சம் மக்களின் குடியுரிமையை பறிப்பதற்கு பிரஜாவுரிமை சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து 1948 – 18 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி குடியுரிமை பறிக்கப்பட்டு நாடற்ற மக்களாக்கினார்.

1952 ஆம் ஆண்டு தேர்தல் இடாப்பில் இந்திய வம்சாவளி மக்களின் பெயர்களை முற்றாக அகற்றி வாக்குரிமையை பறித்தார்கள். இதனை ஆட்சேபித்து சத்தியாகிரகப் போராட்டம் நூற்றி எட்டு நாள் நடத்தப்பட்டது. இந்த போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர்களும், காங்கிரஸ் தொண்டர்களும் நூற்றுக்கணக்கில் கலந்து கொண்டார் கள். இந்தப் போராட்டத்தின் மூலம் எந்த நன்மையும் ஏற்படவில்லை.

1954 ஆம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் தலைமைப் பதவி போராட்டத்தில் சிக்கி இரண்டாகப் பிரிந்தது. தொண்டமான் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனாப் ஏ. அசீஸ் தலைமையில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்று உதயமானது.

சி.வி வேலுப்பிள்ளை ஜனநாயக தொழிலாளர் காங்கிரசில் இணைந்து பணியாற்றினார். தோட்டத் துரைமார்கள் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸை அங்கீகரிக்க மறுத்தார்கள். இதன் எதிரொலியாக அக்கரைப்பத்தனை டயகம தோட்டத்தில் சி.வி வேலுப்பிள்ளை தலைமையில் சங்கத்தை அங்கீகரிக்கக் கோரி வேலை நிறுத்தப் போராட்டம் நடைப்பெற்றது. முப்பெத்தெட்டு நாட்கள் போராட்டம் நடத்தியும் அக்கரைப்பத்தனை மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

தோட்ட நிருவாகம் வேலை நிறுத்தப் போராட்டத்தை சிதைக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தனர். இறுதியாக பொலிசார்களைக் கொண்டு அச்சுறுத்தப் பட்டார்கள். இந்தப் போராட்டத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏப்ரகாம் சிங்கோ என்ற இளைஞர் மரணமடைந்தார்.

இந்தப் போராட்டத்தின் பயனாக அரசாங்கம் தொழிற்சங்க சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து ஏழுபேர் சேர்ந்து தொழிற்சங்கம் அமைக்கும்படியும் பதிவு செய்யப்பட்ட எல்லாத் தொழிற்சங்கங்களையும் அங்கீகரிக்க வேண்டும் என்று பிரகடனப் படுத்தப்பட்டது.

1960 ஆம் ஆண்டு ஜனநாயக தொழிலாளர் காங்கிரசில் இருந்து வெளியேறி முழுநேர இலக்கியம் படைப்பதில் தீவிரமாக ஈடுப்பட்டார். இலங்கையின் தேசிய பத்திரிக்கையான சன்டே ஒப்சேவர் ஆங்கில பத்திரிக்கையிலும், தினகரன் தமிழ் பத்திரிக்கையிலும், மலையக தமிழ் மக்கள் பற்றிய கட்டுரைகள் எழுதினார். மலையக தலைவர்களைப் பற்றிய விமர்சனங்களையும் எழுதிவந்தார்.

சி.வி. யின் இலக்கியப் பணிக்கு ஆங்கிலத்தில் எழுதப்பட்ட In Ceylon Tea Garden என்ற கவிதை நூல் தமிழில் தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதை நூல் இவருடைய இலக்கியப் படைப்புக்கு உலகலாவிய பாராட்டுக்கள் கிடைத்தன. இதனைத் தொடர்ந்து எழுதப்பட்ட Born to Labour (உழைக்கப்பிறந்தவர்கள்) நூல் மலையக தமிழ் மக்களின் கலை கலாசாரம், பண்பாடுகள், நாகரீகம், பழக்க வழக்கங்கள், தனித்தன்மை பெற்றது என்பதற்காக எழுதிய நூலாகும். இந்த நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதால் இலக்கியப் பணிக்கு மகுடமாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து தமிழில் எல்லைப்புறம், பார்வதி, வீடற்றவன், இனிப்பட மாட்டேன் என்ற நாவல்கள் இவரால் எழுதப்பட்டவையாகும். சி. வி. வேலுப்பிள்ளை இலக்கியம், அரசியல், தொழிற்சங்கம், சமூகவியல் என்று பன்முக ஆளுமை கொண்ட மனிதராக திகழ்ந்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசில் இருந்து 1964 ஆம் ஆண்டு வெளியேறிய வீ.கே. வெள்ளையன் தொழிலாளர்களின் வற்புறுத்தலின் பேரில் தொழிற்சங்கத்துக்கு

தொழிலாளிதான் தலைவர் என்ற கொள்கையை முன்வைத்து 1965 ஆம் ஆண்டு மே மாதம் முதலாந்திகதி தொழிலாளர் தேசிய சங்கத்தை ஸ்தாபித்து மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சமூக, பொருளாதார அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதை இலட்சியப் பணியாக பிரகடனப்படுத்தினார்.

1966 ஆம் ஆண்டு சி.வி. வேலுப்பிள்ளை தொழிலாளர் தேசிய சங்கத்தில் இணைந்து பொதுச்செயலாளர், பிரதித் தலைவர் என்ற தகைமையோடு வீ.கே. வெள்ளையன் கொள்கையை முன்னெடுப்பதிலும், தொழிலாளர் தேசிய சங்கத்தை வளர்ப்பதில் புதிய உந்து சக்தியாகச் செயல்பட்டார்.

இந்தக் காலத்தில் கம்பளை, புசத்தன்ன தோட்டத் தொழிலாளியான டி. ஐயாத்துரை சங்கத்தில் இணைந்து கலகா மாவட்டத்தில் சங்கத்தின் வளர்ச்சிக்கு பணியாற்றினார். 1967 ஆம் ஆண்டு கலகா மாவட்டத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் அதே ஆண்டில் நடைப்பெற்ற வருடாந்த பேராளர் மாநாட்டில் உதவிச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1970 ஆம் ஆண்டு நடைப்பெற்ற பேராளர் மாநாட்டில் சி.வி. வேலுப்பிள்ளை, வீ.கே. வெள்ளையன் ஆகியோரின் ஆலோசனைக்கமைய இளைஞர் ஒருவரை தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு ஐயாத்துரையினை சிபாரிசு செய்தார்கள். அதை பீ. பெருமாள் முன்மொழிய டிக்கோயா மாவட்டத்தை சேர்ந்த டி.குரூஸ் வழிமொழிந்து சபை அங்கீகரித்தது.

அதே ஆண்டில் மாத்தளை கருங்காலி தோட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் அங்கத்தவர்கள் நடத்திய போராட்டத்தில் முதலாளிமார்களின் தூப்பாக்கிச் சூட்டுக்கு நான்குபேர் பலியானார்கள். 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆந் திகதி தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஸ்தாபகரும் சமூக, கலை கலாசார அரசியல் செயலாளருமான வீ.கே. வெள்ளையன் அவர்களின் மறைவையொட்டி சங்கத்தை தளர்வில்லாமல் வழிநடத்தும் பணியில் சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் உத்தியோகத்தர்களை அழைத்து சங்கத்தை புதிய உத்வேகத்தோடு நடத்த பல ஆக்கப்பூர்வமான திட்டங்களை கொண்டுவந்தார்.

உடனடியாக அட்டனில் இயங்கிய தலைமைச் செயலகத்தை கொழும்புக்கு மாற்றுவதென்றும், தலைவரை முழுநேரமாக மத்திய காரியாலயத்தில் பணிபுரிவதற்கும், சங்க உத்தியோகத்தர்கள் முழுநேரமாக பணியாற்றக்கூடிய தேவைகளை செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் நிர்வாக செயலாளராக நியமிக்கப்பட்டார்.

கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களை சந்திப்பதற்கு இலக்கிய நண்பர்கள், அரசியல் நண்பர்கள், தொழிற்சங்க நண்பர்கள் வருவார்கள். அவர்களை இன்முகத்துடன் வரவேற்று மக்கள் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடி அதற்கான நடவடிக்கைகளை கூட்டாக சேர்ந்து எடுப்பதில் அக்கரை காட்டினார். சி.வி. வேலுப்பிள்ளை எப்போதுமே மலையக மக்கள் விடயங்களை கூட்டாக நடவடிக்கை எடுப்பதையே விரும்பினார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மலையகத் தமிழர்களின் வரலாற்றை அறிந்து கொள்வதற்காக திங்கட்கிழமை நாட்களில் சந்திக்க வருவார்கள். அவர்களுக்காக முழு நாளையும் ஒதுக்கி தேவையான விபரங்களை வழங்குவார் அப்படியான நேரங்களில் மாணவர்களுக்கு மலையக மக்கள் தொடர்பான கதைகளைக் கூறி மகிழ்ச்சியடையச் செய்வார். இதற்கிடையே மாணவர்களுக்கு தேநீர் வழங்கியும் உற்சாகப்படுத்துவார். மாணவர்கள் அவரிடத்தில் விடைப்பெற்றுச் செல்லும்போது ஒரு பல்கலைக்கழக பேராசிரியரை சந்தித்து உறவாடிய மகிழ்ச்சியோடு செல்வார்கள்.

தலைமைக் காரியாலயத்திற்கு தோட்டங்களிலிருந்து பிரச்சினைகள் தொடர்பாக சந்திக்கவரும் தொழிலாளர்களை புன்னகையோடு வரவேற்று அமர செய்து வந்த விடயங்களை அமைதியாக செவிமடுத்து காலத்தை கடத்தாமல் முன்னுரிமைக் கொடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொலைபேசியில் தொடர்புக்கொண்டு வந்தவர்களை சிரமப்படுத்தாமல் அவர்கள் வீடயமாக தீர்வை பெற்றுக்கொடுப்பார். அந்தளவு சி.வி. என்ற இரண்டெழுத்துக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தது.

1972 அரசாங்கம் ஆம் ஆண்டு காணி உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டுவந்து கண்டி மாவட்டத்தில் தமிழர்களுக்கு சொந்தமான தோட்டங்களில் ஐம்பதாயிரம் ஏக்கரை சுவீகரித்து அத்தோட்டங்களில் வாழ்ந்த தோட்ட சேவையாளர்களை குடும்பத்தோடு வெளியேற்றினார்கள். அதே அடிப்படையில் தொழிலாளர் குடும்பங்களையும் வெளியேற்றினார்கள். திக்கு திசை தெரியாமல் தொழிலாளர்கள் நடு ரோட்டுக்கு தள்ளப்பட்டார்கள். அந்த மக்கள் நிலையறிந்து சி.வி.வேலுப்பிள்ளை ஆத்திரமும், கவலையும் கொண்டு சகல தொழிற்சங்கங்களையும் அவசரமாக கொள்ளுப்பிட்டியிலுள்ள தேயிலை சபை மண்டபத்தில் கூட்டத்தைக் கூட்டி கண்டியில் மக்களுக்கு நடந்த இந்த அநீதிக்கு எதிராக நடவடிக்கையை கூட்டாக எடுத்து தொழிலாளர்களை மீண்டும் தோட்டத்துக்குள் குடியேற்ற நடவடிக்கை எடுத்தார்.



1972 ஆம் ஆண்டுக்குப்பின் மலையக தொழிலாளர் தொடர்பான போராட்டங்களை சி. வி. வேலுப்பிள்ளை தன்னுடைய பங்களிப்பை வழங்கியதோடு பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியை உருவாக்கி ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தொழிற் சங்கத் தலைவரை தலைமை தாங்குவதற்கு வழியேற்படுத்தினார். அன்று முதல் மலையகம் சம்பந்தமான பிரச்சினைகள் உட்பட சம்பளம், தொழில் பாதுகாப்பு, மாத சம்பள போராட்டம், ஆண், பெண் சம சம்பள போராட்டம் ஆகியவற்றை கூட்டுக்க மிட்டி தொடர்ந்து முன்னெடுத்தது. எல்லா நடவடிக்கைகளிலும் சி. வி. வேலுப்பிள்ளையின் பங்களிப்பு பிரதானமாக இருந்தது.

1975 ஆம் ஆண்டு தோட்டப்பாடசாலைகளை அரசாங்க பாடசாலைகளாக மாற்றுவதற்கும், மலையக ஆசிரியர்களில் தகுதி அடிப்படையில் அதிபர்களாக நியமிப்பதற்கும், தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமிக்கும்படியும், தோட்டக் தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி நடவடிக்கை எடுக்கும்போது சி. வி. வேலுப்பிள்ளையின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது.

1983 ஆம் ஆண்டு நாடுதழுவிய அளவில் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட இனவன்செயல் மக்களை நிலைகுலையச் செய்தது. கிராமங்கள், நகரங்களில் சிங்கள மக்களோடு கலந்து குடியிருந்த தமிழர்களை இனங்கண்டு இனவெறியர்களால் தாக்கப்பட்டார்கள். இந்த சம்பவத்தில் சி. வி. வேலுப்பிள்ளை மிக மோசமாக பாதிக்கப்பட்டார். அவரின் உயிரை பாதுகாக்க குடும்பத்தினர் தங்கள் தோட்டத்தில் மலசலக்கூடம் அமைப்பதற்கென்று பதினைந்தடி ஆழமுள்ள குழி வெட்டப்பட்டிருந்தது. இந்த குழியில் சி. வி. வேலுப்பிள்ளையை குடும்பத்தினர் ஏணி மூலமாக இறக்கி இருபதுநாள் தொடரந்து பாதுகாத்து வந்தார்கள்.

இந்த நிகழ்வால் மனதால் பெரிதும் பாதிப்படைந்துவிட்டார். அதே நேரத்தில்



நாட்டில் சிங்கள தமிழர் உறவை பலப்படுத்துவதற்காக சேவையாற்றியவர். இலக்கியம் படைத்தவர். சிங்கள, தமிழ் இலக்கியவாதிகளை ஒன்றிணைத்து அடிக்கடி நாட்டில் சமாதானம், சகவாழ்வு ஏற்படவேண்டும். மக்கள் சகோதரர்களாக வாழவேண்டும் என்பதை இலக்கிய கூட்டங்கள் மூலமாகவும், ஏனைய நடவடிக்கை மூலமாகவும் வலியுறுத்தி வந்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு நாட்டில் நடந்த இன வன்செயல் நடவடிக்கை இவரை பெரிதும் பாதிப்படையச் செய்தது. இந்த துயரத்தில் இருந்து மீளமுடியாத மன உளைச்சலுக்கு ஆனார். அந்த நிகழ்வே அவரை நோயாளி ஆக்கியது. அதனால் பாதிப்படைந்து 1984 அக்டோபர் மாதம் கொள்ளுப்பிட்டியிலுள்ள பிரசித்தி பெற்ற டேடன் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதற்கான மருத்துவ செலவுகளை சங்கம் பொறுப்பெடுத்தது.

மருத்துவர்கள் தொடர்ந்து அவரை பாதுகாப்பதற்காக பல மருத்துவ உத்திகளை கையாண்டார்கள். ஒவ்வொரு நாளும் இலக்கியவாதிகள், அரசியல்வாதிகள், தொழிற் சங்கவாதிகள், நண்பர்கள் மருத்துவமனைக்கு வந்து ஆறுதல் கூறினார்கள். அதை விட மேலாக அவருக்கு கிராமிய பாடல்கள், பட்டிணத்தடிகளார் பாடல்கள், சித்தர் பாடல்கள் கேட்கவேண்டுமென்ற அவருடைய வேண்டுகோளை தலைவர் டி. ஐயாத்துரை, பொதுச்செயலாளர் பி. வி. கந்தையா இருவரும் மாலைநேரங்களில் பாடி அவரின் ஆவலைப் பூர்த்தி செய்தார்கள்.

நவம்பர் மாதம் முதல் வாரத்தில் மருத்துவமனையில் இருந்து தனது சொந்த இடமாக தலங்கமைக்குச் சென்றார். தொடர்ந்தும் ஒவ்வொருநாளும் டாக்டர்களால் மருத்துவம் செய்யப்பட்டது. இருந்தப்போதும் அவரின் உயிரை பாதுகாக்க முடியாமல் போய்விட்டது. நவம்பர் மாதம் 19 ஆந் திகதி இம்மண்ணுலகைவிட்டு அவர் உயிர் பிரிந்தது. அந்த செய்தி மலையக தொழிலாளர்களையும், இலக்கியவாதிகளையும், அரசியல்வாதிகளையும், நண்பர்களையும் அதிர்ச்சியடை[illegible] செய்தது.

இவருடைய இறுதிக்கிரியையில் நாட்டில் அமுலில் இருந்த நாற்பத்தெட்டு மணிநேர ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக மக்கள் கலந்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இருந்தும் குறிப்பிட்ட பிரமுகர்கள் கலந்துக் கொண்டார்கள். சங்கத்தின் நிர்வாக சபை உத்தியோகத்தர்கள், குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். இறுதிக்கிரிகைகளுக்கான பணிகள் இலக்கிய நண்பர் அந்தனி ஜீவா அவர்களின் குழுவினரால் திறன்பட மேற்கொண்டு ஊடகங்கள் மூலமாகவும் அறியத்தருவதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்கள்.

மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை அவருடைய உயிர் உடலைவிட்டு பிரிந்த போதும் அவர் மக்களுக்கு ஆற்றிய சேவையும், அவர் படைத்த இலக்கியங்களும், மலையக இளம் இலக்கியவாதிகளுக்கும், மக்களுக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. அவருடைய நாமம் இலக்கிய உலகத்தில் மறக்க முடியாத இடத்தை பிடித்துள்ளது.

வாழ்க அவரின் நாமம்.

☼

சி. வி. க்கு கௌரவ "கலாநிதி" பட்டம்

- "தமிழ்மணி" தங்கம் -

வெள்ளைத் துரைமார் வைத்ததே சட்டம்
வேதனைத் தீயில் குயின்றதே சுற்றம்!
கொள்ளை இலாபம் குவித்தவர் செல்கையில்
கோவணத் துணியின் கோலமாய் எம்மினம்!
கள்ளம் கபடிலா கடின உழைப்பினைக்
காட்டினர் எம்மவர் களித்தனர் வெள்ளையர்!
உள்ளம் கழன்றது: உண்மை வெருண்டது
உத்தமத் தொழிலர் சித்தம் கலங்கினர்!

***** ***** ****** *****

தோட்டத்தி னுள்ளே தொழிற்சங்க மெதுவும்
சேவை எதனையும் செய்ய முடியாது:
வாட்டம் நிறைந்த உழைப்போர் மத்தியில்
வந்து பேசவும் வாய்ப்பில் லாமல்
நோட்டம் கொண்டு நுழைய விடாமல்
நொந்தவர் வாழ்வைச் செழிக்க விடாமல்
"கோட்டை" எனவே தோட்டம் திகழ
கொலு வீற்றிருந்தார் ஆங்கிலத் துரைமார்!

***** ***** ***** *****



மலையக மக்கள் படுந்துயர் கண்டு
மனதில் பொறுக்க முடியா தலைவன்
விலைமதிப் பில்லா வேங்கை மைந்தன்
"வேலுப்பிள்ளை" என்னும் "கவிஞன்"
அலைபுரண் டோடும் அற்புதக் கவியால்
அவர்தம் வாழ்க்கை அவலம் அனைத்தும்
தலைமுதல் கால்வரை ஆங்கில மொழியில்
தந்தவன் பெருமை தாரணி அறியும்!

**** **** **** ****

இந்திய நாட்டில் சுதந்திரத் தொழிலராய்
இருந்த மக்களின் வறுமையைக் காட்டி
அந்நிய நாட்டில் அடிமைகள் என்னவே
அழைத்து வந்தனர் ஆங்கிலக் கூலிகள்!
எண்ணிலா திறமும் எழிற்கலை கூத்தும்
இருப்பெனக் கொண்ட எம்மவர் வந்தார்:
புண்ணிய நாட்டின் தேயிலைக் காட்டில்
பாம்பு, அட்டை பயத்தினில் வாழ்ந்தார்!

**** **** **** ****

இத்தகு செயல்கள் மாத்திர மன்றி
இனத்தைச் சுரண்டி எள்ளி நகைத்து
வித்தகர் போல கண்கா ணிமார்கள்
வேலை வாங்கி விரட்டியும் மிரட்டியும்
சொத்துக்கள் சேர்த்து சுகபோ கத்தில்
சொர்க்கம் காண, சோர்ந்த உழைப்போர்
கொத்தெனும் அடிமைச் சகதியில் புரள,
கொடுங்கோல் மன்னராய் திகழ்ந்தனர் துரைமார்!

**** **** **** ****

நெஞ்சம் துடித்தது: நேர்மை மதித்தது:
நேர்த்தியாய் கவிதைச் சாரத்தை எடுத்து
கொஞ்சும் ஆங்கில மொழியினில் தொடுத்து
குவலயத் துள்ளோர் தெரிந்து கொள்ளவே
"மிஞ்சும் துயரினில் மிதக்கும் மக்களை"

மீட்டெ டுத்து மேன்மை காணவும்
ஆஞ்சும் நிலையினை அகற்றி வாழவும்
அறிஞன் "வேலுப்பிள்ளை" தோன்றி,

**** **** **** ****

வடித்த கவிதைகள் வரைந்த கதைகள்
வறியவர் துயரை வார்த்திடும் வல்லமை
படித்த "மலையகக் கலையி லக்கிய
பேரவை" செயலர் அந்தனி ஜீவா
தூடித்த உணர்வுடன் "தூயநல் சிவிக்கு"
தூலங்கிய "மக்கள் கவிமணி" விருது
கொடுத்த நிகழ்வைக் குறித்தே, அவரைக்
கோதற வாழ்த்தி கௌரவப் படுத்தும்,

**** **** **** ****

இந்தநன் நாளில் இதயம் மகிழ்தே
என்கவி வாழ்த்தை ஈந்தேன் நானும்!
பைந்தமிழ் கவிஞன் பாடிடும் வாணன்
பாங்குற மொழியும் பண்புடை அண்ணல்
சிந்தையில் களங்கம் சிறிதும் இல்லா
"சிவி" எனும் சீர்மிகு சிற்பி தனக்கு
நந்தமிழ் "கலாநிதி" கௌரவப் பட்டம்
நமது நாட்டில் தந்திட வேண்டும்!

**** **** ****

மக்கள் கவிமணி மாண்புறு "கலாநிதி"
மகத்துவப் பட்டம் மலையக மைந்தன்
திக்குகள் புகழ, தேசறப் பெற்று
தீஞ்சுவைக் கவிதை தினம்தினம் படைத்து
சிக்கலில் தவித்து சீரழி வோருக்கு
சிறந்ததோர் விடிவு சீக்கிரம் தோன்ற,
தக்கநல் பணியை எழுத்தின் துணையால்
தந்திட வேண்டி வாழ்த்தினேன் தங்கம்!

☼

மலையகம் மறக்காத மக்கள் கவிஞன்

– கிங்ஸ்லி கோமஸ்

100 வருடம் அவன் பற்றிய ஞாபகங்கள் இன்றும் உயிரோட்டமாக இருப்பதற்கு அவன் பதிந்த மக்கள் அவலங்கள் ஆவணமாக்கப்பட்டுள்ளதே காரணமாகும். பலர் மக்கள் சேவை என்று வாக்கு கேட்டு தங்களின் வாரிசுகள் அரசியலில் இல்லாது போனால் மக்களால் நினைத்துக்கூட பார்க்க முடியாது.

மலையக மக்களின் இருப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது என்பது பலராலும் அடையாளம் காட்டப்பட்டு இறுக்கின்றது. இந்த கனிணி யுகத்திலும் இலங்கையின் மலையக மக்கள் என்போர் மலைவாழ் சாதியினரா என்று அயல் நாடான இந்தியா வீலேயே கேட்பதாக பலரும் கவலைப்படுகின்றனர். இதுவரையிலும் இந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவோர் என்று கூறிக்கொண்டு வெளிநாடுகளுக்கு பயணம் செய்தவர்களைப்பார்த்து பல்லாயிரம் கேள்விகளைக் கேட்கவேண்டியவர்களாக நாமும் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

இவர்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது 1956 ஆம் ஆண்டிலே ஆங்கில மொழியிலே மலையக மக்களின் அடையாளங்களை உலகிற்கு எடுத்தியம்புவதற்காய் In Ceylon Tea garden என்னும் புத்தகத்தை படைத்துள்ளார் என்றால் மிகையாகாது.

ரஷ்ய கவிஞனும் போராளியுமான மாயாகோவ்ஸ்கி "I see finished literary work as a weapon" நான் எனது இலக்கியங்களை படைத்ததன் பின் அவற்றை ஆயுதங்களாகவே நோக்குகின்றேன் என்கின்றார். ஏனெனில் அவரின் செயற்பாடுகள் அனைத்துமே வர்க்க கட்டமைப்பினை தகர்த்துவதற்கான ஆயுதங்களாகவே காணப்படுகின்றன. மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகளும் மக்கள் வாழ்வியலை மாற்றுவதற்கான ஆயுதங்களாகவே காணப்படுகின்றன. பூக்குமேயந்த – புண்ணிய நாள்தனில் - ஆக்கம் புரிந்தவர் - அமைதி இழந்தவர் - மூச்சீலே சுதந்திரத் திருகலந்திடுமே மூச்சீலே விடுதலைச் சுகம் மலர்ந்திடுமே என்னும் வரிகள் மலையக தோட்டத் தொழிலாளர் தம் துயரங்களுக்கு முடிவு வெகு தொலைவில் இல்லை என்று கூறுவதாகவே உள்ளது.

கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளை எனும் இயற்பெயர் கொண்ட இவர் வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தில் பிறந்து மலையக மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்தார் என்றால் அது மிகையாகாது. ஆழப்புதைந்த தேயிலைச் செடியின் அடியிற்புதிந்த அப்பனின் சிதைமேல் ஏழைமகனும் ஏறிமிதித்து ஈங்கவர் வாழவே தன்னுயிர் தருவன் எனும் கவிவரிகளை படிக்கும்போது மனித நேயம் கொண்ட எவருக்கும் மேனி சிலிர்க்காதிருக்காது.

இந்த கவிதையினை ஆங்கிலத்தில் சி.வி. எழுதியது மலைவாழ் மக்கள்படும் துன்பங்களை, எம்மை அடிமைப்படுத்தி கொண்டு வந்த ஆங்கிலேயர்கள் மாத்திரம் அன்றி எம்மால் நன்மையடைந்து கொண்டு பிழைக்க வந்த கூலிகள் என்று சிறுமையோடு நோக்குபவர்களுக்கும் உழைப்பின் பெறுமதியை உணர்த்த வேண்டும் என்பதற்காகவேயாகும்.

சி.வி. யின் படைப்புகளை நோக்கும்போது இவர் புகழுக்காகவும் விருதுகளுக்காக வும் பட்டங்களுக்காகவும் பதவிகளுக்காகவும் இலக்கியம் படைக்கவில்லை. மக்களின் மேல் உள்ள ஆதகங்களை இலக்கியம் எனும் வாகனத்திலேற்றி உலகிற்கு அடையாளப் படுத்தியவராவார்.

வியர்வை வடித்து
கூலியாய் உழைத்து
வெறுமையுள் நலிந்து
வீழுவது எல்லாம்
துயரக்கதையினும்
துன்பக்கதை. அதைக்
தொனிக்குதேபேரிகைத் (தப்பொலி)
குடி ஒலிக்குமுறல்

என்ற வரிகளின் மூலமாக அன்றைய மலையக மக்களின் வாழ்க்கை நிலையினை மனதுக்குள் பார்க்கக் கூடியதான அனுபவத்தினை காட்டி நிற்பதாக அமைகின்றது.

இலக்கியங்கள் தோன்றுவதற்கு சி.வி. வாழ்ந்த காலத்தின் அரசியல் நெருக்கடி களும், அந்நெருக்கடிகளின் காரணத்தால் அவர்கள் முகம் கொடுத்த கொடுமை களையுமே தனது படைப்புகளின் அடிநாதமாக கொண்டு படைக்கப்பட்டிருப்பதனை காணலாம்.

மக்கள் போராட்டங்களை தலைமைதாங்கி நடத்துவதிலும் இதன்பயனாக அரசயந்திரம் கட்டவிழ்த்துவிடும் கொடுமைகளுக்கும் முகம் கொடுத்த சி.வி 1949 ஆம் ஆண்டு நடைப்பெற்ற மலையக தமிழ் மக்களுக்கு எதிரான பிரஜா உரிமை சட்டத்தினை எதிர்த்து 1952 ஆம் ஆண்டு நடைப்பெற்ற சத்தியாகிரக போராட்டத்தினை தலைமை தாங்கி நடத்திய முக்கிய தலைவர்களில் ஒருவராக அடையாளப் படுத்தப்படுகின்றார்.

மக்கள் பங்கெடுக்கும் போராட்டங்களின் போது இன்றைய படைப்பாளிகள் (மலையக) வெறும் பார்வையாளர்களாகவும் கொச்சைத்தனமான விமர்சனங்களை முன் வைப்பவர்களாவும் மாத்திரமே தங்களின் பங்களிப்பினை செய்துள்ளனர் என்பது பட்டறிவு. பிரஜா உரிமை சட்டத்தின் விளைவாக மலையக மக்கள் அடைந்த சொல்லொனா துயரங்களை உலகிற்கு காட்டிய, காட்டும் கண்ணாடியாக தேயிலைத் தோட்டத்திலே நூலின் கவிதைகள் அமைந்திருக்கின்றன. இந்த கவிதைகள் மக்களின் உயிர் மூச்சாக மக்களின் வேதனைகளை அனைவரையும் உணரச் செய்யும் மக்கள்

கலைப்படைப்பாகவும் ஏங்கும் மக்களின் இதய ஒலியாகவும் காணப்பட்டதென்றால் மிகையாகாது.

புழுதிப்படுக்கையில் புதைந்த என் மக்களை போற்றும் இரங்கற் புகழ்மொழி இல்லை. புரிந்தவர் நினைவுநாள் பகருவர் இல்லை. எனும் வரிகளின் மூலம் உழைப்பு உறிஞ்சப்பட்ட பின் சக்கையாக ஏறியப்பட்ட மலையக தொழிலாளர்களின் ஏக்கங்கள் அடையாளப்படுத்தப்படுகின்றது.

1883 – 1930 காலங்களின் புரட்சிக்கவிஞன் மாயாகோவ்ஸ்கியின் "call to account" என்னும் கவிதையின்

The drum of war thunders and thunders.

It calls: thrust iron in to the living.

From every country

Slave after slave

என்னும் கவிதை வரிகளை ஞாபகம் ஊட்டும் வகையில் சிவியின் பின்வரும் வரிகளும் காணப்படுகின்றன. and so the tom – toms throb – that for hundred years – in fetterd darkness held... தப்பொலி கொட்டட்டும் தப்பொலி கொட்டட்டும் நூற்றாண்டு காலமாய் நுழைந்த இவ்விருட்டை வேரோடழிக்க என்னும் வரிகள் ஞாபகமூட்டி நிற்கின்றன. தன்னை மக்கள் இலக்கியவாதியாய் அடையாளப்படுத்திய சி.வி மக்களுக்காக மக்களுடன் மக்களின் தேவையறிந்து வாழ்ந்தவர் எனும் பெருமையினை அடைகின்றார்.

வேலுப்பிள்ளையின் படைப்புகளை வெறுமனே இலக்கியங்களாக மட்டும் நோக்காது அவற்றில் பொதிந்திருக்கும் வர்க்க விடுதலைக்கான வேட்கையானது நிச்சயம் அவதானிக்க வேண்டிய விடயமாகும். I SING OF LANKAS MEN / BORN OF THE PADDY FIELD / THE PATANAS / THE TEA AND RUBBER LAND / YES THE MEN I LOVE என்ற வரிகளை நோக்கும்போது சிவி மலைகய மக்களுக்கான இலக்கியங்களை மாத்திரம் படைக்கவில்லை. அனைத்து உழைக்கும் மக்களுக்காகவும் குரல் கொடுத்தவர் என்ற பெயரையும் பெறுகின்றார்.

திரு. சக்தீபாலையா மற்றும் மலையான் ஆகியோர் சி.வி. யின் கவிதைகளை தமிழாக்கம் செய்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இந்த முயற்சியில் இதற்கு முன்னும் தற்பொழுதும் பலர் ஈடுபட்டு வருவது சி.வியின் இலக்கிய ஆளுமையினை புதிய தலைமுறையினருக்கு அனுபவிக்க சந்தர்ப்பத்தினை வழங்குவதாக காணப்படுகின்றது. இவை மக்கள் இலக்கியங்கள் மாண்புடையவை என்பதற்கு அடையாளமாகவும் காணப்படுகின்றது. சி.வியின் ஆங்கில மொழி மூலமான கவிதைகளில் காணப்படும் இதயத்தினை வலிக்கச்செய்யும் உணர்ச்சியினை வழங்கக்கூடியதான எளிமையான மொழிப்பெயர்ப்புகள் மிக நிதானமாக செய்யப்பட வேண்டும்.

In Ceylons Tea Garden புத்தகத்தினை நவீன வடிவில் வழங்கிய பாக்கியா

பதிப்பகத்தாருக்கும் நண்பர் திலகருக்கும் நன்றிகூற வேண்டியது மலையக இலக்கிய நேயர்களின் கடப்பாடாகும். காலத்தால் அழியா படைப்புகளை தந்துள்ள சி. வி. வேலுப்பிள்ளை பேராசிரியர் கைலாசபதியின் நேசத்திற்கு பாத்திரமானவர் என்பது பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

மலையக மக்கள் கண்ட இலக்கிய படைப்பாளிகளில் போற்றத்தக்க படைப்பாளி சிவி என்றால் மிகையாகாது. 1950 களில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்தக் கூடியதான காத்திரமான படைப்புகளாக இருக்கின்றது.

☼

வியாபித்து நிற்கும் சி.வி.

– செ. ஜெ. பயியான்

கடந்த காலத்தின்
வார்த்தை
உனது

நீ
உரைத்தவை
நூற்றாண்டு தொட்டும்
ஈரம் பொதிந்தவை

மலைநாட்டு
நிலை மாந்தர்
கனவுகளை
மொழிந்து நின்றாய்

தீராத வேதனை
ஆடையணிந்தபோது - பேனை
முனை தீட்டி
தீ மூட்டினாய்

ஆழப் புதைந்த
தேயிலை வேருக்கடியில்
நீயும் புதைந்தே போனாய்

சி.வி.- நீ
சீவிய கூர் முனைகள்
குத்திக் கிடக்கிறது
மண்ணில்

நீ
நேசித்த தாய்
இன்னும்
நடமாடுகிறாள்

நீ
பாடிய
தேசம்
இன்னும் இருக்கிறது

நீயோ....
புலம்பித் தவித்த
குரலினை
நிறுத்திக் கொள்ள
அலை திரளாய்
அலைந்து
தேயிலை தேசமெங்கும்
வியாபித்து கிடக்கிறது
அதன் வேர்கள்!

நனவாகும் பின்னும்
துளிரும்
அப்போதும்

☼

சாகா வரம் பெற்ற சி.வி.

இரா. சந்திரமோகன்
விழாகுழு இணைச்செயலாளர்

சி.வி. எனும் ஆலமரத்திற்கு
சி.எம். எனும் சந்திர மோகன்
கடுகுச் செடி கவிவடிக்கும் அளவுக்கு
காலம் கனிந்து விட்டது...

ஓர் நூற்றாண்டு
உருண்டோடி செல்கிறது...
சி.வி.யின் நினைவாண்டாய்
சிந்தையில் நிறைகிறது

முத்துத் தீவில்
முகட்டு மலைச்சாரல்
மடக்கும்புர தோட்டத்தில்
கங்காணி பரம்பரையின்
அடுத்த வாரிசாய்
இருப்பாய் என எண்ணி
கண்ணப்பன் தெய்வானை
பெற்றெடுக்க
நீயோ!
பறிதவிக்கும் மக்களின்
வாரிசாய் வந்துதித்தாய்!

காதல் மோகம் சுழன்றுவரும்
காலத்தில் - நீயோ!
தாகூர் பாணியில் கவிதைநாடகம்
படைத்தாய்!

கல்விக் கண் திறக்க
மறுத்த அந்த நாட்களில்
தீண்ணைப் பள்ளிகளை
நீ படைத்தாய்!

தாய்மொழியே அந்நியமான
அந்த நாட்களில்

ஆங்கிலப் மொழியில் - நீ
கவி படைத்தாய்!

மக்களின் அவலத்தை தேசம்
மறைத்த அந்த நாட்களில்
நாட்டார் பாடலாய்
உலகறியச் செய்தாய்!

தொழிற்சங்கத்திற்கே மக்கள்
என்ற அந்தக் காலத்தில்
மக்களுக்காய் தொழிற்சங்கப்
பணியில் நீ இணைந்தாய்!

பட்ட துயர் பார் அறிய
பாராளுமன்றில் நீ
பரப்பிய பரப்புரைகள்
பாமரர் யாறிவார்?

சாதிய எதிர்ப்புக்கு நீயும்
ஆணிவேர் ஆனபோதும்
சாதிய ஒதுக்கு முறைக்கு
நீயும்
ஆளான அவலத்திலும்
சாணக்கியனாய்
மாற்று சங்கத்தில்
அங்கத்துவம் பெற்று
மக்கள் மனங்களில்
சிம்மாசனம் கொண்டாய் அன்று

தேயிலைத் தோட்டத்திலே...
கவிதை வரிகளால்
புதைந்து கொண்டாய்
என்னுள் இன்று...

கவி வரிகள்
சட்டென நின்றுவிட்டன...
நூற்றாண்டு கடந்தாலும்
சாகா வரம் பெற்ற
சி.வி. யாய் என்னுள்
நீ நிலைத்ததால்!

நான் உணர்ந்த சி.வி. ஓர் அனைத்தும் நிறைந்த ஆளுமை

– கலாபூசணம் மு. சிவலிங்கம்

தென்னாட்டுத் தமிழரின் இலங்கை வரலாற்றில் முதல் சிந்தனையாளராக, முதல் சமூகவாதியாக கோ. நடேச ஐயரின் தோன்றலுக்குப் பின்னர், இரண்டாவது மைல் கல்லாக சி. வி. வேலுப்பிள்ளை என்ற அசகாய ஆளுமை முகிழ்த்து எழும்பி நிற்கின்றது.

பஞ்சம், பட்டினி, கொள்ளை நோய் நிறைந்த – நிலமற்ற சமுதாய அமைப்பு என்ற அனைத்து கேடுகளிலிருந்தும் தப்பித்து, நாடு கடந்த புலம் பெயர் வாழ்க்கையை நோக்கிய அம்மக்களின் அன்றைய நிலைப்பாடு அறிவுபூர்வமாக இருந்தாலும், மண்ணை மிதித்த காலந்தொட்டு, இன்று வரை அம்மக்கள் எதிர் கொள்ளும் துயர சரித்திரத்துக்கு முடிவில்லாமலிருந்தாலும், ஓர் நம்பிக்கை கீற்றை காட்டுமுகமாக, அம்மக்களின் பேசும் குரலாக நடேச ஐயருக்குப் பின் சி. வி. செயற்பட்ட காரியங்கள் வரலாற்றில் ஆழப் பதிக்க வேண்டியவைகளாகும்.

காலனித்துவ வெள்ளை வியாபாரிகளின் அடிமைகள் என்றும், கூலிகள் என்றும் நாமம் சூட்டப்பட்டு, அவமதிக்கப்பட்டு வந்த ஒரு காலத்துக்குரிய களங்கம், சி.வி. என்ற சிந்தனையாளன் மூலமே துடைக்கப்படுகிறது. எழுத்தறிவற்ற உடல் யந்திரங்களாகவே இயக்கப்பட்ட மனித சக்திகளுக்கு மத்தியில், சி.வி. கல்விமானாக எழும்பி நின்றபோதே, பெருந்தோட்ட மக்களுக்கு சமுதாய கௌரவம் கிடைக்கத் தொடங்கியது. தாய்மொழி அறிவற்ற மக்கள் மத்தியில், தங்களது அருமை பெருமைகளை, நாட்டை உருவாக்கிக் கொடுத்த சாதனைகளை வெளிக்காட்ட முடியாதவர்கள் மத்தியில், வெள்ளைக்காரர்களும், சுதேசிய சிங்கள சமூகத்தவர்களும் புரிந்துக் கொள்ளும் வகையில், உணர்ந்து கொள்ளும் வகையில், பொது மொழியான ஆங்கிலத்தில் அவரது முதல் எழுத்து பிரச்சாரம் Born to labour (உழைக்கப் பிறந்தவர்கள்) என்ற இலக்கியத்தின் மூலமே (Literary base) முதற் கட்ட செயற்பாட்டை முடித்தது.

சி.வி.யின் முதல் ஆதங்கமே சமுதாயக் களங்கத்தைப் போக்குவதாகவிருந்தது. தென்னாட்டுத் தமிழர்கள், கோப்பி, தேயிலை பெருந்தோட்டங்களை உருவாக்க வந்த வெறும் "கூலிப் பட்டாளம்" அல்ல. அவர்களுக்கு நாடு உண்டு. கலாசாரம், பண்பாடு, சடங்கு, சம்பிரதாயங்கள், இதிகாசம் எல்லாமே உண்டு என்பதை விளக்குமுகமாகவே 'உழைக்கப் பிறந்தவர்கள்' என்ற Born to labour என்ற நூல் வெளிவந்தது. இந்த நூலில் உள்ளக வாழ்க்கை நிலைமைகளைக் காட்டும் சமூக விவரணங்கள், சடங்கு, சம்பிரதாயங்கள், கலாசார விழுமியங்கள், சிறுகதைகள், வாய்மொழி பாடல்கள் என எழுதப்பட்டுள்ளன. இந்த நூலின் ஆக்கங்கள் அனைத்தையும் சி.வி. ஒரு நாள், ஞாயிறு டைம்ஸ் பத்திரிகையாசிரியர் Sunday

times Editor எப்.டி.சில்வாவிடம் தொடர்ந்து பிரசுரிக்கும்படி கேட்டுக் கொண்ட பின்னர்தான், சி.வி.யின் ஆளுமைகளை நாட்டின் மத்தியதர, உயர்தர, அறிவுசார் சமூகத்தினர் யாவரும் இன்னொரு "புதிய சமூகத்தின்" வரலாற்றை அறியத் தொடங்கினர். அவர்கள் இந்த நாட்டுக்குரிய குடிகள். அவர்கள் நாட்டை நிர்மாணித்துக் கொடுத்த பங்களிப்புக்கள் பேசப்பட வேண்டியவை, என்றெல்லாம் சலசலப்பை உருவாக்கின. சி.வி.யின் ஆக்கங்கள் தொடர்ந்து சன்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளிவரத் தொடங்கின. "சி.வி.யின் படைப்புக்களை வாசித்தப்போது எனது கண்கள் கலங்கின. இரத்தம் சூடேறியது. இம்மக்களின் துயரங்கள் இப்படி அமையவேண்டுமா?" என்று ஆவேசப்பட்டதாக Born to labour புத்தகத்தின் முதல் பதிப்புக்கு 27.09.1969 இல் அணிந்துரை எழுதும் போது, டைம்ஸ் ஆசிரியர் சில்வா குறிப்பிட்டுள்ளார். சி.வி.யின் உண்மையும், நேர்மையுமே அவரை அரசியல் துறையில் நிலைக்க முடியாமல் செய்தன, என்று ஆசிரியர் சில்வா மீண்டும் சி.வி.யின் மனிதத்துவத்தை எடுத்துக் காட்டுகிறார்.

1947 – 1952 வரையிலான சுதந்திரத்துக்கு முன்னரே தேர்தல் நடந்த போது, சி.வி. தலவாக்கலை பாராளுமன்ற பிரதிநிதியாக தெரிவாகினார். காலனித்துவ ஆட்சிக்குப் பின் முதல் தேர்தலில் தெரிவாகிய அனைத்து மலையக பிரதிநிதிகளும் சமூகம் பற்றிய சிந்தனையிலும், சமூக உரிமை, சமூக மேம்பாடு என்ற நிலைப் பாட்டிலேயே செயற்பட்டு வந்தனர். காலப் போக்கில் டீ.எஸ்.சேனநாயக்கா ஐ.தே.க. மூலம் பிரதமராகியதும், முதல் நடவடிக்கையாக பெருந்தோட்ட மக்களை குடியுரிமைச் சட்டத்தின் மூலம் நாடற்றவராக்கினார். இச் சட்டத்தால் அவமதிக்கப்பட்டு, அரசியல் அனாதைகளாக பெருந்தோட்ட மக்கள் இழிவு நிலைமைக்குத் தள்ளப்பட்டனர்.

1823 ஆம் ஆண்டிலிருந்து 1948 ஆம் ஆண்டு வரை 125 ஆண்டுகால தேசிய இருப்பை கொண்டிருந்த மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதையும். அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டதையும் சர்வதேச சமூகங்கள் வீமர்சித்து வந்த போது, ஐ.தே.கட்சி அச்சம் கொண்டது. 1965 ஆம் ஆண்டளவில் டட்லி சேனனாயக்காவும். 72 களில் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் மலையகத் தொழிற்சங்க தலைவர்கள் இருவருக்கு (அமரர்கள் எஸ்.தொண்டமான், ஜனாப் ஏ.அசீஸ்) நியமன பாராளுமன்ற உறுப்பினர் (Nominated M.P.) அந்தஸ்து பதவிகளை அறிமுகப்படுத்தினார்கள். இப்பதவிகளை "ஜனநாயக பிச்சை" என்று இடதுசாரிகள் வீமர்சனம் செய்தார்கள். இக்காலத்திலிருந்தே அரச நீர்வாக உறுப்பினராகியவர்களுக்கு பதவி ருசி, பதவி சுகங்கள் என்ற மயக்க நிலைகள் புதிதாக உருவாகத் தொடங்கின. அந்தப் பதவிகளும், சுகங்களும் பீடைகளாக தாய் மரத்தையே கொல்லும் குருவீச்சைகளாக தொடர்ந்து படர்ந்தன.

சி.வி.யின் பாராளுமன்ற உரைகள் இன்று வரை வெளிக் கொணராமல் இருப்பது ஒரு குறைபாடாகும். ஹன்சாட் வெளியீடுகளிலிருந்து பாராளுமன்ற உரைகளின் பிரதிகளைப் பெறுவதற்கு நாம் முயற்சித்தல் அவசியமாகும்.

சி.வி.யை, கவிதை, கதை. நாவலாசிரியர் என்றும், கவிமணி என்றும் பட்டங்கள் சூட்டியும் இலக்கியவாதியாகவே அடையாளமிட்டு வைப்பது, அவரது ஏனைய ஆளுமைகளை மறைப்பதாக அமையலாம். அவரது அரசியல் செயற்பாடுகள், நமது

மக்களுக்குரிய அரசியலில் அவரது நிலைப்பாடுகள் எப்படியிருந்தன என்பதையெல்லாம் அறிந்து கொள்வதற்கு மேற்கூறிய ஹன்சாட் தேடல் முயற்சி நமக்கு உதவியாக விருக்கும். அமரர் வி.கே.வெள்ளையன் அவர்களோடு இணைந்து தொழிற்சங்க வாதியாக செயற்பட்ட பணிகள் பற்றியும் நாம் அறிதல் அவசியமாகும்.

மறுபுறத்தில் இலக்கியவாதி என்ற முழுமையான அடையாளத்தை சி.வி. பெற்றிருந்தாலும், அவரது எழுத்துக்கள் யாவும் அரசியலையே பேசின. பெருந்தோட்ட மக்களையே பேசின. அவரது படைப்புக்கள் மக்கள் இலக்கியமாகியதால், இலக்கியமும், அரசியலும் கலந்த ஓர் பெறுமதியான சமூகவாதி, ஓர் பெறுமதியான சிந்தனைவாதி என்கின்ற அடையாளங்களை சி.வி.வேலுப்பிள்ளை என்ற ஒரு சகாப்தத்தின் தலைவனை மேன்மைபடுத்தும்.

சி.வி.யினுடைய "தேயிலைத் தோட்டத்திலே" (In the Tea garden) என்ற கவிதைகளில் சிலவற்றை கவிஞர் சக்தி பாலையா அவர்கள் மொழி பெயர்த்தவற்றில் பேசப்படும் சில பாடல் வரிகள் மூலம் சி.வி.யை அளவிட முடியாது. பல சந்தர்ப்பங்களில் கவிஞர் சக்தி பாலையா அவர்கள், "நான் சி.வி.யின் கவிதைகளை முழுமையாக மொழி பெயர்க்கவில்லை. அவரது பாடல்கள் சிலவற்றில் ஈர்க்கப்பட்டு மொழியாக்கம் (Transcreation) செய்துள்ளேன். இக்கூற்றின்படி சி.வி.யின் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற கவிதைகள் முழுமையாக மொழி பெயர்க்கப்பட வேண்டியவைகளாகும். சில படைப்பாளர்கள் சி.வி. யின் சில பாடல்களை மொழிபெயர்த்துள்ளதை நாம் அறிகின்றோம். இனி வரும் சி.வி. யின் பாடல்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்கள், மொழிபெயர்ப்பாளனின் மொழிப்புலமையை காட்டவராது, மக்கள் மொழியில் எழுதினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

சி.வி.யின் Born to Labour என்ற நூலில் சில ஆக்கங்களை பொன் கிருஸ்ண சுவாமி, பி.ஏ.செபஸ்தியன், சமீபத்தில் சாரல் நாடன் அவர்கள் எழுதிய தகவலின் படி பாலசுப்ரமணியம் போன்றோர் மொழிப்பெயர்ப்பு செய்துள்ளனர். அவைகள் யாவும் தொகுப்பாக வெளிவரவில்லை. மு.சிவலிங்கத்தின் மொழி பெயர்ப்பின் மூலம் "தேயிலை தேசம்" என்ற பெயரில் அந்நூலின் பெரும்பகுதியான ஆக்கங்கள் ஒரு தொகுப்பாகக் கொண்டு வரப்பட்டது. தேயிலை தேசம் என்ற பெயர் கூட அமரர் சாரல் நாடன் போன்றோரின் இணக்கத்துக்குள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. தேயிலை தேசம் என்ற பெயரை நான் வைப்பதற்குக் காரணம் என்னவெனில், சி.வி. அவர்கள் தனது ஆக்கங்கள் பலவற்றில் மலையகத்தை Tea Garden என்று சொல்லியதை விட Tea country என்றே குறிப்பிட்டுள்ளார். சி.வி வலியுறுத்தியுள்ள இந்தப் பெயர் நமது எதிர்கால அரசியல் தீர்க்கதரிசனத்தைக் கொண்டிருக்கின்றது என்று நாம் ஏன் கருதக் கூடாது?

சி.வி.யின் மூலப் படைப்பை பலருக்கு வாசிக்கும் வாய்ப்பு கிடைக்காதபடியால், மொழி பெயர்ப்புக்களில் நம்பகத்தன்மை இல்லாமல் போவது நியாயமானதாகும். அவை நிவர்த்தி செய்யப்படுவதற்கு ஆங்கில வாசகர்கள் மத்தியில் மூல படைப்புக் களுடன் மொழி பெயர்ப்புகளையும் ஒப்பிட்டு ஒரு கலந்துரையாடல் செய்வது அவசியமாகும்.

சி.வி.யின் ஆங்கிலப் படைப்பை வாசிக்க வாய்ப்புக் கிடைக்காதவர்கள் மத்தியில் "சி.வி. விவரணங்கள் மட்டுமே எழுதினார். சிறுகதைகள் எழுத வில்லை. நாவல்கள், கவிதைகள், நாடகங்கள் மட்டுமே எழுதியுள்ளார்." என்ற பரவலான அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. தமிழ் சிறுகதை பண்பியலுக்கும். ஆங்கில சிறுகதை பண்பியலுக்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன. காவியத் தமிழைக் கொண்ட நாங்கள் சங்க காலத்துக்குப் பின்னர் நீண்ட இடைவெளியில், 1920 களில் இருந்தே வ.வே.சு ஐயர், மாதவையா, பாரதியார், போன்றோரிலிருந்தே சிறுகதைகள் அறிமுகமாகின. தமிழக சிறுகதை பண்புகளில் ஊறித் திளைத்தவர்கள், ஆங்கில சிறுகதை பண்பியலை பார்க்கின்ற போது, அவை சிறுகதைகளே அல்ல. என்ற தீர்மானத்துக்கு வந்ததினாலேயே, சி.வி.யின் சிறுகதைப் படைப்புக்கள் சந்தேகக் கண்கள் கொண்டு அலசப்படுகின்றன. இந்தக் களங்கம் துடைத்தெறியப்பட வேண்டும். சி.வி.யின் சிறுகதைப் படைப்புக்களை தெளிவாக்கிக் கொள்ள வெண்டும்.

நாடற்றவர் என்ற சி.வி.யின் மிகச் சிறிய மேலோட்டமான வரலாற்று நூல், ஆசிரியர் இரா.சிவலிங்கம் அவர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருந்தது. இந் நூலில் அணிந்துரை வழங்கியுள்ள எனது ஆசிரியர் இரா.சிவலிங்கத்தின் கூற்றில் சில முரண்பாடுகள் தெரிந்தன. எனது ஆசிரியர் கூற்றில் சி.வி.யின் எழுத்துக்களில் எழுச்சியான, புரட்சியான சிந்தனைகள் கிடையாதென்றும், அவலங்களும், சோகங்களுமே அவரது படைப்பில் மித மிஞ்சியுள்ளன என்றும், அவர் சாந்தசொரூபி, காந்தியவாதி என்றும் குறிப்பிட்டுள்ளதாக எனது ஞாபகத்தில் உண்டு. தமிழில் எழுதியுள்ள இக்கூற்றைத் தொடர்ந்து, ஆங்கிலப் படைப்புக்களை வாசிக்காத புதிய பரம்பரை எழுத்தாளர்கள் சி.வி.யை புரட்சிக் கருத்து இல்லாதவர், எழுச்சி சிந்தனை இல்லாதவர், அவலங்களை எழுதியவர், என்றெல்லாம் குற்றச் சாட்டுக்களை முன் வைக்கின்றார்கள். இவை அபத்தமான விமர்சனங்களாகும். சி.வி. புரட்சிகர கருத்துக்களைக் கொண்டவர், எழுச்சிமிகுந்த சிந்தனைகளைக் கொண்டவர், அவர் வாழ்ந்த காலத்தில் கண்டு, உணர்ந்து, அனுபவித்த சமூகக் கொடுமைகளை மிக நுணுக்கமாக (Micro study) அடுத்த பரம்பரையின் அவதானத்துக்குப் பதிவு செய்து விட்டுப் போனவர், என்பதை பரிசுத்தமான மனத்தோடு புரிந்துக் கொள்ள வேண்டும். தனது இனத்துக்கு நேர்ந்த சமூகக் கொடுமைகளை அடுத்த பரம்பரையினரின் கவனத்துக்கு தகவல் எழுதி வைத்துச் செல்லும் ஒரு தனி மனிதனின் செயலிலும் புரட்சியும், எழுச்சியும் பதிந்திருக்கின்றன என்பவை உணரப்பட வேண்டியதாகும். சி.வி. என்ற ஒரு புரட்சிகரமான, அறிவு நிறைந்த ஆளுமையைக் கொச்சைப்படுத்தி விடக் கூடாது. இதேவேளை புரட்சி, எழுச்சி என்பதெல்லாம் தீவிரமான வார்த்தை சொல்லாடல்களிலும், ஆவேசம், ஆத்திரம் நிறைந்த கோசங்களிலும், சில சந்தர்ப் பங்களில் உணர்ச்சி வசப்பட்ட வன்முறைகளிலும் புரட்சி காணப்படுவதாக தப்பெண் ணம் கொள்ளக் கூடாது.

இறுதியாக சி.வி.யின் ஆங்கிலப் படைப்புக்களில் ஒன்றான Born to Labour என்ற ஆங்கில நூலை, வாசகர் நலனுக்காக வெளியிட முயற்சித்துள்ளேன் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

☼

மறுமலர்ச்சிக்காக இலக்கியம் படைத்த பேனா போராளி....!

சிவலிங்கம் சிவகுமாரன்
(ஆசிரியப்பீடம் - வீரகேசரி)

மலையகத்தின் விடிவுக்காய் குரல் கொடுத்த பலர் இன்று மறக்கப்பட்டு வருவது ஒன்றும் புதிய விடயமல்ல. எனினும் பெருந்தோட்டப்பகுதி வாழ் தொழிலாளர்களின் இன்னல்கள் சோகங்களை இலங்கையைத் தாண்டி வெளி உலகுக்கு தனது அற்புதமான படைப்புக்கள் மூலம் கொண்டு வந்தவர் மூத்த இலக்கியவாதி மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை ஆவார். செப்டெம்பர் 14 ஆம் திகதி அவரின் 100 ஆவது பிறந்த நாள் நினைவு தின நிகழ்வுகள் மலையகத்திலும் தலைநகரிலும் இடம்பெற்றன. படைப்பிலக்கியம், அரசியல், தொழிற்சங்கம் என பன்முக ஆளுமை நிறைந்த ஒரு அற்புதமான மனிதர் வாழ்ந்து மறைந்த சுவடே தெரியாமல் அமைதியாக இருக்கிறது அவர் பிறந்து வாழ்ந்த வட்டகொடை மடக்கும்பரை தோட்டம். மலையகமும் அதே நிலையில் தான் இருக்கின்றது என்பதை சொல்லித் தெரியவேண்டிய தில்லை. வீடற்றவன் என்ற நாவலை தீர்க்கதரிசனமாகத்தான் அவர் எழுதினாரோ என எண்ணும் வகையில் இறுதி நாட்களில் அவர் வாழ்ந்து மறைந்த வீடு அந்த தோட்டத்திற்கே சொந்தமானது.

இறுதியில் அவர் வாழ்ந்து மறைந்த வீட்டிலிருந்தே அவரின் குடும்பத்தினரை வெளியேற்றியது தோட்ட நிர்வாகம். இன்று அவர் வாழ்ந்து மறைந்த வீட்டின்



நிலைமையை இன்று வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

எந்த சமூகத்திற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்தாரோ அவர்கள் மத்தியில் அவர் பேசப்படாது இருப்பதை ஜீரணிக்க முடியவில்லை. அவர் மண்ணில் பிறந்தவன் என்ற அடையாளப்படுத்தல்களுக்கும் அப்பாற்பட்டு ஒரு உயர்ந்த இலட்சிய நோக்கத்தில் தனது வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த அந்த உன்னத மனிதரின் இல்லம் நோக்கிச் சென்ற ஞாபகங்கள் வேதனையைத்தான் தருகின்றன. அவர் வாழ்ந்த காலகட்டத்தில் பங்களாவாக காட்சியளித்த அந்த குடியிருப்பு இன்று பல தனித்தனி குடும்பங்களின் வாழ்விடமாக விளங்கிவருகிறது. இங்கு குடியிருந்த மனிதரைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா என்றால் உதட்டை பிதுக்குகின்றனர். வீட்டினுள்ளே நுழைந்தால் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. சி.வி வாழ்ந்த வீடா இது? அவரது அலுவலக அறை இன்று ஒரு குடும்பத்தின் சமையலறையாக காட்சியளிக்கிறது. பெருந்தோட்டப்பகுதிகளில் விறகு மற்றும் பழைய பொருட்கள் வைக்கும் இடமான அட்டாலில் விறகுகள் நிறைந்து கிடக்கின்றன.

அதைத்தாண்டி அவரின் உறங்கும் அறைக்குச்சென்று பார்த்தால் சுவரில் வெடிப்புகள் விழுந்து இருட்டறையாக காட்சியளிக்கின்றது. மலையக சமூகத்திற்கு வெளிச்சம் கிடைக்க போராடிய பேனா போராளியின் சிந்தனைகள் இந்த அறையில் தான் தோற்றம் பெற்றதோ? சரி அவர் பாவித்த பொருட்கள் தளபாடங்கள் எல்லாம் எங்கே என்று விசாரித்தால் அவரின் குடும்பத்தை இவ்வீட்டிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கையின் போது அவை தூக்கி எறியப்பட்டன என்றும் அச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் அதை தமது வீட்டிற்கு எடுத்துச்சென்றனர் என்றும் கூறினர். ஒரு



சிலரோ அவரது ஆவணங்களை உறவினர்கள் தலைநகருக்கு எடுத்துச்சென்றனர் என்று கூறினர். மற்றுமொருவர் இன்னுமொரு தகவலை சொன்னார். சி.வி பாவித்த மேசையும் அலுமாரியும் அருகில் ஒரு வீட்டில் இருப்பதாகக் கூறினார். ஓடோடிச் சென்றேன் அவ்வீட்டிற்கு. ஒரு அறையில் சி.வி. பாவித்த மேசையும் அலுமாரியும் காணக்கிடைத்தன. மேசையை வாஞ்சையுடன் வருடிப்பார்க்கும் போது புல்லரித்தது. தனது படைப்புப் பொக்கிஷங்களை சிருஷ்டிப்படுத்த உதவிய மேசை அல்லவா இது? அருகில் உடைந்து விழும் நிலையில் அவரது அலுமாரி. பெரும் துயரத்துடன் அங்கிருந்து வெளியேறினேன். அடுத்ததாக நான் சென்ற இடம் மக்கள் கவிஞன் மண்ணுள் உறைகின்ற இடமாகும்.

புழுதிப் படுக்கையில் புதைந்த
என் மக்களைப் போற்றும்
இரங்கற் புகழ் மொழி இல்லை
ஊணையும் உடலையும் ஊட்டி
இம் மண்ணை உயிர்த்த வர்க்கு
இங்கே உளங்கசிந்த அன்பும் பூணுவாரில்லை
அவர்புதைமேட்டிலோர் கானகப்பூவைப்பறித்துப்போடுவாரில்லை

என்ற வரிகள் தான் ஞாபகத்திற்கு வந்தன. தேயிலைச்செடிகள் மத்தியில் தனது வாழ்க்கையை தொலைத்த எந்த தொழிலாளர் வர்க்கத்திற்காக இவர் கவி படைத்தாரோ அதே தேயிலைச்செடிகளுக்கு மத்தியில் கைவிடப்பட்ட நிலையில் புற்கள் மண்டி தோற்றமளிக்கிறது சி.வியின் கல்லறை.

தன்னை மறைக்கத்தானோ அவ்விறைவனும்தளிர் பசும் புல்லால் தரை மறைத்தனனோ

என்ற அவரது வரிகளில் எந்தளவிற்கு உண்மை இருக்கிறது என்பது இங்கு வந்து பார்த்தால் புரிகிறது.

சமூக மாற்றத்திற்கான சிந்தனைகளை வெளிப்படுத்துவதில் இரண்டு பிரிவுகளை நாம் பார்க்கிறோம்.

1) சமூக அவலங்களை எடுத்துக்கூறல்

2) சமூக மாற்றத்திற்கான புது சிந்தனைகளை கூறல்

மேற்கூறிய விடயத்தில் முதலாவது பிரிவில் நின்று சிந்தனையை தூண்டும் விதத்தில் இலக்கியம் படைத்தவர் சி.வி. ஆகவே அவரை மறுமலர்ச்சிக்காரர் என்று கூறுவதில் தவறேதும் இல்லை என நினைக்கிறேன்.

மலையகத்தின் மறுமலர்ச்சிக்காக பேனாவை கையிலெடுத்த சி.வி உண்மையில் ஒரு பேனா போராளி. அவரது நூற்றாண்டு ஜனன தின நிகழ்வுகளோடு அவரை மறந்து விடாது குறைந்தபட்சம் அவர் பிறந்து வாழ்ந்த இடத்திலாவது அவருக்கு ஒரு சிலை எழுப்புவதற்கு உரியோர் கவனம் செலுத்து வேண்டும். அவர் வாழ்ந்த

பகுதியில் ஒரு குடியிருப்புப்பிரதேசமோ அல்லது வீதியோ அவரது பெயர் கொண்டு அழைக்கப்படல் வேண்டும். பாடசாலை மண்டபங்களுக்கு அவரது பெயர் சூட்டப்படல் வேண்டும். சி.வி.வேலுப்பிள்ளை காலமாகி எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதியோடு 30 வருடங்கள் நிறைவுறுகின்றன. அவரது இல்லத்தை நினைவாலயமாக்கி அவர் பாவித்த பொருட்களை சேகரித்து அங்கு காட்சிப்படுத்த வேண்டும். இதற்குரிய பணிகளை யார் எவர் முன்னெடுத்துச் செல்லப்போகின்றனர் என்பதை காலம் தான் கூற வேண்டும்.

வாடிய ரோசா மலரிதழ் போல வாடியே

அன்னார் வாழ்க்கை கழிந்தது

என்ற அவரது கவி வரிகளை அவருக்கே சமர்ப்பணம் செய்ய வேண்டிய நிலையில் தான் இன்று மலையக சமூகம் உள்ளது என்பதை இங்கு பதிவிடுதல் அவசியம்.

☼

சி.வி.யின் எழுத்துத் திறன்!

– கவிஞர். மு. முத்துவேல்

எனது தேசமே! எனது தேசமே!
தலைத்தாய் நிலத்தின் மக்கள் குலமே!
உனது மைந்தர் பலநூறாயிரவர்
இருந்தும் உன்பெயர் எடுத்து நிறுத்த
வாழ்ந்தோர் சிலபேர். அவர்களுக்குள்ளும்
சி.வி. வேலுப்பிள்ளை என்பானின்
சீர்மை, ஒருக்கால் சொல்லுவன் கேளாய்!

நமது வாழ்வை போசித்து நமையெலாம்
உரம் பெறப்புரக்கும் நம் ஜீவபூமியில்
காலனித்துவம் நம் கைகளிற் பிணைத்த
அடிமை விலங்கை நொறுக்கி எறிந்து
மலைமகள் தனக்கு விடியலைக் கொணர்ந்து
சுதந்திரத்தை நிதர்சனம் ஆக்கவென
எழுந்த வேள்வியில் நடேச அய்யர்
தன்னையே முற்றிலும் ஆகுதி ஆக்கிச்
சொரிந்ததில் எங்கணும் ஜுவாலித்து எழுந்த
தழற் பிழம்பின் தகிப்பிற் பொங்கிய
சமூகப் பிரக்ஞையைத் தன்னுள் செரித்தவன்
சி.வி. வேலுப்பிள்ளை என்பது
மெய்யிலும் மெய்யே! மெய்யிலும் மெய்யே!

ஆங்கிலப் புலமை அவனது சொத்தாய்
ஆனதனால் எம் சமூகந் தன்னை
ஆங்கில நாட்டான் அடிமை கொண்டு அடக்கி
மானுடம் கொன்ற அந்தகாரத்தில்
ஆங்கிலத்தையே ஊடகமாக் கொண்டு
அவர்செய் கொடுமை அவர் மனம் படும்படி
இடித்துரைப்பது இலகுவாயிற்று.

வேலுப்பிள்ளை எனுமொரு கவிஞன்

சமூக நிலையைச் சரியாய்ச் சொன்னால்
பெரிய கங்காணி மரபொடு சார்ந்த
பெருந்தகை எனவே சொல்லுதல் வேண்டும்.
ஆனபோதிலும் ஆனபோதிலும்
தன்சார்மரபு நிலையிலிருந்தும்
சற்றும் பெயரா நிலைமையிற் தங்கி
லயம் வாழ் மக்கள் வாழ்வியல் தன்னை
மனத்துள் வாங்கி மனத்துள் வாங்கி
இலக்கியத்துள் இனிதே கொணர்ந்தனன்

இன்னும் சி.வி.யின் செயற்படு மார்க்கம்
இலக்கியத்திலும் இருந்து அகன்று
பன்முகத்தது ஆகிச் சென்றதால்,
தொழிலாளரை ஓர் அமைப்பிற் கொணரும்
தொழிற்சங்கத்துள்ளும் நுழைவு கண்டதால்
மூலதனக்காரர் அடக்குமுறைகளின்
மூலத்தைப் போக்கை கணக்குப் போட்டு
விளக்கங் கொடுக்கும் வித்தகனேயாய்
விளங்கினன் என்பது உண்மையாதலால்
சி.வி. வேலுப் பிள்ளையை மலையகம்
சிறப்புச் செய்து வாழ்த்துதல் செய்யும்
சி.வி. வேலுப் பிள்ளை என்பவன் தனது
சிந்தனை பதித்த எழுத்துத் திறத்தாற்
சிறப்பானவனே! சிறப்பானவனே!

☼

மக்கள் மனதில் என்றும் சீவிக்கும் "சி.வி."

– எஸ். சிவசுந்தரம்

மலையக வரலாற்றில் மிக முக்கியமான மைற்கல்லாக இருந்த சிலரில் சி.வி. என்று ஆங்கிலம் கற்றோரால் அழைக்கப்பட்ட கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளையும் மிகச் சிறந்த முன்னோடியாவார்.

இவர் பூண்டுலோயா வட்டக்கொடை மடக்கும்புற தோட்டத்தில் பிறந்து தோட்டப் பாடசாலையிலும், அட்டன் மெதடிஸ்த கல்லூரியிலும் (ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரி) கொழும்பு நாளந்தாக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர்.

மனிதனானவன் அவனது நடத்தையின் மூலம் உலகில் அறியப்படுகின்றான் என்பது கீதையில் சொல்லப்படுகின்றது. அவ்வாறே சி.வி.யும் கல்விமானாக, இலக்கியவாதியாக, அரசியல்வாதியாக, ஆசிரியராக, தொழிற்சங்கவாதியாக, மரபுகளையும் கலாசாரங் களையும் பேணுபவராகவும், தேசப்பற்று மிக்கவராகவும், எல்லாவற்றுக்கும் மேலாக சொந்த மண்ணின் அவலங்களை நிவர்த்தி செய்வதற்கு பாடுபட்டதன் மூலம் தன்னை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

சிவி தன்னுடைய ஆக்கங்கள் மூலமும் தன்னை வெளிப்படுத்தியது மட்டுமல்லாது தன்னுள் இருந்த பிரதேசபற்றையும் உலகிற்கு பறைசாற்றியுள்ளார். இவரது இலக்கியப்பணியானது தனித்து ஒரு மொழிக்கு மட்டும் சொந்தமற்றது. ஆங்கில மொழியாற்றல் காரணமாக இவர் எழுதிய "நூறாவது நாள்" கவிதை "டைம்ஸ்" ஆண்டு மலரில் வெளியாகியது. அத்துடன் சீலோன் டெய்லி நியுஸ் ஆசிரியராகவும் கடமையாற்றிய காலத்தில் தனது கவிதைகளை பிரசுரிப்பது இலகுவாக இருந்தது. 1963 இல் ஆசிய, ஆபிரிக்க கவிதையின் முதலாவது தொகுப்பில் இவரது கவிதையும் இடம் பிடித்ததனால் இலங்கை, இந்தியா, சீனா, கொங்கோ, இந்தோனேசியா, கொரியா, சூடான், ரஸ்யா, வியட்நாம் ஆகிய பத்து நாடுகளிலும் பிரபல்யமாகியது.

கவிதைகள் மாத்திரமல்லாது வீடற்றவன், வாழ்வற்ற வாழ்வு, இனிப்படமாட்டேன், எல்லைப்புறம், பார்வதி போன்ற பல நாவல்களையும் எழுதியுள்ளார். இவர் தன் படைப்புகளில் மலையக மணம் வீசும் மலையக மக்களின் வாழ்வியலை படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

சிவியின் தொழிற்சங்கப்பற்று அவரை தொழிற்சங்கவாதியாக மாற்றியது. தான் பிறந்த மண்ணுக்கும், தன்னை வளர்த்த மண்ணுக்கும் தான் சார்ந்தவர்களுக்கும் மட்டுமல்லாது சகோதர மொழியினர் இன்னல்களைத் தீர்க்கவும் தன்னால் பல சேவைகள் ஆற்றப்பட வேண்டுமென்று கனவு கண்டார். இதன் பயனாகவே 09.12.1947 இல் அவர் ஆற்றிய உரையில் "நாம் அநாகரிக தர்மபாலனைப் பற்றி ஓர் புத்தகம்

போட வேண்டும். சிங்கள மொழியில் அகராதி இல்லை. அகராதியும் வெளியிட வேண்டும்" என்று கூறினார்.

1947 இல் நடைப்பெற்ற முதலாவது பாராளுடன்றத் தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு தலவாக்கொல்லை தேர்தல் தொகுதியில் அமோக வெற்றிப் பெற்றதன் பின் பாராளுமன்றில் "இந்தப் பூமியில்தான் நான் பிறந்தேன். சூரிய ஒளியை முதலில் இங்குதான் தரிசித்தேன். இறுதியாக என் கண் மூடப்போவதும் இந்த நாட்டிலே தான்" என அவர் கூறிய கூற்றின் மூலம் இந்த நாட்டின்மீதும் தன் சொந்த மண்ணின் மீதும் கொண்ட பற்று எடுத்துரைக்கப்படுகின்றது.

இவ்வாறு அவர் பல்வேறு கனவுகளைக் கண்டபோதும் உண்மைநிலை என்ன வென்பது ஒரு சில மாதங்களிலேயே அவருக்குப் புரிந்துவிட்டது. பிரஜாவுரிமைச்சட்டம் (1948) வந்ததும் மலையக மக்கள் பட்ட வேதனைகள் பலவற்றைக் கண்கூடாகக் கண்டவர். அதனை எதிர்ப்பதற்கு பல்வேறு போராட்டங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சிவி அவர்கள் தொழிற்சங்கத்தில் தான் இணைந்து கொண்டாலே தனது மலையக சமூகத்திற்கு சேவை செய்ய முடியும் என்பதை நம்பினார். தொழிற் சங்க சட்டங்கள் முதலாளிகளின் கைகளில் கசையைக் கொடுப்பவைகளாகவும், தொழிலாளிகளைக் கசையடியைப் பெற்றுப் கொள்பவராகவும் ஆக்கத்தான் உபயோகப்படுகின்றன என்று 1950 இல் நாடாளுமன்றில் குறிப்பிட்டார்.

சி.வி. அவர்களைத் தோழர் இராமையாவுடன் சென்றபோது சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அவரது தோற்றம் எளிமையானதாக இருந்தது. ஆனால் அவரது கருத்துக்கள் ஆணித்தரமானவையாகவும், ஆழமிக்கவையாகவும், தீர்க்கமானதாகவும் இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தன.

"சி.வி. நீ மலையகம் தந்த மாணிக்கம்" நீ மலையக மக்களின் வாழ்வியலை வளப்படுத்தவந்த மலையக மண்ணின் மைத்தன். சி.வி. நீ என்றும் மக்களின் மனங்களில் சீவிப்பாய்!

சி.வி. வேலுப்பிள்ளையின் பன்முக ஆளுமையும் பணிகளும்

– மல்லியப்புசந்தி திலகர்

(சி.வி.வேலுப்பிள்ளை நூற்றாண்டு நினைவை முன்னிட்டு – தமிழ் கலைஞர் வட்டம் நடாத்திய நிகழ்வில் ஆற்றிய நினைவுரையின் தொகுப்பு)

சி. வி. அவர்கள் இலக்கிய உலகில் ஒரு படைப்பாளியாக பெரிதும் அறியப்பட்டாலும் படைப்பு இலக்கியம் தவிர்ந்த இன்னும் பல துறைகளில் ஆளுமையாக விளங்கியவர். அதனால் எனதுரைக்கு 'சி.வி. வேலுப்பிள்ளையின் பன்முக ஆளுமையும் பணிகளும்' என தலைப்பிட்டுக் கொண்டேன்.

கொழும்பில் இருந்து சுமார் 200 கி.மீ தொலைவில் நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை நகரில் இருந்து தவலந்தன்னை நகரை இணைக்கும் பூண்டுலோயா வழியில் பயணிக்கும் எவரும் வட்டகொடை எனும் ரயில் நிலையம் அமையும் நகருக்கு அண்மித்த 'மடகொம்பரை' எனும் பெருந்தோட்டத்தை கடக்காமல் பயணிக்க முடியாது. அவ்வாறு கடக்கும் போது வட்டகொடை நகரில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் கடக்கும்போது ஒரு வளைவில் இடது பக்கமாக தேயிலை மலைகளுக்கு இடையே அமைந்த சிறு புல்வெளிப்பகுதியில் ஒரு கல்லறை இருக்கும். இப்போது அது பெயரிடப்பட்டு இருந்தாலும் முன்பு தனியே ஒரு கல்லறை. வட்டகொடை சிங்களப்பள்ளிக்கும், தமிழ்ப் பாடசாலைக்கும் செல்லும்போதெல்லாம் என்னை உறுத்துவது இந்த கல்லறை. சிறுவர்களாக இருந்த காலத்தில் பாதையில் அந்த வளைவு வந்ததும் பயத்தில் ஓடி மறைவோம். பின்நாளில் விசாரித்த போது அது 'கங்காணிபுதைகுழி' என்றார்கள். எங்களூரில் ஏகப்பட்ட கங்காணிகள். அது என்ன ஒரு கங்காணிக்கு மட்டும் 'ஸ்பெஷல்' புதைகுழி என தேடியபோது அதில் புதைக்கப் பட்டிருப்பது ஒரு 'பெரியாங்கங்காணி' எனத் தெரியவந்தது. பெரியங்கங்காணி என்றாலே தோட்டத் தொழிலாளிகளுக்கு வில்லன். பின்னர் அவர்கள் பெயரில் ஏன் கல்லறை? இந்த பெரிய கங்காணிகள் பற்றி சி.வி.வேலுப்பிள்ளை அவர்களே 'நாடற்றவர் கதை' எனும் நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'தோட்டத்துரைக்கும் தோட்டத் தொழிலாளிக்கும் எவ்வித தொடர்புமில்லை. தொழிலாளி பெரிய கங்காணியின் சொத்து'. தோட்டங்களில் ஜமீன்போல் அல்ல ரட்ட மாத்தியா போல் சுகபோக வாழ்க்கை நடாத்தினார்கள். பட்டினங்களில் வட்டிக்கடை தாய்நாட்டில் (இந்தியாவில்) நிலம், வீடு சிறு தோட்டங்களை வாங்கினார்கள்.

2000 பெரிய கங்காணிகள் இருந்தார்கள். இவர்கள் ஜமீன்தார்கள் போல தோட்டப்பெயர்களோடு சேர்த்து அழைக்கப்பட்டார்கள். அதாவது 'தெமோதர

ராமநாதன்', மஸ்கெலியா செட்டியப்பன், பூச்சிக்கடை கருப்பையா, பாமஸ்டன் சண்முகம், திஸ்பனை சுப்பையா பிள்ளை, தலவாக்கலை பாண்டியன், ஊவாக்கலை தைலாம் பிள்ளை, டன்பார் ரெங்கசாமி, மடகொம்பரை குமரன், தெல்தொட்டை சங்கரன், மெய்காகொலை முனியாண்டி, நாப்பனை பொக்கு செல்லன் ஆகியோர் முக்கியஸ்தர்கள். இவர்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து ஆங்கிலம் படித்தார்கள். படிப்பை முத்துக்கொண்ட பின் தங்கள் தகப்பன்களுக்கு உதவியாய் தோட்டத்தில் கணக்கப்பிள்ளை, கண்டக்டர், டிமேக்கர், கிளார்க் வேலை செய்தனர். (நாடற்றவர் கதை பக் 43)

சி.வி. குறிப்பிடும் இந்தப்பட்டியலில் வரும் 'மடகொம்பரை குமரன்' எனும் பெரியாங்கங்காணியின் புதைகுழிதான் எங்கள் ஊரில் உள்ள அந்த புதைகுழி. பல பெரிய கங்காணிகள் வட்டிக்கடைக்காரர்களாகவும், சிறுதோட்டங்களை வாங்கி அதன் உரிமையாளராகவும் இருந்துள்ளார்கள். அது பற்றி குறிப்பிடும் சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள்.

'கடைகளை ஸ்தாபித்த கங்காணிகள், பட்டரையில் உட்கார்ந்து வியாபாரம் செய்யமாட்டார்கள். உதாரணமாக பூச்சிக்கொடை கருப்பையா கங்காணி பல வட்டிக்கடைகளை வைத்திருந்தார். அவர் எந்தக் கடையிலாவது உட்கார்ந்து வியாபாரம் செய்ததாக தெரியவில்லை. இவர் தேயிலைத் தோட்டம் வாங்கியவர்' (பக் 45) என குறிப்பிடுகின்றார்.

இன்றும்கூட கூட பூச்சிக்கொடை கருப்பையா கங்காணியின் பல வட்டிக்கடைகள் வடிவம் மாறி மலையகப்பகுதிகளில் வியாபாரம் நடாத்திக் கொண்டிருப்பதும் இந்தியாவில் சொத்துக்கள் குவித்திருப்பதும் பலரும் அறிந்த செய்தி. ஆனால், 1914 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14ம் திகதி பிறந்த மடகொம்பரை குமரன் கங்காணியின் பரம்பரையில் அவரது மகளின் மகனாகப் பிறந்த சி.வி.வேலுப்பிள்ளை அவர்களோ ஆங்கில வழிக்கல்வி கற்று ஆசிரியத் தொழிலை தெரிவு செய்கிறார். பல்வேறு உலக இலக்கியங்களை வாசிக்கிறார். 1934 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற வங்கக்கவி தாகூர் அவர்கள் இலங்கை வந்தபோது அவரைச் சந்தித்து தான் தாகூரின் தாக்கத்தில் படைத்த 'வீஸ்மாஜினி' என்ற ஆங்கில கவிதை படைப்பைக் கொடுத்து ஆசிபெறுகிறார். இவர்தான் பின்நாளில் சி.வி.வேலுப்பிள்ளை எனும் மக்கள் கவிஞனாக பரிணாமம் பெறுகிறார்.

இவரது ஆரம்ப கால படைப்புகள் தாகூரின் பாதிப்புக்களில் எழுந்தவையாயினும் பின்நாளில் தன் மக்கள் குறித்த பார்வைக்குள் செல்லும் இவரது தேடல்கள் அவரை ஒரு 'மக்கள் இலக்கிய' படைப்பாளியாகவும் செயற்பாட்டாளராகவும் மாற்றிவிடுகிறது. 'பெரியாங்கங்காணி' பரம்பரையில் வந்த இவரின் இறுதிக்கிரியைகள் போது வெறும் ஏழு, எட்டு உறுப்பினர்கள் மட்டும் இணைந்து நடாத்திய 'பாரதி'யின் இறுதிக்கிரியையே நினைவூட்டுகிறது.

இலங்கை பெரும் இன வன்முறைக்கு உட்பட்டிருந்த 1983/1984 காலப்பகுதியில் கொழும்பில் நெருக்கடியான சூழ்நிலையில் காலமான சி.வி. வேலுப்பிள்ளையின் இறுதிக்கிரியைகள் ஊரடங்கு நேரத்தில் கொழும்பில் நடைபெற்றுள்ளது. பின்னர்

அவரது 'அஸ்தி' மடகொம்பரை மண்ணில் உள்ள அவரது குடும்ப புதைகுழியான 'மடகொம்பரை குமரன்' அவர்களின் புதைகுழியான 'கங்காணி' புதைகுழியில் சேர்க்கப்படுகிறது. புதைகுழி புதுவடிவம் பெறுகிறது. கங்காணியின் புதைகுழி – கவிஞனின் கல்லறையாக மாற்றம் பெறுகிறது. இந்தக் கல்லறை என் போன்ற இளைய சமூகத்துக்கு ஒரு உந்துதலைத் தருகின்றது.

அதே சிறுவனான காலத்தில் மடகொம்பரை மேற்பிரிவில் வசித்த, இப்போதும் பத்திரிகையாளராக பணியாற்றும் சி.எஸ். காந்தி அவர்களிடம் ஆங்கிலம் கற்கச் செல்வதுண்டு. அவர் வசித்த வீடு லயங்களுக்கு மத்தியில் அமைந்த தனிவீடு 'பெரியவீடு' என்றே அழைக்கப்பட்டது. அதுவே சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் பிறந்து வாழ்ந்த வீடு. 90 களில் ஒரு நாள் அரசாங்க தரப்பில் இருந்து ஐந்தாறு பேர் வருகிறார்கள். **'இந்த வீடு அரசாங்கத்துக்கு சொந்தமானது. நீங்கள் வெளியேற வேண்டும். இது கோர்ட்டு உத்தரவு'** என தமிழ் சினிமா பாணியில் அந்த வீட்டு உடமைகளை தூக்கி எறிகிறார்கள். நான் புத்தகத்தை வைத்து பாடம் எழுதும் ஒரு மரப்பெட்டியும் தூக்கி எறியப்படுகிறது. உள்ளேயிருந்து பல நூறு காகிதங்கள் காற்றில் பறக்கின்றன. கையெழுத்திலும் தட்டச்சு செய்தும் உலகின் பல பாகங்களில் இருந்தும் நாட்டில் பல பாகங்களில் இருந்தும் எழுதப்பட்டிருந்த பல்வேறு கடிதங் களும் படைப்புகளும் பொறுக்கி சேகரிக்கப்பட்டன. அவைதான் பெரிய கங்காணியின் பரம்பரையில் வந்த சி.வி.வேலுப்பிள்ளையின் உடமைகளாக எஞ்சின. அதனையே அவரது உறவினரான சி.எஸ்.காந்தி அவர்கள் பராமரித்து வந்தார்.

தூக்கியெறியப்பட்ட உடமைகளுக்கு தாங்கள் வாழும் லயத்துச்சிறையில் ஒரு அறை ஒதுக்கிறார்கள் அந்த தோட்டத் தொழிலாளர்கள். எனக்கு சிவி பற்றிய அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியது அந்த கடிதங்கள்தான். ஏன் இவ்வாறு தூக்கியெறியப் படுகிறார் என்பது அப்போது புரியவில்லை. ஆனால் சற்றே வளர்ந்த பின்னர்தான் அதன் அரசியல் தெரிய வந்தது. அரசாங்கத்துக்கு எங்கே தெரிந்தது எங்கோ ஒரு தோட்ட மூலையில் இருந்த தனது உடமை. அரசாங்கத்தில் பங்கு வகித்த பெரியாங்கங்காணி பரம்பரை தன் பெயர் தவிர்ந்த வேறு யார் பெயரும் மலையக வரலாற்றில் வந்துவிடக்கூடாது என்ற குரூரமான எண்ணத்துடன் ஏற்பாடு செய்த நாடகமே அது. ஆனாலும், அதே மண்ணில் அவரது கல்லறையை பார்த்து வளர்ந்தவர்கள் ஒரு பக்கம் இலக்கியத்திலும் மறுபக்கம் அரசியலிலுமாக செயற்பட ஆரம்பித்தோம். அவரது படைப்புகள் வாசிக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில் 'இலங்கை தேயிலைத் தோட்டத்திலே' எனும் நெடுங்கவிதைத் தொகுப்பை 2007 ஆம் ஆண்டு பாக்யா பதிப்பக வெளியீடாக மறுபதிப்பு செய்தேன். மறுபுறத்தில் சி.வி அவர்கள் செயற்பட்ட தொழிலாளர் தேசிய சங்கத்தை மீளக் கட்டியெழுப்பும் ஆலோசனையாளரானேன். திட்டமிட்டு மறைக்க முற்படும் சி.வியின் ஆளுமையை மீள நிறுவும் பணி போராட்டமாகவே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

சிவியின் பன்முக ஆளுமைகளை பின்வருமாறு பட்டியலிடலாம்.

ஆசிரியர்- அரசியல்வாதி- தொழிற்சங்கவாதி- கவிஞர்- நாவலாசிரியர்- நடைச்சித்திர படைப்பாளர்- நாட்டார் பாடல்களின் சேகரிப்பாளர்- கட்டுரையாளர் - பத்திரிகை

யாசிரியர்- சமூகத் தொடர்பாளர்.

மேற்படி துறைகளில் ஆளுமையாளராக திகழ்ந்த சி.வி. அவர்களின் சிறப்பு அவரது கல்விப்புலமை. ஆங்கலத்தில் நேரடியாக படைப்புகளை செய்யும் பணியை 1930 களியே மலையகத்தில் மேற்கொண்டுள்ளார் என்பது பெரும் வியப்புக்குரிய செய்திதான். இலங்கையை பிரித்தானியர் ஆட்சி செய்தபோது ஆங்கில வழிக்கல்வி சாதாரணமானது தான் என்ற போதும் மலையகத் தோட்டம் ஒன்றிற்குள் இருந்து ஒரு இளைஞன் அந்த நாளிலேயே கொழும்பு நாலந்தா கல்லூரிக்கு கல்வி கற்க வந்துள்ளார் என்பதும், வங்கக்கவி 'தாகூரை வாசித்து' இலங்கையின் தாகூர் என இந்திய ஏடுகள் புகழும் இலக்கை அடைந்துள்ளார் என்பதும் அவரது கல்விப்புலமையின் ஆழத்தையே காட்டுகிறது.

சி.வி. அவர்களும் தலாத்து ஓயா கே.கணேஸ் அவர்களும் சம காலத்தவர்களாக மலையக இலக்கிய பரப்பில் அடையாளம் காணப்பட்டவர்கள். இவர்கள் இருவரினதும் முக்கியத்துவம் என்னவெனில் இருவரும் ஆங்கிலப்புலமையுடன் இலக்கியப்பரப்பில் செய்ற்பட்டமை. கே. கணேஷ் அவர்கள் ஆங்கில புலமையூடாக தமிழுக்கு பல்வேறு உலக இலக்கியங்களை மொழிபெயர்த்துத்தர சி.வி. அவர்களோ ஆங்கிலத்திலேயே தனது படைப்புகளை உலகிற்கு தந்துள்ளார். குறிப்பாக 1952 ஆம் ஆண்டு அவர் எழுதிய 'In Ceylon's Tea garden' என்கிற நெடுங்கவிதைத் தொகுப்பு மலையக மக்கள் பற்றிய ஒரு காவியமாகவே அமைந்துவிட்டது எனலாம்.

பெரியாங்கங்காணி வழிவந்த சி.வி. அவர்கள் தோட்ட உத்தியோகத்தராகவோ அல்லது வட்டிக்கடை உரிமையாளராகவோ ஆசைப்படாது ஆசிரியராகவே தனது தொழிலை தொடங்குகிறார். அப்போது இருந்த போக்கிற்கு அமைவாக இந்திய தேசபக்தி சிந்தனைகளுடன் ஒரு தேசியவாதியாக, காந்திய சிந்தனைகள் கொண்ட அகிம்சாவாதியாகவே தனது பொதுவாழ்வை ஆரம்பிக்கிறார். அவரது அந்த நாளைய அவரது உடைகளும் தலையிலிட்ட குல்லாவும் அதனை உறுதி செய்கின்றன. இப்படி ஆரம்பிக்கப்பட்ட பொதுவாழ்வு அவரது நண்பர் கே.இராஜலிங்கம் அவர்களின் வழிகாட்டலுடன் அரசியல் வாழ்வுக்கு இட்டுச் செல்கின்றது. 1948 ஆம் ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்தில் அமர்ந்த ஏழு மலையகப்பிரதிநிதிகளில் ஒருவராக தலவாக்கலை தொகுதி உறுப்பினராக தெரிவு செய்யப்படுகின்றார். அதே காலப்பகுதியில் மலையக மக்களின் குடியுரிமையும் பறிக்கப்படுகின்றது என்பது இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமாகிறது.

இந்நாளில் அமைக்கப்பட்ட இலங்கை இந்திய காங்கிரசில் உள்வாங்கப்பட்ட சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் பெற்றபோது அதன் உறுப்பினராகவும் முக்கியஸ்தராகவும் செயற்பட்டுள்ளார். தொழிலாளர்களுக்காக எனச் சொல்லப்பட்ட காங்கிரஸ் அவ்வாறு செயற்படாதபோது அதிலிருந்து காலத்திற்கு காலம் அதன் முக்கிய உறுப்பினர்கள் வெளியேறத் தொடங்கினர். அப்துல் அசீஸ், வி.கே.வெள்ளையன், சோமசுந்தரம், கே.ராஜலிங்கம் போன்ற ஆளுமைகளின் வெளியேற்றத்தோடு தானும் இலங்கை தொழிலாளர் காங்கிரசில் இருந்து வெளியேற நேர்கிறது.

1965 ஆம் ஆண்டு வி.கே. வெள்ளையன் அவர்கள் தொழிலாளர் தேசிய சங்கத்தை ஆரம்பித்த பின்னர் அதில் இணைந்துகொள்கின்ற சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் வெள்ளையன் அவர்களுக்குப் பிறகும் தலைமைப் பொறுப்பை ஒரு தொழிலாளி கையிலேயே கொடுத்து ஆலோசகராக இருந்து அதனை வழிநடாத்தியுள்ளார். இறுதிவரை தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆலோசகராகவே செயற்பட்டார். அவரது கல்லறையை இன்றும் அந்த சங்கத்தினரே புனர்நிர்மாணம் செய்து பராமரித்து வருகின்றனர்.

இந்த, ஆசிரிய, அரசியல், தொழிற்சங்க ஆளுமைக்கு அப்பால் ஒரு பத்திரிகை ஆசிரியராகவும் சி.வி. அவர்களை நோக்க முடியும். 'கதை' எனும் இலக்கிய இதழின் ஆசிரியராகவும், தொழிலாளர் தேசிய சங்கத்தின் மாதாந்த இதழான 'மாவலி' பத்திரிக்கையையும் ஆசிரியராக இருந்து வழிநடாத்தியுள்ளார். இது தவிரவும் பல்வேறு பத்திரிகைகளிலும் அவரது படைப்புகளும் எழுத்துக்களும் வெளிவந்துள்ளன.

கவிஞர் எனும் ஆளுமை பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. அவருக்கு பெரும் புகழை ஏற்படுத்தியது அவரது கவிதைகள்தாம். அவரது Wishmajini, Wayferer, Tagore at A Glance, Ananda's Dream, In Ceylon's Tea Garden போன்ற நெடுங்கவிதைகளும் கவிதை நாடகங்களும் ஆங்கிலத்திலேயே நேரடியாக எழுதப்பட்டவை. அவர் தமிழில் கவிதைகள் எழுதவில்லை. 'இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே' எனும் கவிதைத் தொகுப்பு கவிஞர் சக்தீ பாலையா அவர்களினால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

நாவல் என்று வரும்போது எல்லைப்புறம் (Borderland), வாழ்வற்ற வாழ்வு, காதல் சித்திரம், வீடற்றவன், பார்வதி, இனிப்படமாட்டேன்... போன்றன. இதில் வீடற்றவன், பார்வதி, இனிப்படமாட்டேன் போன்றன நேரடியாகவே சி.வி அவர்கள் தமிழில் எழுதியவை என்பது குறிப்பிடத்தக்கது. ஏனையவை ஆங்கில மூல நாவல்கள். பொன்.கிருஸ்ணசாமி அவர்களினால் மொழிபெயர்க்கப்பட்டவை.

சிறுகதை பாணியில் அமைந்த **நடைச்சித்திரம்** எனும் இலக்கிய வடிவத்தின் ஊடாக மலையக மாந்தர்களை ஆங்கிலத்தில் Born To Labour எனும் தலைப்பில் எழுதியவர் சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள். மலையகத் தொழிலாளர்களின் வாழ்வியலை வெளிப்படுத்துவதில் இந்த நடைச்சித்திரம் முக்கிய பங்கு வகிப்பதாக பிரபல சிங்கள எழுத்தாளர் மார்ட்டின் விக்கிரமசிங்க விதந்துரைத்துள்ளார். எழுத்தாளர் மு.சிவலிங்கம் அவர்கள் 'தேயிலைத் தேசம்' எனும் பெயரில் இந்த நடைச்சித்திரத்தை தமிழாக்கம் செய்துள்ளார்.

மலையக மக்களின் வரலாற்று விபரங்களையும் அரசியல் சமூக நிலைப்பாடுகளையும் **கட்டுரைகள்** மூலம் வெளிப்படுத்தியவர் சி.வி வேலுப்பிள்ளை அவர்கள். 'நமது கதை' எனும் பெயரில் அவரால் எழுதப்பட்டு பின்னர் 'நாடற்றவர் கதை' என நூலுரு பெற்றுள்ள அவரது கட்டுரைகள் மலையக மக்களின் வரலாற்றை பேசுகின்றன.

அந்த நூலை வெளியிட்ட வைகறை பதிப்பகம் மு.நித்தியானந்தன் அவர்களும் அந்த நூலுக்கு முன்னுரை எழுதிய இர.சிவலிங்கம் அவர்களும் **'மலையகத்தமிழரின்**

இன்றைய பிரச்சினைகள்' எனும் தலைப்பில் ஈழநாடு பத்திரிகையின் 25வது ஆண்டு மலரில் சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள கட்டுரையையும் சேர்த்துள்ளனர். சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் எந்தளவுக்கு மலையக மக்கள் குறித்தும் அவர்களது பிரச்சினைகள் குறித்தும் தெளிவான சிந்தனையைக் கொண்டிருந்தார் என்பதற்கு அந்தக் கட்டுரை ஒன்றே சான்று பகரும்.

நாட்டார் பாடல்களின் சேகரிப்பாளர் என்று வருகின்றபோது அதனைச் செய்த முதல் தனிமனிதர் என்ற வகையில் சி. வி. அவர்களின் முக்கியத்துவம் மகத்துவம் பெறுகிறது. சி.வி. யின் மனித நேயத்திற்கும், தொழிலாளர் பாற்பட்ட சிந்தனைக்கும் எடுத்துக்காட்டாக அமைவன இந்த 'நாட்டார் பாடல்களின்' சேகரிப்பு. 'மலைநாட்டு மக்கள் பாடல்கள் எனும் தொகுப்பாகவும் இது வெளிவந்துள்ளது. தோட்டத்தில் லயத்தில் **'பெரிய வீட்டில்'** பிறந்த பிள்ளையாக சி. வி. வேலுப்பிள்ளை தமது முதாதை யின் வருகையயோடு பிணைந்த வாய்மொழி இலக்கியங்களை தொகுக்கவேண்டும் என்ற மனப்பாங்கு கொண்டவராகவே வளர்ந்துள்ளார்.

தொழிலாளர்கள் தமது உடல் உழைப்பு மீது மட்டுமே நம்பிக்கை வைத்து கடல்கடந்து பிழைப்பு தேடிவந்தபோது தங்களுடன் கூடவே கொண்டு வந்த நாட்டார் பாடல்களே. இற்றை வரைக்குமான மலையக இலக்கியத்தின் ஊற்றுக்கண்ணாக திகழ்கின்றது. அந்த நாட்டார் பாடல்களை தொகுக்க வேண்டும் என்கிற சி.வி.யின் எண்ணம் போற்றுதற்குரியது. அவர் சாதாரணமாக மேடையில் பேசும் பொது இந்த நாட்டார் பாடல்களையும் அதன் அர்த்தங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்வாராம். அதேபோல் சந்தோஷமான பொழுதுகளில் இந்த நாட்டார் பாடல்களை பாடச்சொல்லி நடனமாடி மகிழ்வாராம் என அவருடன் கூடவே நாட்களைக் கழித்த மாத்தளை ரோகிணி (த. அய்யாத்துரை) அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

'இனிப்படமாட்டேன்... என்கிற நாவலுக்கு அவர் முன்னுரை எழுத விளைந்த போது குறிப்பிடும் சி.வி. அவர்கள் எழுதியுள்ள வரிகளை இங்கு குறிப்பிடுவது பொருந்தும் என நினைக்கிறேன். 'எனது இளம் பராயத்தில் மாலை வேளைகளில் எனது பாட்டியின் அருகில் இருந்தவாறே கதைகளைச் சொல்லுமாறு நச்சரிப்பது எனது வழக்கம். பாட்டியும் எனக்கு எண்ணற்ற கதைகளை மறுக்காமல் சொல்லியிருக்கிறார். இருந்தும் ஒவ்வொரு முறை கதை சொல்லும் முன்பும் அவள் மெல்ல முனகிக் கொள்வது வழக்கம்...

'...ம்...ம்... நான் பொறந்த கதைய சொல்வேனா... இல்ல நான் பட்ட கதைய சொல்வேனா...' என்று.

அன்று அவளின் அந்த புலம்பலுக்கு நான் எந்த அர்த்ததையும் கண்டேனில்லை. ஆனால் இன்றோ அது அவளது குரலாக மாத்திரமின்றி ஒரு சமூகத்தின் குரலாகவும் எனக்குப்படுகின்றது. இன்று கதை கூற வரும் நானும் பாட்டியில் இருந்து சற்று வேறுபட்டு... இனிப்படமாட்டேன்... என்று கதை சொல்ல வருகிறேன் போல தோன்றுகிறது. என எழுதிச் செல்கிறார் சி.வி. தனது முதாதையர் பட்ட அவலத்தை நான் இனிப்படமாட்டேன்... என நெஞ்சுறுதியை உருவாக்குவதாக அமைந்துள்ளது அவரது தலைப்பு.

இத்தகைய இலக்கிய நெஞ்சத்தோடு எழுந்த சி.வி.யின் எழுத்துக்களும் படைப்புக்களும் வேறு சமூகத்தினருக்கும் சர்வதேசத்தக்கும் சென்றடைய வேண்டும் என்பதில் சி.வி. அவர்கள் காட்டியிருக்கும் அவரது பண்பட்ட ஆளுமையை அவரை ஒரு 'சமூகத் தொடர்பாடலாளர்' எனும் ஆளுமையாளராகவும் பார்க்கத் தூண்டுகிறது.

மேலே காட்டப்பட்ட பல்வேறு ஆளுமையாக தனது செயற்பாடுகளை பிற சமூகத்தக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துச் செல்ல அவர் கொண்டிருக்கக்கூடிய கடிதப்பரிமாற்றங்கள் பெரும் ஆதாரங்களாகவுள்ளன. குறிப்பாக இந்தியாவில் டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற வடமாநிலங்களில் இருந்தும் சென்னையிலிருந்தும் வெளிவரும் பல்வேறு பத்திரிகைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் தனது படைப்புக்களையும் அந்த படைப்பின் உள்ளடக்கம் பற்றிய ஒரு விளக்கக் கடிதத்தையும் சி.வி. அவர்கள் அனுப்பியுள்ளார். அவ்வாறு அவர் எழுதுகின்ற கடிதங்களில் தனது படைப்புகள் சுமந்துவரும் மக்கள் கூட்டத்தின் அவல வாழ்வு தொடர்பாக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனும் வேண்டுகோளை அவர் முன்வைக்கத் தவறவில்லை. அத்தகைய கடிதங்களுக்கு பதிலாக அவர் பெற்ற கடிதங்களும் சி.வியின் படைப்புகள் அந்த தரப்பினரை எவ்வாறு உணரச்செய்துள்ளது என்பதை எடுத்துச் சொல்வதாக உள்ளது.

இந்தியாவின் ஜக்மோகன், வாச்சானி பி. லால் போன்ற பத்திரிகை ஆளுமை களுடனும் பேராசிரியர் வி. சூரிய நாராயணன், பேராசிரியர் எஸ். ராமகிருஸ்ணன், திருமதி. லக்ஸ்மி கிருஸ்ணமூர்த்தி போன்றோருடன் அதிகளவான கடிதப் பரிமாற்றத்தை மேற்கொண்டுள்ளார். புகழ்பெற்ற ஓவியரும் கவிஞருமான 'ஜோர்ஜ் கீற்' அவர்கள் நெருங்கிய நட்புடன் சி.வியுடன் கடிதப்பரிமாற்றங்களைச் செய்துள்ளார்.

புகழ்பெற்ற எழுத்தாளர் மார்ட்டின் விக்கரமசிங்க அவர்களுடன் தமது படைப்புகள் குறித்த அதிகம் கருத்து பரிமாறியுள்ளார். சி.வி. யின் Born to Labour தொடர்பில் கருத்து தெரிவித்திருக்கும் மார்ட்டின் விக்கிரமசிங்க அவர்கள் 'தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் குறித்த முக்கியமான பதிவு' என பாராட்டியுள்ளார்.

அதேபோல், கலாநிதி குமாரி ஜயவர்தன, ஆன் ரணசிங்க, ஜெஸ்மின் குணத்திலக்க போன்ற ஆளுமைகளுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. தனது படைப்புக்களை நூலுருவாக்கம் செய்வது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் இருந்த திரு. பத்நாப அய்யருடனும், மு.நித்தியானந்தனுடன் அதிகமான தொடர்புகளை மேற்கொண்டுள்ளார். இனிப்படமாட்டேன் நாவலை இந்தியாவில் வெளிக்கொணர சிதம்பர ரகுநாதன் அவர்களுடாக அந்தனி ஜீவா அவர்கள் எடுத்த முயற்சிகள் தொடர்பாக கடிதங்கிளல் பிரஸ்தாபித்துள்ளார். இந்தக் கடிதப்பரிமாற்றங்களின் போது the Hundredth day' மற்றும் Human Cargo போன்ற படைப்புகள் பற்றி எழுதியுள்ளார். Human Cargo என்ற படைப்பின் ஒரு பகுதியை பேராசிரியர் கைலாசபதி அவர்களுக்கு பிரசுரத்துக்கு முன்னான வாசிப்புக்காக அனுப்பியதாக ஒரு கடிதம் கூறுகிறது.

இந்த கட்டத்தில் சி.வி. கொண்டிருந்த அரசியல் தொழிற்சங்க தத்துவார்த்தத் துடன் ஒப்பிடும்போது மார்க்சிய முற்போக்கு சிந்தனைகளில் தீவிரமாக இருந்த பேராசிரியர் கே.கைலாசபதி அவர்களுடனான உறவு முக்கியத்தும் உடையது.

அவர்களுக்கு இடையேயான உறவு மிகவும் நெருக்கமானதாக இருந்துள்ளதை தொடர்பாடலை வைத்து புரிந்து கொள்ள முடிகின்றது. சி.வியின் பல்வேறு படைப்புகள் குறித்தும் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் கருத்துக்களை பரிமாறியுள்ளமை மாத்திரமின்றி அவற்றை வெளியீடு செய்வதற்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை தெரியவருகின்றது.

1981 ஆம் ஆண்டு சி.வி. அவர்களுக்கு பேராசிரியர் கைலாசபதி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தானும் நண்பர்களும் இணைந்து யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்திருக்கும் சீன எழுத்தாளர் லூசுன் அவர்களின் நூற்றாண்டு நிகழ்வில் (26.09.1981) 'நினைவுப் பேருரையாற்ற' அழைப்பு விடுத்துள்ளார். இன்னுமொரு கடிதத்தில் சி.வி அவர்கள் விழாவுக்கு வந்து உரையாற்றியதையும் அதில் பெருமளவான இளைஞர்கள் கலந்துகொண்டதாகவும் சி.வியின் பதில் பதிவு செய்கின்றது. மலையகத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அந்த நாளில் 'நினைவுப் பேருரைக்காக' சி.வி அழைக்கப்பட்டுள்ளார் என்பது சிவியின் ஆளுமையை காட்டி நிற்பதாகவுள்ளது. அதேபோல 1982 ஜூலை 7 ஆம் திகதி சி.வி அவர்கள் மு.நித்தியானந்தன் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் 'யாழ்ப்பாணத்தில் விழா எடுக்க சீன கொமியுனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு.சுப்பிரமணியம் என்னிடம் கூறினார். அதோடு திரு. நடன சபாபதியும் அதுபற்றி என்னிடம் கூறினார்' என எழுதியுள்ளார்.

இந்த தொடர்பாடல்கள் மூலம் சி.வி அவர்கள் இடதுசாரி கோட்பாட்டாளராக இல்லாதபோதும் இடதுசாரி மாக்சிய, கம்யுனிச செயற்பாட்டாளர்கள் இடையே நெருக்க மான உறவு கொண்டிருந்ததை அறிய முடிகின்றது. அவரது இலக்கிய படைப்புகளின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக இடதுசாரி தோழர்களும் உறவுகளைப் பேணியுள்ளமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

மலையக மக்களின் வருகையையும் வரலாற்றையும் ஆங்கிலத்தில் பதிவு செய்துள்ள Donovan Mouldrich அவர்கள் சி.வியின் Born to Labour தன்னை கண்ணீரில் ஆழ்த்தியாதாக குறிப்பிட்டுள்ளார். 1988 ஆம் ஆண்டு Donovan Mouldrich அவர்கள் திருமதி வேலுப்பிள்ளைக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். I had the privilege of knowing your husband for many years. He encouraged me in the writing of Two books about the plantation workers.

அதேநேரம் தனது நூலுக்கு எழுதியுள்ள முன்னுரையில்

'Mr.Vellayan who killed himself through overwork died on 2nd November 1971 at the age of 52. Mr.Velupillai died on 19 November 1984 at the age of 71. I hope this Book and its sequel on the tea workers will help to perpetuate their lifelong dedicated service to the working class movement.'

எனக் கூறி தனது நூலை அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார். பறங்கிய இனத்தவரான டொனவன் மோல்ரிச் அவர்களை மலையக மக்கள் சார்ந்து வரலாற்று பதிவை எழுத வைத்த சக்தி சி.வி.யின் ஆங்கில எழுத்துக்களுக்கு இருந்துள்ளமை இங்கு அவதானிக்கத்தக்கது.

எது எவ்வாறு அமைந்த போதும் சி.வி.அவர்களது எழுத்துக்களும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டதாக இருக்கவில்லை. நாடற்றவர் நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள இர.சிவலிங்கம் அவர்களும், 'சி.வி.யின் இலக்கிய நோக்கு - காலமும் கருத்தும்' எனும் தலைப்பில் ஆய்வாளர் லெனின் மதிவானம் அவர்கள் எழுதியுள்ள விமர்சன குறிப்பிலும் ஏறக்குறைய ஒரே விதமான விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது சி.வி.யின் எழுத்துக்கள் மலையக வாழ்வியலின் துன்பியல் அம்சங்களை முன்னிறுத்திய அளவுக்கு அவர் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்த போராட்டங்களையோ முனைப்புற்ற மக்கள் எழுச்சிகளையோ அவர் பதிவு செய்யவில்லை என்பதுதான் அந்த விமர்சனமாகும்.

இர.சிவலிங்கம் தனது விமர்சனத்துக்கு தானே சொல்லும் பதிலாக இவ்வாறு எழுதுகிறார். 'தொழிற்சங்க வாழ்க்கையில் சுரண்டும் சக்திகளை இனம் கண்டும் அவற்றை வெல்ல முடியாமல் தாமாகவே ஒதுங்கிச் செல்லவேண்டிய அனுபவத்தைப் பெற்ற கவிஞனின் கவிதைகளில் வேதனையையும் விம்மலையும்தான் காண முடியுமே தவிர எக்காலத்தையும், அறைகூவலையும் காணமுடியாது போனதில் வியப்பில்லை' என்கிறார்.

அதேநேரம் 1971 ஆம் ஆண்டளவில் மாத்தளையில் நடைபெற்ற பிராந்திய இலக்கிய மாநாட்டில் மலையக இலக்கியம் குறித்த கட்டுரை ஒன்றை வாசித்த சி.வி.வேலுப்பிள்ளையின் இலக்கிய பணிகள் பற்றி குறிப்பு ஒன்றை எழுதியிருக்கும் திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் இவ்வாறு தெரிவிக்கின்றார்.

CV Velupillai writes for the last 35 years and yet he says that he is not a poeat nor a writer,

'the subject I have chosen made me what I am'

சி.வி அவர்கள் தானே தன்னைப்பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பீடு பற்றி எழுதியிருக்கும் கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் எழுதியிருக்கும் இந்தக் குறிப்பு முக்கியமானது. அதேநேரம், 1982 ஆண்டு June 15 ஆம் திகதி பேராசிரியர் கைலாசபதி அவர்களுக்கு எழுதியிருக்கும் கடிதம் ஒன்றில் சி.வி. அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'The wayfarer verses which you have read were written in 1946 when I led the famous Kneversmere Harthal of 75000 workers in Hatton Region'

'In Ceylon's Tea Garden was written during and after the 1952 satyagragaha performed before the prime ministers office.

எனவே, அவரது நோக்கில் தானே முன்னின்று வழிநடாத்திய தொழிலாளர் ஹர்த்தால் ஒன்றை முன்னிறுத்தி எழுதிய 'வழிப்போக்கன்' என்கிற கவிதை நாடகம் மற்றும் குடியுரிமை பறிப்புக்கு எதிராக தான் பங்குகொண்ட, பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்ற சத்தியாகிரக போராட்டத்தினையும் (தேயிலைத் தோட்டத்திலே) தான் படைப்பாக்கியுள்ளதாகவே தான் கருதுகின்றார். அவரது பார்வையில் அவர் தனது சமூகத்திற்கான போராட்டத்தை பதிவு செய்துள்ளதாகவே கருதுகின்றார் என்று

கொள்ளலாம்.

அவரும் ஒரு தொழிற்சங்க, அரசியலைச் சார்ந்தவர் என்றவகையில் அவர் சாராத அரசியல், தொழிற்சங்க பண்பாட்டு இயக்கங்களின் செயற்பாடுகளையோ போராட்டங்களையோ குறிப்பிடுவதில் இருந்து தன்னை தவிர்த்துக்கொண்டிருக்கலாம். இதனை ஒரு இலக்கிய நேர்மையாக கொள்வதா? அல்லது இருட்டடிப்பாகக் கொள்வதா என்பது விவாதத்துக்கு உரியது.

எவ்வாறு அமைந்தபோதும் சி.வி அவர்களே எழுதி வைத்ததுபோல்

"ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும்
ஏறிமிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்"

என மலையக மக்களின் நிலைமையை அந்த அந்த கவிஞனின் கல்லறையை பார்த்து வளர்ந்த பல ஆளுமைகளை மடகொம்பரை மண் கண்டுள்ளமை சி.வியின் இனிப்படமாட்டேன்.... என்ற கனவின் பெறுபேறாகக் கொள்ளலாம். சிவி வேலுப்பிள்ளை அவர்களுக்குப்பின் இ.தொ.கா வில் இருந்து எம்.எஸ். செல்லச்சாமி, ரமேஸ் போன்ற அரசியல் வாதிகளும் மலையக மக்கள் முன்னணியில் இருந்து வி.டி.தர்மலிங்கம் எனும் கல்வியியல், கலை இலக்கிய அரசியல் ஆளுமையும் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் உபபீடாதிபதியான செல்வராஜா போன்ற கல்வியியல் சமூக கலை, இலக்கிய ஆய்வாளர்களையும் தொழிலாளர் தேசிய சங்கத்தை மீளக்கட்டியெழுப்பியதில் பங்கேற்று பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழும் திகாம்பரம் போன்ற அரசியல் வாதியும் உருவாக்கித் தந்த மண்ணாக மடகொம்பரை மண்ணின் மைந்தர்களான எங்களுக்கெல்லாம் **'ஹீரோவாக'** திகழும் சி.வி.வேலுப்பிள்ளையின் அர்ப்பணிப்பான வாழ்வும் பணியும் இன்று 100 வது ஆண்டில் நினைவு கூறப்படுவதுபோல் இன்னும் பல நூறு ஆண்டுகள் நினைவுகூறப்படுவது திண்ணம்.

☼

சி.வி. ஆளுமையின் அடையாளம்

– துரைசாமி நடராஜா

ஆளுமை என்பது பலவாகும். அந்தவகையில் சி.வி. என்பதும் ஒரு ஆளுமை யாகும். பல்வேறு ஆளுமைகளை தன்னகத்தே இருத்தி செயற்பட்டவர் சி.வி. என்கின்ற சி.வி. வேலுப்பிள்ளை ஆவார். பல துறைகளில் முத்திரைப் பதித்த இவர் வரலாற்றில் முக்கிய இடம்பிடித்த மனதராக விளங்குகின்றார்.

கவிஞர், எழுத்தாளர், தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி என்று பல்துறைகளில் கால்பதித்த சி.வி. அநீதிக்கு துணைபோகாதவர். தான்கூறும் கருத்தைச் செயற்படுத்த முனைபவர். சொல் வேறு செயல் வேறு என்று சமகாலத்தில் வாழ்பவர்களை அதிகமாகக் காண்கின்றோம். அந்த நிலையில் இருந்தும் மாறுபட்ட சி.வி. சொல், செயல் என்ற இரண்டிலும் ஒருமித்த போக்கினைக் கொண்டிருந்தார். தொழிற்சங்கத் துக்காக மக்கள் என்ற நிலைபாட்டில் இருந்தவர்களுக்கு மத்தியில் மக்களுக்காகவே தொழிற்சங்கம் என்ற கோட்பாட்டை கடைப்பிடித்து மக்களின் நலன்களுக்காக சி.வி. பாடுபட்டார்.

இலங்கை இந்தியன் காங்கிரஸ், இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிலாளர் யூனியன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அதன் அரசியல் பிரிவான இலங்கை ஜனநாயக காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் என்பவற்றின் ஊடாக அளப்பரிய சேவைகளை முன்னெடுத்தமை சி.வி.யையே சாரும். தொழிற்சங்கத்தின் ஊடாக மக்களுக்கு உச்சக்கட்ட சேவையினை பெற்றுக்கொடுப்பதில் வல்லவராக சி.வி. திகழ்ந்திருக்கிறார்.

பல போராட்டங்களின் மூலம் மக்களின் உரிமைகளுக்கும் வித்திட்டார். சத்தியாக் கிரக போராட்டம் (1952), டயகம போராட்டம் (1956) உள்ளிட்ட பல போராட்டங்கள் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன.

எழுத்து ஒரு தனிக்கலை. அது தன்னை தூய்மையோடு அணுகி செய்ய முனைவோருக்கு கைவரும் கலையாகின்றது என்பார்கள். அந்தவகையில் எழுத்தை தூய்மையோடு அணுகி சமூகத் தொண்டு செய்ய முற்பட்டவர்கள் வரிசையில் சி.வி.க்கு எப்போதும் ஒரு தனியிடம் உண்டு. மலையக மக்களின் வாழ்வியல் போக்குகளையும், பிரச்சினைகள் மற்றும் நெழிவு சுழிவுகளையும் தன் எழுத்தின்மூலம் சி.வி உலகறியச் செய்தார். ஆங்கில மொழியின் மீதான ஆளுமை இதற்கு அவருக்கு கைகொடுத்திருக் கின்றது.

புகழ்ப்பெற்ற ஆங்கில பத்திரிக்கைகளான இல்லஸ்ரேட்டர் வீக்லி, ட்ரிமியூன், மெட் ராஸ் மெயில், டைம்ஸ் போன்ற பல பத்திரிக்கைகள் சி.வியின் கட்டுரைகளை பிரசுரித்து அவரது சமூக உணர்வுக்கு வலுசேர்த்தன. தமிழில் எழுதுவதைவிட ஆங்கிலத்தில்

எழுதுவதால் மக்களின் பிரச்சினைகளை தேசிய ரீதியிலும், உலகலாவிய ரீதியிலும் எடுத்துச் சொல்ல முடியும் என்பதோடு இந்நிலை உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்கவும் உந்துசக்தியாக அமையும் என்பதுவும் சி.வியின் நிலைப்பாடாக இருந்தது.

"கவிதை எனக்கொரு கைவாள் - மார்புக்
கவசம் எனக்கு வாய்மை
புவியினில் தீமைகள் வீழ – நான்
போர்ச் செய்யும் ஒரு படைவீரன்"

என்றான் பாரதிதாசன். தமிழ் இலக்கியத்தில் கவிதையின் மாண்பு அளப்பரியது. கவிதையினால் பலர் வசப்படுகின்றபோது கவிதையை தன்வசப்படுத்தி சமூக நிலைகளை எடுத்தியம்பவும் சி.வி. தவறவில்லை. "இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே..." என்ற கவிதைத் தொகுதி சி.வி.யின் கவிதா ஆளுமைக்கு ஒரு சான்றாக உள்ளது. சி.வி. எந்தநிலையில் இருந்தபோதும் என் சமூகம், என் மக்கள் என்ற பஞ்சத்தை கைவிட்டு அந்நியப்பட்டு நிற்கவில்லை.

"புழுதிப்படுக்கையில் புதைந்த என் மக்கள்
போற்றும் இரங்கல் புகழ்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை
பகுந்தவர் நினைவுநாள் பகருவாரில்லை"

என்று தான்சார்ந்த மக்கள் சமூகத்தின் யாதார்த்தத்தை உணர்வுடன் இவர் சித்தரித்துக் காட்டியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. காதல் எந்தவொரு கவிஞனையும் விட்டு வைப்பதில்லை. சி.வி யும் இதற்கு விதிவிலக்காகிடவில்லை. அவரது கவிதைகளில் காதல் உந்திச் சென்றவேளையில் அதற்கு முற்றுப்புள்ளி வைத்து தன் சமூகம் சார்ந்த கவிதைகளை படைப்பதில் அவரது கவனம் திரும்பியது. மலையக மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறி பரிகாரம் வேண்டிநிற்கும் பாணியில் அவரது பல கவிதைகள் அமைந்திருந்தன.

இரவீந்திரநாத் தாகூரில் கவரப்பட்ட சி.வி. தாகூரையே தனது ஆசானாகவும் ஏற்றுக் கொண்டார். தாகூர் இலங்கைக்கு வந்தபோது தனது முதல் கவிதை நாடகத்தை சி.வி. தன்னிடம் சமர்ப்பித்தார்.

சி.வி.யின் சிந்தனைகள் மலையக மக்களின் எழுச்சிக்கு உந்துசக்தியாக அமைந்தன. ஒரு கவிதையோ அல்லது கட்டுரையோ எழுதிவிட்டு நானே கவிஞன், நானே எழுத்தாளன் என்று மார்தட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு மத்தியில் அனைத்தை யும் சாதித்துவிட்டு அமைதியாக இருந்த பண்பானது சி.வி.க்குச் சொந்தமானது.

மனிதநேயம் அருகிச் செல்லும் காலக்கட்டத்தில் மனித நேயத்தை ஆயுதமாகக் கொண்டு வாழ்ந்து சாதனைகளை சாதித்துக்காட்டிய பெருந்தகையாக சி.வி. காணப்படுகின்றார். மலையக மக்கள் கவிமணி என்று சிறப்பித்துக் கூறப்படும் சி.வி. ஒரு வரலாறாகும்.

"வாழ்பவர்கள் எல்லோரும் வரலாறு ஆவதில்லை.
வரலாறு ஆனவர்கள் எல்லோரும் தனக்காக வாழ்வதில்லை"

என்ற கூற்றுக்கு இணங்க சி.வி. தனக்கென வாழாத பெருந்தகை. அதனால் அவர் வரலாறு ஆனார். ☼

எங்களோடும் சி. வி. சில நாட்களி

– மல்லிகை சி.குமாரின் ஓர் அனுபவப் பகிர்வு

அப்பநான் சின்னப் பொடியன். மூனோ நாலோ படிச்சிக்கிட்டிருந்தேன்.

"ஏய் கடைக்குப் பொயிட்டு வர்றியா...?"

"சரி போறேன் போய் வந்தா என்னா தருவீங்க?"

"சீனி போல வாங்க சல்லித்தர்றேன்..."

"சல்லி வேணா..."

"பிறகு என்ன வேணும்?"

"மாமா கொண்டாந்து வச்சிருக்கிற கல்கி தீபாவளி மலரை எடுத்துக் கொடுங்க. அதநான் பார்க்கணும்."

"நீ கிழிச்சிட்டா... அப்புறம் மாமா என்னத்தானே ஏசும்..."

"அப்ப நான் கடைக்குப் போகல்ல..."

"சரி எடுத்து தர்றேன்... நீ கடைக்கு போய் ஒரு தேங்கா வாங்கிட்டு ஓடிவா..."

ஓடிப்போய் வாங்கி வந்தேன். கல்கி மலரை பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் அப்போது எனக்கு.

"இந்தா கிழிக்காம பாரு..." என் கையில் கல்கி மலர் கிடைத்தது. மலரை இரண்டு கைகளையும் நீட்டி வாங்கும்போதே கனமாக இருக்கும். படங்கை விரித்துப்போட்டு அதன்மேல் மலரை வைத்துக்கொண்டு மலரை ஒவ்வொருபக்கமாக புரட்டிப் புரட்டிப் அதிலுள்ள படங்களை ஓவியங்களை வியந்து பார்ப்பேன். எவ்வளவு அழகான ஓவியங்கள். மணியம், சந்திரா, கனுதேசாய், ராஜம், சபா... என்று எத்தனையோ பேர்களின் கைவண்ணங்கள்.

பின்னாலிருந்து என் முதுகில் தட்டும் என் மாமா....

"ஏய் படத்தை மட்டும் பார்க்காத. அதிலுள்ள கதைகளையும் வாசிக்கப்பாரு. பாப்பா மலர் பக்கம் நல்ல கதைகள் இருக்கு. புரட்டி அதையெல்லாம் வாசி என்று என்கொரு உந்துதலை தந்தவர். அடுப்படியில் இருக்கும் அத்தையைப் பார்த்து...

"நான் ஜில்லா வரைக்கும் பொயிட்டு வர்றேன். இன்னிக்கு ஜில்லாவுக்கு வேலுப்பிள்ளை வரப்போறாரு. நான் வர இருட்டாகும்...." என்று சொல்லிவிட்டு ஒரு பீடிய பற்ற வைத்து இழுத்தப்படி அவர் முன்னாய் போக அவர் பின்னால் இன்னும்

சிலரும் போவது வாசலில் தெரிந்தது.

"மாமா போவுதே.. அந்த வேலுப்பிள்ள யாரத்த...?" மலரில் படங்களை பார்த்தப்படியே அத்தையிடம் கேட்டேன்.

"அவரு நம்ம ஜில்லாத் தலைவரு..." (அப்போதெல்லாம் சங்க காரியாலயத்தை ஜில்லா என்றுதான் அழைப்பார்கள்) என்று சொன்னதோடு இல்லாமல் போஸ்காட் அளவில் உள்ள ஒரு அட்டையையும் எடுத்துவந்து

"இதுதான் வேலுபிள்ளை" - என்று சிவியின் படம் அச்சிட்டிருந்த அட்டையைக் காட்டினாள்.

கை சின்னத்தோடு ஆன ஒரு தேர்தல் பிரசார விளம்பர அட்டை அது. அண்மையில் அமரர் சாரல்நாடன் எழுதிய "சி.வி வேலுப்பிள்ளை" என்ற நூலின் முகப்பட்டையில் உள்ள படத்தைப் பார்த்ததும் எனக்கு அன்று பார்த்த அந்த சி.வியின் புகைப்படந்தான் நினைவுக்கு வந்தது.

மாமா சி. வி. யைப் பற்றி சொல்லும்போது... அந்தக் காலத்தில் வேலுப்பிள்ளையை மேத்தா, குமாரவேலுவெல்லாம் "இந்தாப்பாரு ஆங்கில குஞ்சு வர்றாரு" என்றுதான் சொல்லுவார்கள். வேலுப்பிள்ளைக்கு தமிழைவிட இங்கிலீசுதான் சரளமாக வரும். அவர் தலவாக்கொல்லைக்கு (தலவாக்கலை அப்போது தலவாக்கொல்லை) வந்து பாஞ்சாலைக்கு அருகில் உள்ள சல்காரி பேக்கரியின் மேல்மாடியில்தான் இருந்தார். அங்குப் போய்தான் வேலுப்பிள்ளையை நாங்கள் அடிக்கடி சந்திப்போம். அவர் இலங்கை இந்திய காங்கிரசில் இருந்ததோடு இளைஞர்களுக்காக தலவாக்கொல்லையில் "நல் வாலிபர் நல உரிமை சங்கம்" என்ற ஒன்றை ஆரம்பித்து நகர் - நகரை அடுத்துள்ள தோட்ட இளைஞர்களை ஒன்றிணைத்து ஒரு "வாசிப்பு" திட்டத்தை ஏற்படுத்தினார். 1945 - 46 அளவில் இந்த மல்லிகைப்பூ தோட்டத்தில் உள்ள இளைஞர்களும் அதில்போய் சேர்ந்தோம். வேலுப்பிள்ளை தமிழ் நாட்டிலிருந்த அன்றைய மாத, வார புத்தகங்களை எங்களுக்கு வாங்கிக் கொடுத்து வாசிப்புத் தன்மையை ஏற்படுத்தினார். நம்மத் தோட்டத்தில் நானும் சின்ன மாமாவும் கல்கி புத்தகத்திற்கு சந்தா கட்டி எடுத்த மாதிரி தையமுத்து, பொலீஸ் வீரப்பன், செல்லையா, செல்லமுத்து எல்லாமே ஆளுக்கொரு வார இதழ்களை எடுத்தோம் என்று சொன்னது போல.

கல்வி, ஆனந்தவிகடன், தேசபக்தன், சுதேசமித்திரன், மணிக்கொடி, குமுதம், காதல், பேசும்படம், கல்கண்டு என்று பல சஞ்சிகைகள் எங்கள் தோட்டத்தில் உலா வந்ததை நான் இன்றும் மறக்கமாட்டேன்.

எனவே சி.வி. ஒரு தொழிற்சங்க - அரசியல்வாதியாக மட்டுமல்ல இளைஞர்களின் எழுச்சிக்காக கல்வியின் வளர்ச்சிக்காகவும் முன்னின்று உழைத்தவர்.

எங்கள் மாமா சொல்லுவார்...

1947 இல் வேலுப்பிள்ளை தலவாக்கொல்லையில் முதலாவது பாராளுமன்ற தேர்தலின்போது அபேட்சகராக நின்றபோது நாங்களெல்லாம் காந்திக் குல்லாய்

போட்டுக்கொண்டு அவரின் வெற்றிக்காய் உழைத்தோம். அவருக்கு எதிராய் நின்றவர்கள் பெண்களைகூட அவருக்கு எதிராக ஏவி விட்டனர். (லோகி தோட்ட மீனாட்சி உட்பட)

"காந்திக் குள்ளாய் போட்டுக் கொண்டு
காங்கிரஸ் அபேட்சகராக நிற்கும்
வேலுப்பிள்ளை வெற்றிக்காக
பாடுபடுவோம்"


என்ற பாடல் அப்பொழுது இங்கே தேர்தல் பிரசாரமாகவும் பாடப்பட்டது.

"நாம் இந்த தேர்தலில் கட்டாயம் வெற்றி பெறுவோம்" என்று நம்பிக்கை தெரிவித்த வேலுப்பிள்ளை தான் முகத்தில் வளர்த்த தாடியை தன் வெற்றிக்குப் பின் எடுத்தார். மலைநாட்டில் தமிழர்கள் எல்லாம் முதலாவது பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்து தங்கள் பிரதிநிதியாக ஏழுபேரை பாராளுமன்றத்திற்கு அனுப்பியதால் அன்றைய அரசும் மற்றும் ஏனையோர்களும் இவர்களுக்கு எதிராக செயற்பட்டு மலைநாட்டு மக்களுக்கு பிரஜா உரிமை இழக்கும் வகையில் பிரஜா உரிமை சட்டத்தைக் கொண்டுவந்து மலைநாட்டு மக்களுக்கு துரோகம் செய்தனர். இந்த துரோக செயலுக்கு எதிராக போராட்டம் நடத்தப்பட்டது. 1952 இல் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நமது தோட்ட இளைஞர்களும் கொழும்புக்குப் போய் போராட்டத்தில் கலந்துக் கொண்டதையும் வேலுப்பிள்ளைக்கும் மற்றைய காங்கிரஸ் தலைவர்களுக்கும் ஏற்பட்ட சோதனைகளையும் அவர் சொல்லிக் கொண்டிருப்பார். கேட்பதற்கு கவலையாகவும் இருக்கும். என் மாமாமார்கள் அன்று வேலுப்பிள்ளையின் தூண்டுதலால் நவீன புத்தகங்களை வார, மாத சஞ்சிகைகளை எடுத்து வாசித்தார்கள். அதனால்தான் எனக்கும் இளமையிலேயே கதைகள் வாசிக்கும் ஆர்வமும் பிறகு தொடர்கதைகள் வாசிக்கும் நிலையும் ஏற்பட்டதுடன் ஓவியம் தீட்டும் ஆர்வமும் ஏற்பட்டது. இதெற்கெல்லாம் மூலக்காரணம் சிவி வேலுப்பிள்ளைதான் என்பதை என்னால் மறக்க முடியாது. அன்றைய இளைஞர்களுக்கு சிவி வாசிப்பு ஏற்படும் வண்ணம் பத்திரிகை, சஞ்சிகைகளை தருவித்து தராமல் இருந்திருந்தால்... என் இளமை காலத்திலேயே எனக்கு வாசிப்பு தன்மை ஏற்பட்டிருக்காதுதான். கதைகள் எழுதும் ஆர்வமும், ஓவிய ஆர்வமும் வளர்ந்திருக்காது. காங்கிரஸ் பிளவுப்பட்டு அதிலிருந்த பலரும் பிரிந்தப்பின் - நடந்த ஒரு பாராளுமன்ற தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட்ட சி.வி அவர்கள் மரம் சின்னத்தில் அபேட்சகராக நின்றப்போது அவருக்கு 1947 இல் கிடைத்ததுப்போல எந்த பெரும்பான்மை வாக்கும் கிடைக்கவில்லை. அவருக்கு ஆதரவும் ஏனோ.. குறைந்துவிட்டது. அவர் எங்கள் தோட்ட ஆலய முற்றத்திற்கு பிரசாரத்திற்கு வந்தபோது சொற்பமாக சிலர் மட்டுமே கூடினோம். அவர் முதலாவது பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்தபோது தலவாக்கொல்லைக்கு பல அபிவிருத்திகளை செய்தும் இருந்தார். புகையிரத நிலைய திருத்த வேலைகள், புதிய பாடசாலை, கல்வி வளர்ச்சி... என்று பல பல சீர்த்திருத்தங்களை குறுகிய காலத்தில் அவர் செய்தும் அவர் புறக்கணிக்கப்பட்டார் என்றால் அதற்கு அவர் அங்கம் வகித்த தொழிற்சங்கத் தலைமையும் அவரை சுற்றி இருந்த சில அரசியல் வாதிகளுந்தான். அந்த பிளவுக்குப்பின் திரு. வெள்ளையனோடு சி.வி. அவர்கள் தலவாக்கொல்லை தேசிய

தொழிலாளர் சங்க காரியாலயத்திற்கு வரும்போது அவரை நானும் என் தோழர்கள் சிலரும் சந்திப்பதுண்டு. அப்போதெல்லாம் அவர் எங்கள் பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தை நினைவு கூர்ந்ததோடு என் மாமாக்களான கதிர்வேல், பழனிவேல் போன்றவர்களை மறக்காமல் கேட்பார்.

அப்பொழுது சிந்தாமணியில் வெளிவந்த என் கதைகளைப்பற்றி அவர் கருத்தும் சொல்வார். ஒருமுறை அவர் சிந்தாமணியல் முதன்முறையாக மலைநாட்டு எழுத்தாளர்களைப் பற்றி எழுதியதோடு ஒரு பட்டியலும் வெளியிட்டிருந்தார். அந்தப் பட்டியலில் என் பெயரைப் பார்த்து நான் பூரித்துப்போனேன். ஏனென்றால் என் எழுத்தார்வத்திற்கு சி.வீயும் ஒரு காரணந்தான். அவர் தலவாக்கொல்லையில் வாலிபர் நலவுரிமை சங்கத்தை ஆரம்பித்து என் மாமாக்களுக்கு நவீன வார, மாத இதழ்களை தருவித்து வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தாமல் விட்டிருந்தால்... எனக்கும் அந்த வார, மாத சஞ்சிகைகளை வாசிக்கும் வாய்ப்பு கிட்டாமல் கதை எழுத வேண்டும் என்ற ஆர்வமும் வராது இருந்திருக்கலாம். இறுதியில் இந்த இலக்கியவாதி கொழும்பில் இறந்தச் செய்திக் கேட்டு மன வருத்தப்பட்டோம். அவரின் இறப்புக்குப் பின் அவரின் உடமைகள் கொட்டும் மழையில் அவர் வாழ்ந்த வட்டகொடை தோட்ட வாசஸ்தலத்திலிருந்து வெளியே எறியப்பட்டது கேட்டு மிகவும் கவலைப்பட்டேன். அதை சி.வியின் "வீடற்றவன்" என்று ஒரு கவிதையும் எழுதினேன். கேசரியில் வெளிவந்தது. அது "மாடும் வீடும்" தொகுப்பிலும் இருக்கிறது. இதைப்பார்த்துவிட்டு சி.வீயின் மருமகனான இளைஞன் குரல் குருபரன் உருக்கமான ஒரு கடிதத்தையும் எனக்கு எழுதியிருந்தார்.

சி.வி. தலவாக்கொல்லையில் இலங்கை இந்தியன் காங்கிரஸ் செயலாளராக இருந்தப்போது பக்கத்து தோட்டங்களுக்கு போய் சுகாதாரம், வாசிப்பு, கல்வி என்பனவற்றின் வளர்ச்சிக்காகப் போதித்துள்ளார்.



தின்றதை தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றாடம் உணவிலும் புதுமை வேண்டும்
என்று பாரதிதாசனைப் போல இவரும் இங்கு
போதித்திருக்கிறார். தோட்டங்களில்
கலை வளர்ச்சிக்காகவும் சேவை செய்தவரின்
இலக்கிய முயற்சிகளை மறக்க முடியாது.
ஏனெனில் - என் இலக்கிய, வாசிப்புக்கும்
சி.வி. ஒரு வழிகாட்டியாகத்தான் இருந்திருக்கின்றார்.
இன்றும் எங்கள் வீட்டிலுள்ள கல்கி தீபாவளி
மலர்களை புரட்டிப்பார்க்கும்போது - என்
மாமாக்களின் நினைவுகளோடு சி.வி. யின் நினைவும்
வரும்.

☼

மலையக மக்களின் அடையாளப் போராட்டத்தில் சி. வி. வேலுப்பிள்ளையின் வகிபங்கு

– பெ. முத்துலிங்கம்

காலனித்துவ தோற்றத்துடன் இன அடையாளத்திற்கான போராட்டமும் எழலாயின. இன அடையாளப் போராட்டங்கள் மூன்று வகையாக வகைப்படுத்தலாம். அவையாவன

1. காலனியாதிக்கத்திற்குட்பட்ட நாடுகளின் இனங்கள் காலனியாதிக்கத்திற்கு எதிராக தங்களது அடையாளத்தினை நிலைநிறுத்துவதற்கான போராட்டம்
2. காலனித்துவத்திலிருந்து விடுபட்ட நாடுகளின் சிறுபான்மை இனங்கள் பெருபான்மையினத்தின் ஒடுக்கு முறைக்கெதிராக மேற்கொள்ளும் அடையாளப் போராட்டம்
3. காலனித்துவ நாடுகளில் காலனித்துவவாதிகளினால் குடியமர்த்தப்பட்ட இனங்கள் தமது அடையாளத்திற்காக மேற்கொள்ளப்படும் போராட்டங்கள்.

இம்மூன்றில் முதற் போராட்டம் உலக ரீதியில் பெரும்பாலும் முடிவுற்றுள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாவது வகையான போராட்டங்கள் பல நாடுகளில் இடம்பெற்று தொடர்கின்றன. இப்போராட்டங்கள் ஆயுத போராட்டங்களாவும் ஜனநாயக போராட்டங்களாவும் காணப்படுகின்றன.

இன அடையாளத்திற்கான போராட்டங்களுக்கு இரண்டு பிரதான வரலாற்று ஆதாரங்கள் அடிப்படையாக அமைகின்றன. ஒன்று மரபுரிமை (Heritage) இன்னொன்று (Pre-History) வரலாற்றிற்கு முந்தைய வரலாறு. வரலாற்றிற்கு முந்தைய வரலாறு வாய்மொழி இலக்கியங்களாக (Folk lore) நாட்டாரியலாக அடையாளப்படுத்தப்படு கின்றது. இவ்விரண்டு மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டே இன அடையாளத்திற்கான ஏனைய வரைவிலக்கணங்கள் உருவாக்கப்படுகின்றது.

இப்பின்புலத்தில் இலங்கையில் வாழும் இனங்களை நோக்கின் இலங்கையில் மிகச்சிறுபான்மையினராகவிருக்கும் பூர்வீகக்குடிகளான வேடுவர்களைத் தவிர சிங்களவர் இலங்கைத் தமிழர் தமிழ் பேசும் முஸ்லீம்கள் பர்கர், மலாய், இந்திய வம்சாவளி (மலையகத்) தமிழர் உள்ளிட்ட அனைத்து இனத்தவரும் வந்தேரு குடிகளே. இவ்வந்தேரு குடிகளில் சிங்களவர்களும் இலங்கைத் தமிழரும் முதல் வந்தேரு குடிகளாக இருந்தமையினால் அவர்களால் தமக்கென தனித்துவமான மரபுரிமையை இலங்கைத்தீவில் உருவாக்கிக் கொள்ள முடிந்தது. இவ்மக்களது மரபுரிமையானது இந்திய மரபுரிமையையும், வரலாற்றிற்கு முந்தைய வரலாற்றினைக் கொண்டிருந்த போதிலும் இவ்விரண்டு இனங்களும் தனித்துவமான ஆட்சியமைப்பு களை பல நூற்றாண்டு காலம் இலங்கையில் கொண்டிருந்தமையினால் தனத்துவமான

மரபுரிமையை உருவாக்கிக் கொள்ள முடிந்தது. ஏனைய இனங்களுக்கு இவ்வாய்ப்பு கிட்டவில்லை. ஆயினும் ஏனைய இனங்கள் தமது மரபுரிமையையும் வரலாற்றிற்கு முந்தைய வரலாற்றையும் தமது மரபுவழி தாய் நாட்டுடன் தொடர்பு படுத்தியும் தாம் குடியமர்ந்த நாட்டில் வாழ்ந்த வரலாற்றையும், தனித்துவமாக உருவாக்கிக் கொண்ட கலாசாரங்களையும் முன்வைத்து தமது அடையாளப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

இப்பின்புலத்தில் இலங்கை வாழ் இனங்களில் ஒன்றான இன்றைய மலையக மக்கள் 200 ஆண்டுகளை அண்மிக்கும் வரலாற்றினை கொண்டுள்ளதுடன் தமது தனித்துவமான அடையாளத்தை நிலைநிறுத்தும் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டுடிருக்கின்றனர். பல தசாப்பதங்கள் குடியுரிமையற்றவர்களாக இருந்த மக்கள் மிக அண்மையில் குடியுரிமையுரிமையை பெற்றபோதிலும் சட்டரீதியல் இந்திய தமிழர் என்றே அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்தியத் தமிழர் என்று அழைப்பதற்கு பதிலாக எம்மை மலையகத்தமிழர் என சட்டரீதியாக அடையாளப்படுத்துங்கள். மலையக மக்களை தனியான தேசிய இனமாக அங்கீகரியுங்கள் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றது. இக்கோரிக்கைகளை முன்வைக்கையில் தமது வரலாற்று ஆதாரங்களை முன்வைப்பது அவசியமாகின்றது. வரலாற்று ஆதாரங்களை முன்வைக்கையில் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களுடன் நாட்டாரியலின் கீழ் வரும் நாட்டார் பாடல்கள், நாட்டார் இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏட்டில் பதிவு செய்யப்பட்ட பதிவுகள் வெறுமனே தகவற் பதிவுகளாக அமைவதுடன் நாட்டுப்பாடல்களே குறிப்பிட்ட இனத்தின் வேதனைகள் வலிகள், அவலங்கள், வெறுப்புகள், எதிர்ப்புகள், வாழ்நிலை என்பனவற்றை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இவற்றினை முன்வைத்தே காலனித்துவ காலத்தில் இனங்கள் தமது தனித்துவத்தை வலியுறுத்துகின்றன.

இப்பின்புலத்துடன் நோக்கின் மலையக மக்களின் மரபுரிமையும் வரலாற்றிக்கு முந்தைய வரலாறும் தமிழகத்தை பின்புலமாகக் கொண்டிருந்தாலும் இலங்கையில் குடியமர்ந்தவுடன் மரபுரிமையிலும் வரலாற்றிலும் பரிமாற்றங்கள் ஏற்பட்டன. இவையே இன்றைய மலையக மக்களின் தனித்துவ அடையாளத்திற்கான அடித்தளங்களாகும். இத்தனித்துவ அடையாளங்கள் வாய்மொழியாகவே காணப்பட்டன. தமிழ்நாட்டின் பண்ணைகளின் கீழ் ஆண்டான் அடிமைகளாக வாழ்ந்த மக்கள் இலங்கையில் வெள்ளையரின் கீழ் முதலாளி தொழிலாளி என்ற புதிய கட்டமைப்பின் கீழ் கோப்பி மற்றும் பயிர்ச்செய்கையில் ஈடுப்பட்டனர். புதிய பயணம், புதிய வாழ்க்கைச் சூழல், புதிய உணவு முறை, புதிதாக உருவாக்கிக் கொண்ட கடவுளர்கள், (ரோத முனி, கவ்வாத்து சாமி, கொழுந்து சாமி, கம்பி முனி) என்றவாறு தனித்துவ அடையாளங் களைக் கொண்ட இனமாக பரிமாற்றம் அடைந்தனர். இவைகளே தனித்துவத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. புதிய பயணம், புதிய வாழ்க்கை முறை முதலிய வரலாறு பெரும்பாலும் வாய்மொழிப்பாடல்களாகவே காணப்பட்டன. இவ்வாய்மொழி வரலாறே இன அடையாளத்திற்கானப் போராட்டத்திற்கு அடிப்படை ஆதாரங்களாக அமைகின்றன. இத்தனித்துவ வாய்மொழி வரலாற்றை முதலில் பதிவு செய்தவர் திரு.சி.வி வேலுப்பிள்ளை. அவ்வகையில் மலையக மக்களின் அடையாளப் போராட்டத்திற்கு தேவையான முதல் தடயத்தை பதிவு செய்தவர் திரு. சி.வி.

வேலுப்பிள்ளையாவார். வாய்மொழியாக இருந்த மலையக மக்களது ஆரம்ப வரலாற்றை பதிவு செய்யாதிருப்பின் மலையக மக்களின் தனித்துவத்தை வெளிக்காட்டியிருக்க முடியாது.

உலகின் பல முன்னணி படைப்பாளிகள் தமது கன்னிப்படைப்பாக கற்பனை கலந்த புனைவுகளையே முதலில் வெளிக்கொணர்ந்துள்ளனர். பின்னரே சமூகத்தைப் பற்றிய படைப்புகளைக் படைத்துள்ளனர். அவர்களில் ஒரு சிலர் சமூக மாற்றத்திற்கான படைப்பிலக்கியங்களை படைத்துள்ளனர். இன்னும் சிலர் இருக்கும் சமூகக் கட்டமைப்புக்குள் தீர்வினைக்கானும் படைப்பிலக்கியங்களைப் படைத்துள்ள னர். திரு. சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் இவ்நியதியிலிருந்து பிறழாது பள்ளிக்கூடத் தில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே 'வீஸ்மாஜினி' எனும் புனைவு நாடக நூலை முதன்முதலில் வெளிக்கொணர்ந்தது முதல் படைப்பிலக்கியத்துள் பிரவேசித்துள்ளார். தாம் வளர்ச்சியுற்ற காலத்தில் தாம் சார்ந்த மக்களது வாழ்வியல் பற்றிய தகவல்களை கவிதைகளாகவும் விவரணக்கட்டுரைகளாகவும் சிறுகதைகளாக வும் நாவல்களாகவும் வெளிக்கொணர்ந்துள்ளார். திரு.சி.வி. அவர்களின் கவிதைகள் தகவல் தரும் / கற்பிக்கும் கவிதைகளாக (Didactic Poetry) அமைந்தன. இதுவும் அடையாள போராட்டத்திற்கான இன்னுமொரு கருவியாகும். 1960 களில் பிரஞ்ச் காலனிகளில் வாழ்ந்த கறுப்பின மக்கள் மத்தியில் தோன்றிய படைப்பிலக்கியவாதிகளும் இதேவகையிலான செயற்பாட்டிலேயே ஈடுபட்டுள்ளனர். கறுப்பின மக்களின் அடையாளப் போராட்டத்திற்கு வித்திட்டவர்களில் ஒருவரான ஏய்மே செஸ்சாயரும் தகவல் தரும் கவிதைகளையே படைத்துள்ளார். பிரஞ்ச் கம்யூனிஸ் கட்சியின் உறுப்பினராகவிருந்த ஏய்மே செஸ்சாயரின் தகவல் / கற்பிக்கும் கவிதை கறுப்பின மக்களின் அடையாளப் போராட்டத்திற்கு உந்து சக்தியாக இருந்தது. இவ்வகையில் மலையக மக்களின் வாழ்வியல் அவலங்கள் மற்றும் துயரத்தை வெளிப்படுத்தும் கவிதைகளும் ஏனைய படைப்புகளும் அடையாளத்திற்கான ஆயுதமாகின்றன.

இவற்றுடன் அடையாளத்திற்கான போராட்டத்தில் திரு. சி.வி. அவர்கள் இன்னுமொரு முக்கியமான பதிவினையும் செய்துள்ளார். திரு. சி.வி. அவர்கள் மடக்கும்புர தோட்டத்தில் பிறந்தபோதும் இலங்கையராக அடையாளப்படுத்தப்படாது இந்தியராகவும் பிரித்தானிய பிரஜையாகவுமே அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். ஆனால், சி.வி. அவர்கள் இதனை மறுத்து தான் இலங்கையன் என்ற அடையாளத்தை வலியுறுத்தியுள்ளார். 1947 இல் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பாக போட்டியிட்ட ஏழு வேட்பாளர்களில் சி. வி. மட்டுமே இலங்கையில் பிறந்தவர். ஏனையோர் இந்தியாவில் பிறந்தவர்கள். ஆனால், சி. வி.யும் பிரித்தானிய பிரஜையாகவே அடையாளப்படுத்தப்பட்டார். இவ்வடையாளப்படுத்தலை ஏற்றுக் கொள்ளாத சி.வி. தமது அடையாளம் இலங்கையர் என்பதை சட்டமன்ற கன்னியுரை யில் பதிவு செய்துள்ளார். "எனது கன்னிப் பேச்சில் நான் குறிப்பிட்டது போல இந்தப் பூமியில்தான் நான் பிறந்தேன். சூரிய ஒளியை முதலில் இங்கு தான் தரிசித்தேன். இறுதியாக என் கண்கள் மூடப்போவதும் இந்நாட்டில் தான்" (சாரல்நாடன் சி.வி. வேலுப்பிள்ளை தமிழ் சுடர்மணிகள் ப. 14). சட்டமன்றத்திலிருந்த ஏனைய இந்திய தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் அவ்வாறு கூறவில்லை. இக்கன்னி உரையின் மூலம் திரு. சி.வி. அவர்கள் இலங்கைவாழ் அண்மைய இந்திய வம்சாவளி தமிழ்

மக்கள் ஒரு தலைமுறையினரைத் தாண்டி விட்டனர், இன்றைய தலைமுறையினர் இலங்கையில் பிறந்தவர்கள் ஆகையால் அவர்கள் இலங்கையாராகவும் சமபிரஜை களாகவும் மதிக்கப்படவேண்டும், அங்கீகரிக்கபட வேண்டும் என்பதையே வலியுறுத்தி யுள்ளார்.

இந்திய வம்சாவளி தமிழரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதன் தேவையை அடையாளம் கண்ட திரு. சி. வி. அதற்கான போராட்டத்தை ஜனநாயக வழியிலேயே மேற்கொள்ள முனைந்துள்ளார். ஒரு போதும் வன்முறைப் போராட்ட முறைகளை கையாள முனையவில்லை எப்போதும் இருசாரருக்கும் வெற்றி (Win/Win) என்ற நிலைப்பாட்டையே திரு. சி. வி. கடைப்பிடித்துவந்துள்ளார். திரு. சி.வி.யின் வாழ்க்கை வரலாற்றை நோக்கும் போது ஆங்கிலக் கல்வியை பெற்றமைக் காரணமாக அவர் தோட்டத்தை விட்டு வெளியேறி தம் பூர்வீகத்தை மறைத்து ஏனைய மத்தியதர இனத்தவர்களுடன் சங்கமித்து தன்னை மறைத்துக் கொண்டிருக்க வாய்ப்பு கிடைத்தது. ஆனால், திரு சி. வி. அவ்வாறான வாய்ப்பு கிடைத்தபோதும் (அவர் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த வேற்று இன பெண்ணை திருமணம் செய்தபின்னரும் இறக்கும் வரை தம் மக்களுக்காகவே பணியாற்றினார்) அவ்வாறு செய்யவில்லை.

திரு. சி. வி. தமது மானசீக குருவான இரவீந்திரநாத் தாகூர் வழிமுறைகளையே பின்பற்றியுள்ளார். மறுபுறம் உள்நாட்டு குருவாக மலையக காந்தி என அழைக்கப்பட்ட கே. இராஜலிங்கத்தையே கொண்டுள்ளார். இரவீந்திரநாத் தாகூரும் கே. இராஜலிங்கமும் புரட்சிகர போராட்டங்களில் நம்பிக்கை வைக்காதவர்கள். இருக்கும் கட்டமைப்பிற்குள் தீர்வு காணவிழைந்தவர்கள். இவர்களை மானசீக குருவாகக் கொண்ட திரு.சி.வி.யும் அமைதி வழி செயற்பாட்டளராக இயங்கலானார்.

அடையாளப் பிரச்சினையை அடையாளம் கண்ட திரு. சி.வி. மிதவாத இணக்க அரசியலிலேயே நம்பிக்கை வைத்துள்ளார். அதுவே அவர் வெறுமனே தொழிற்சங்க நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபட காரணமாய் அமைந்துள்ளதை அடையாளம் காணமுடிகின்றது. 1947 இல் அவர் அங்கம் வகித்த இலங்கை இந்திய காங்கிரஸ் இலங்கையின் பாட்டாளி வர்க்கப் புரட்சிபற்றி பேசிய லங்கா சமசமாஜக்கட்சி மற்றும் கம்யூனிஸ்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்தது. ஆனால் திரு. சி.வி. அவர்கள் இடதுசாரி அரசியலுடன் சங்கமிக்கவில்லை. மாறாக தமது தனித்துவத்தை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். 1947 இல் சட்ட மன்றத்தில் ஆற்றிய உரையில் பின்வருமாறு கூறியுள்ளார். "இடதுசாரி குழுவில் நான் ஒரு சாதாரண உறுப்பினன் என்ற போதும் இந்நாட்டிலுள்ள மறுமலர்ச்சிக் குழுவில் நான் ஓர் அங்கத்தினன். இச்சபை அப்படி ஒரு குழு இருப்பதை அறிந்திருக்கவில்லை" (சாரல்நாடன் சி.வி.வேலுப்பிள்ளை தமிழ் சுடர்மணிகள் ப.14) சி.வி. தம் காலத்தில் இடதுசாரிகளுடன் தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளாததுடன் இடதுசாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட 1939 இல் நடந்த முல்லோயா போராட்டம், 1937 இல் நடந்த பிரேஸ்கேடில் போராட்டம், 1947 இல் நடந்த பொதுவேலைநிறுத்தம் மற்றும் 1953 இன் நடந்த ஹர்த்தால் முதலிய போராட்டங்கள் பற்றி பதிவுசெய்யவில்லை. மாறாக தோட்டத்துறையில் இலங்கை இந்திய காங்கிரஸ் மேற்கொண்ட போராட்டங்களை பற்றி மட்டுமே பதிவு செய்துள்ளார். இறக்கும் வரை மிதவாதியாகவிருந்த திரு. சி. வி. மலையக மக்களின் அடையாளத் தின்பாலே பெரிதும் கவனம் செலுத்தியுள்ளார் என்றால் மிகையாகாது. ☼

மறைந்தும் மறையாத மலையகத்தின் மாணிக்கச் சுடர் அமரர் சி. வி. வேலுப்பிள்ளை

– எஸ். முருகையா

ஆங்கிலேயரின் இரும்புக்கரங்களில் அகப்பட்டுத் தவித்த மலையகம் விடுதலைக் காக ஏக்கப்பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தகாலம் அது. உரிமை என்ற சொல்லை உச்சரிப்பதற்கே உரிமை இல்லாது சகலமும் இழந்த அடிமை வாழ்வில் நடைப்பிணங் களாய் நாட்களை நகர்த்திக்கொண்டிருந்த காலம். சரியாக இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பு எமது மலையக சமூகம் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருந்தது என்பதை விட வீழ்ந்து கொண்டிருந்தது என்பதே உண்மை. இந்த கால கட்டத்தில் தான் 1914 செப்டம்பர் 14ம் திகதி பூண்டுலோயா வட்டகொட மடக்கும்புர மேற்பிரிவில் ஒரு சராசரி தோட்டத் தொழிலாளர் குடும்பத்தில் மகனாகப் பிறந்தவர் தான் எமது நாயகன் அமரர் சி.வி. அவர்கள்

"வெள்ளத்தனைய மலர் நீட்டம் - மாந்தர் தம்
உள்ளத் தனைய உயர்வு" (குறள்)

நூறு ஆண்டுகளுக்கு பின்னரும் ஒரு மனிதனின் உணர்வு, தியாகம், கடமை, நேர்மை, கண்ணியம் கட்டுப்பாடு உயர்வு என்பவை பற்றி பேசப்படுமானால் அம்மனிதரின் உயர்வு மனித குலம் உள்ள வரை மலையென உயர்ந்து நிற்கும் என்பதைத்தான் பொய்யா மொழிப்புலவர் இப்படி கூறியுள்ளார்.

கல்வீமானாக கடமை உணர்வுடையவராக பாராளுமன்றத்தில், எமது பிரதிநிதியாக ஆங்கிலக் கவிஞராக, இலக்கியவாதியாக, தலைசிறந்த எழுத்தாளராக, ஆசிரியனாக, தொண்டனாக பல வடிவங்களில் எமது சமூகத்திற்காக குரல் கொடுத்த போதெல்லாம் தானும் அந்த சமூகத்தில் லயத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வந்ததை முன்நிறுத்தி வெட்கமோ, வேதனையோ இன்றி தான் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன் என்பதை சென்ற இடமெல்லாம் ஆணித்தரமாக உரைத்து அடையாளப்படுத்தியவர் திரு.சி.வி. வேலுபிள்ளையாவார்.

1950 ஜூலை 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அவர் பேசிய போது "தொழிற்சங்க துறையில் இருக்கும் என்னைப்போன்றவர்கள் இந்நாட்டின் தொழிற்சங்க சட்டங்கள் எவ்வளவு உலுத்துப் போனதாக நடைமுறைக்கு ஒவ்வாததாக, பழமையானவையாக இருக்கின்றதென்பதை காண்கின்றோம். அந்த சட்டங்கள் முதலாளிமாரின் கையில் கசையைக் கொடுப்பவைகளாகவும், தொழிலாளர்களை கசையடியைப் பெற்றுக் கொள்பவர்களாகவும், ஆக்கத்தான் உபயோகிக்கப்படுகின்றன என்று கூறினார். அன்று அவரது தீர்க்க தரிசனம் இன்றும் எமது சமூகத்தின் நிலைமையும், நாட்டின்

தொழிலாளர் சட்டங்களும் மாற்றமின்றி அதே நிலையில் இருப்பதையும் மறுப்பதற் கில்லை.

திரு.சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் வாழ்ந்த காலம் ஆங்கிலேயர்களின் ஆட்சி நிறைவுபெற்று நம்மை நாமே ஆளும் நல்லாட்சி கிடைக்கும் என்று எதிர்ப்பார்த்த காலம். ஆனால் ஆங்கிலேயர்கள் சென்றபின்பும் எமது சமூகம் இன்னொரு அடிமை நிலைக்கு தள்ளப்பட்டு அதே நிலை இன்றும் தொடர்வது ஒரு சாபக்கேடாகும் என்பது திரு.சி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையேற்று நடத்திய போராட்டங்கள், சத்தியாகிரகங்கள் என்பன எடுத்துக்காட்டுகின்றன.

எமது நிலையை தமிழ் கவிஞர்கள் தமிழ் கற்றோர்கள் மட்டும் புரிந்துக்கொள்ளும் வகையில் ஆற்றிய கவிச்சேவையை எமது சி.வி. அவர்கள் தனக்குள் பொதிந்துக்கிடந்த அபாரமான ஆங்கில அறிவைப் பயன்படுத்தி எமது சமூகத்தின் அவலங்களையும், ஆற்றாமையையும், துன்பங்களையும், துயரங்களையும் தமிழ் உலகைக் கடந்து உலகத்தின் பல்வேறு பாகங்களில் வாழும் மக்களும் புரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் பலநூறு கவிதைகளை ஆங்கில மொழியில் எழுதியதோடு, அவற்றை பிரசித்திபெற்ற ஆங்கில நாளேடுகளில் பிரசுரித்தும், நூல்வடிவில் வெளியிட்டும் வந்துள்ளார். அன்னாரது கவிதை தாக்கம் இந்தியா, சீனா, ரஸ்யா என்று பரந்து விரிந்தது மட்டுமன்றி 1963 ஆம் ஆண்டு ஆசிய ஆபிரிக்க கவிதை தொகுப்பில் முதலாவது இடத்தைப் பிடித்தன் மூலம் இலங்கை இந்தியா, சீனா, கொங்கோ, இந்தோனேசியா, கொரியா, சூடான், ரஷ்யா, வியட்நாம் ஆகிய பத்து நாடுகளிலும் இவரது கவிதை வீச்சு பரிணமித்தது என்று சி.வி. வேலுப்பிள்ளை என்னும் நூலில் எழுத்தாளர் அமரர் சாரல்நாடன் குறிப்பிடுகின்றார்.

தேயிலை தூருக்குள்ளே தேங்காயும், மாசியும் தேடி தாயகத்தில் வாழும், தம் குடும்பத்திற்கு வளம் சேர்க்க வந்தவர்கள் தேயிலைச்செடியின் அடியில் புதையிட்டு கிடப்பதையும், அவ்வாறு புதையுண்ட தம் தந்தையின் சிதைமேல் அவரது மகன் ஏறி நின்று கொழுந்து பறித்து வேறு யார் யாரோ வளம் பெற உழைப்பதையும், இறந்துபோன தன் தந்தைக்கு ஒரு கல்லறை கட்டி பாதுகாக்கும் உரிமைகூட கிடையாத எமது சமூகத்தின் கையறு நிலையை கண்டு கலங்கினார். அதே நிலை இன்றும் நிலவுவதுதான் வேதனையிலும் வேதனை. அவர் எழுதிய நூல்களுள், பிரசித்திபெற்ற நூலாக "தேயிலை தோட்டத்திலே எனும் நூல் கருதப்படுகின்றது என்பதை "அலை" பத்திரிக்கை ஆசிரியர் யோகராசா இவ்வாறு குறிப்பிட்டார். வெறும் தரவுகளாகவும், புள்ளி விபரங்களாகவும், இருக்கும் வரலாற்றுக்கு சி.வி.வேலுப்பிள்ளை என்ற கவிஞன் தாம் கண்டு, கேட்டு, உய்த்து, உணர்ந்ததான வாழ்நிலை அனுபவங்கள் மெல்லுணர்வும், கலையுணர்வும் கொண்ட அவரது ஆளுமையுணர்வாக உருமாறி கவிதையாக, இலக்கியமாக வெளிப்படுவதை தேயிலை தோட்டத்திலே என்ற நூலில் காண்கின்றோம். இதன்மூலம் சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் தூரத்தில் எட்டி நின்று எமது சமூகத்தின் நிலையை கண்டு கற்பனையில் கவிதைகளாக வடிக்காமல், சமூகத்தோடு தானும் ஒருவனாக வாழ்ந்து அனுபவித்த அனுபவங் களையே அவர் எழுதியுள்ளார் என்பது புலனாகின்றது.

எமது சி.வி. அவர்கள் தன்னை தோட்ட தொழிலாளர் சமூகத்தை சாந்தவர்

என்பதை எந்த இடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும், பயமின்றி, வெட்கமின்றி ஆணித்தரமாக உறுதியுடன் கூறிவந்த போதும் அவரை முழு இலங்கை நாடுமே உரிமை கொண்டாடியது என்பதற்கு இலங்கை தேசிய காங்கிரசின் முக்கிய உறுப்பினராகிய தேவ சூரியசேன நடத்திய Voice Of Lanka என்னும் ஆங்கில வானொலி நிகழ்ச்சியில் திரு.சி. வி. வேலுப்பிள்ளை அவர்களை இலங்கை கவிஞர் என்றே அறிமுகப்படுத்தி வந்தார் என்பதன் மூலம் புலனாகின்றது.

அளவுக்கடந்த ஆங்கில கவித்திறமையைப் போலவே எழுத்துத்துறையிலும், சகல விடயங்களிலும் மிகச்சிறப்பாக, தெளிவாக, விளக்கமாக எமது சமூகத்தின் நிலையை எடுத்துக்காட்ட அவர் காலத்தில் அவர் மட்டுமே எழுதிவந்தார் என்பது அவர்களின் ஆக்கங்களை வாசிப்பவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இலங்கையின் தலைசிறந்த எழுத்தாளரும், கல்விமானுமாகிய அமரர் கைலாசபதி அவர்கள் எமது சி.வி அவர்களுக்கு "மக்கள் கவிமணி" என்ற பட்டமளித்து பாராட்டும் வேலையில் ஆசிரியராய், தொழிற்சங்கவாதியாய், பாராளுமன்ற உறுப்பினராய், அரசியல் பிரமுகராய், இலக்கிய கர்த்தாவாக பத்திரிக்கை எழுத்தாளராய், நாட்டார் பாடல் ஆசிரியராய் என சகல துறைகளிலும், தனக்கே உரித்தான முத்திரையை பதித்து வந்த திரு.சி.வி அவர்கள் மலைநாட்டு பாடல்களை உண்மையாக பிரதிநிதித்துவப் படுத்தி, அதிகாரபூர்வமானதும், நம்பத்தகுந்ததுமான தொகுதியொன்றை வெளியிடும் தகுதி திரு.சி.வி.அவர்களுக்கே உண்டு என 1981 இல் கொழும்பு தமிழ் சங்கத்தில் நடத்திய பாராட்டு விழாவில் மனதார பாராட்டியுள்ளார். அன்னாரின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற உயர் பண்புகளையும். தான் வாழ்ந்த சமூகத்தை மறவாது தம்மோடு இணைத்துக்கொண்டே வாழ்ந்த பெரும் தன்மையையும், மனிதாபிமான கொள்கையையும், நோக்கும்போது அவர் நமது சமூகத்தில் தோன்றிய தலைசிறந்த தலைவர் என்பதும் இன்று எமது மத்தியில் வாழும் சிலருடன் ஒப்பிடுகையில் "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைக்கெட்ட" என்று புலம்பிய பாரதியின் குமுறலும், ஆதங்கமும் கலந்த ஆத்திரம், சமூகப்பற்றுடைய எவருக்கும் வரும் என்பதை மனசாட்சியுள்ள எவரும் மறுக்கமாட்டார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

இந்நூலை வெளியிடுவது போலவே இவ்வாறான சிறப்பும், சீர்மையும், கொண்ட எமது மலையக சமூகத்தின் ஒப்பற்ற தலைவர்களின் படைப்பை மலையகத்தில் மட்டுமன்றி உலகில் எந்த பாகத்திலிருந்தாலும், தேடி கண்டுபிடித்து சேகரித்து எமது எதிர்கால சந்ததியினர் கற்று தெளிவுரும் வண்ணம் காத்து பராமரிக்க மலையக அமைப்புக்கள் முன்வருமாயின் அது மலையக சமூகத்திற்கும், அன்னாருக்கும் செய்யும் அரும்பணி என அகிலம் போற்றும் என்பது உறுதி.

☼

சி. வி. சில குறிப்புகள்

– மொழிவரதன்

சி.வி. யின் முழுப்பெயர் கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளை என்பதாகும். ஆங்கிலேயர் இவ்வளவு நீண்ட பெயரை உச்சரிக்க சிரமப்பட்டு சி.வி.பி. என்றும் பின்னர் அது சி.வி என்றும் ஆனது என நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

14.09.1914 இல் மடக்கும்புறத் தோட்டத்தில் பிறந்த சி.வி. 1984.11.19 இல் கொழும்பில் காலமானார். சி.வி. பன்முக ஆளுமைக் கொண்ட ஒருவர். தமிழில் அவரை முதல் முதலாக மிகச் சிறப்பாக அறிமுகம் செய்தவர் அமரர் சாரல்நாடன் ஆவார். இக்கூற்றில் தவறேதும் இராது என எண்ணுகின்றேன். இந்தப் பின்னணியில் சி.வி பற்றிய விடயங்கள் வெளிவரத் தொடங்கின.

சி.வி.யின் ஆங்கிலக் கவிதைகளை தமிழ் வடிவில் கொணரவும் அல்லது சிவியின் கவிசாரத்தை தமிழ்படுத்துவதிலும் சக்தி அ. பாலையா முக்கியமானவர் எனலாம். In Ceylons Tea Gardens தேயிலைத் தோட்டத்திலே என்ற பெயரிலே 1960 இல் வெளிவந்தது சக்தி அ. பாலையா சி.வி. யின் கவிதைகளை தமிழ் வடிவம்படுத்தியதில் முக்கியமானவர் எனலாம். பின்னர் "நந்தலாலா சஞ்சிகை குழுவினரால் சில கவிதைகள் மொழிப்பெயர்க்கப்பட்டு அவ்விதழில் வெளிவந்தன".

சி.வி.யின் படைப்புகளான நாவல், கட்டுரைகளை மொழிப்பெயர்ப்பதில் பொ.கிருஸ்ணசாமியும் பங்களிப்பு செய்துள்ளார். சி.வி. ஒரு ஆசிரியராகவும் கடமைப்புரிந்துள்ளார். நாளந்தா கல்லூரியின் தற்காலிக ஆசிரியரானார் (1935) பூண்டுலோயா தாகூர் பாடசாலை ஆசியிரியர்ப் பணி (1936) தலவாக்கலை சுமண வித்தியாலயத்தில் ஆசிரியர்ப்பணி (1938) பின்னர் 1939 இல் அட்டன் மெதடிஸ்த கல்லூரியின் (தற்போதைய ஹைலன்ட்ஸ் கல்லூரி) ஆசிரியர் ஆனார். 1940 களில் தொழிற்சங்க செயற்பாடுகளில் ஈடுபடல். 1941 இல் இலங்கை இந்திய காங்கிரசில் சேர்ந்தார். பின்னர் 1956.01.01 இல் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசில் சேர்தல். 1965.05.01 தொழிலாளர் தேசிய சங்கத்தின் சேர்ந்ததுடன் இறுதிவரை அதிலேயே தொடர்ந்து பணிபுரிந்தார். (சி.வி.வேலுப்பிள்ளை - சாரல்நாடன் பக்கம் 52,53)

சி.வி. ஒரு பாராளுமன்ற உறுப்பினராக 1947 இல் தலவாக்கலையில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர். சி.வி. ஒரு நாவலாசிரியர். வாழ்வந்த வாழ்வு 1960 களில் இவர் எழுதிய முதல் நாவல் எனலாம். எல்லைப்புறம் (1962) பார்வதி (1966), வீடற்றவன் (1962), இனிப்பட மாட்டேன் (1982) என பல நாவல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவையே. சில அவரால் தமிழிலே எழுதப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

சி.வி. ஒரு கட்டுரையாளர். 1970 இல் எம்.டி. குணசேன வெளியீடாக "Bourn to

Labour" என்ற கட்டுரை நூல் வெளிவந்தது. மலைநாட்டுத் தமிழர்கள், தலைவர்கள் (வரலாறு), தேயிலை நிலத்தின் சிறு தெய்வங்கள் (ஆராய்ச்சி) மலைநாட்டுக் கடிதம் விளக்கக் கட்டுரை என்பன இவரின் மேதா விலாசத்திற்கு உதாரணங்களாகும். மலையக நாட்டார் பாடல்களில் ஈடுபாடு கொண்டவரான சி.வி.வேலுப்பிள்ளை மலைநாட்டு மக்கள் பாடல்கள் எனும் தலைப்பில் பாடல்களைத் தொகுத்து 1983 இல் வெளியிட்டார். கைலாசபதி அவர்களினால் மக்கள் கவிமணி எனும் பட்டம் சி.வி.க்கு வழங்கப்பட்டது.

சி.வி. ஒப்சோவர், டைம்ஸ் போன்ற தேசிய ஏடுகளிலும், "மெயில் இல்லஸ்டரேட்டட் வீக்லி" என்ற இந்திய ஆங்கில ஏடுகளிலும் நிறையவே ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். (சி.வி. சில சிந்தனைகள் பக்கம் 10 - சாரல்நாடன்)

சி.வி.யின் தொழிற்சங்க, அரசியற் செயற்பாடுகள் மற்றும் பிற இலக்கியச் செயற்பாடுகள் பற்றிய தேடல் இன்னும் தேவையானதாவே உள்ளது எனலாம். இக்கட்டுரை சி.வி. பற்றிய ஒரு குறிப்பையே தந்துள்ளது.

☼

துன்பியல் வரலாற்றை உலகறியச் செய்த சி. வி.

– ப. மோகன் சுப்ரமணியம்

பாட்டாளி வர்க்கம் வெள்ளை ஏகாதிபத்தயவாதிகளின் ஈவிரக்கமற்ற சுரண்டலுக்குட்பட்டிருந்த காலகட்டத்தில் அம்மக்களின் துன்பியல் வரலாற்றை உலகறியச் செய்தவர் சி.வி.! அம்மாமனிதனின் நூற்றாண்டை நினைவு கூறுவது இந்திய வம்சாவழித் தமிழர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

ஜவஹர்லால் நேரு 1939 இல் இலங்கை வந்து இலங்கை இந்திய காங்கிரஸை உருவாக்கினார். அதன் தலைவர் லெட்சுமன் செட்டியாருடனும், செயலாளர் அசிசுடனும் இணைந்து முனைப்புடன் செயல்பட்டார் சி. வி. நாற்பதுகளில் லங்கா சமசமாஜக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட பல போராட்டங்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவை. கண்டி ஹேவாஹெட்ட முல்லோயா போராட்டத்தில் உயிர் நீத்த கோவிந்தனின் தியாகம் சிவியை சிந்திக்கத் தூண்டியது. போராட்டத்தை முன்னெடுத்த இடதுசாரி இயக்கத்தின் மீது அவரது கவனம் ஈர்க்கப்பட்டது.

1947 ஜூலை 26 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற தேர்தலில் தலவாக்கலை தொகுதியில் சி.வி. வேலுப்பிள்ளை தெரிவானார். அந்த தேர்தலில் இலங்கையில் போட்டியிட்ட கட்சிகளையும் அவை பெற்ற வாக்குகளையும் இங்கு மீட்டுப்பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சி 744598
லங்கா சமசமாஜக் கட்சி 204020
போல்ஸ்விக் லெனினிசக் கட்சி 113193
தமிழ்க் காங்கிரஸ் 88449
இலங்கை இந்திய காங்கிரஸ் 72230
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 70331
தொழில் கட்சி 38932
சுவராஜ்ஜிய கட்சி 1393
ஐக்கிய இலங்கைக் கட்சி 3953
சுயேட்சைகள் 550123
பதிவு செய்யப்பட்டவை 3052814
அளிக்கப்பட்டவை 1818364

இலங்கை இந்திய காங்கிரசின் சார்பில் ஏழுபேர் பாராளுமன்றம் சென்றனர். 1947 – 1952 வரை பாராளுமன்றில் இடதுசாரிகளின் செயற்பாடுகள் அவர்களின் வாதத்திறமைகள் போராட்ட குணங்கள் சி.வி.யைப் பெரிதும் கவர்ந்தன. 1956 இல்

இலங்கை தொழிலாளர் காங்கிரசில் இருந்து அசீஸ் விலகி ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸை ஆரம்பித்தபோது அவருடன் இணைந்தார்.

பாராளுமன்றத்தில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் பீட்டர் கெனமனுடன் நெருக்கமான நட்பை பேணி வந்தார். அந்த உறவு 60 களில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயல்பட காரணமானது. கட்சிப்பணியோடு இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடிச் சங்கத்திலும் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டுள்ளார். 1965 ஆம் ஆண்டு மே மாதம் வீ. கே. வெள்ளையன் தொழிலாளர் தேசிய சங்கத்தை ஆரம்பித்தபோது சி. வி. யும் இணைந்து கொண்டார்.

இலக்கியத்துறையில் எண்ணற்ற சாதனைகளுக்கு சி. வி. சொந்தக்காரர். அந்த அளவு அரசியல் தொழிற்சங்க துறைகளில் அவரால் சோபிக்க முடியவில்லை.

தலைமை ஏற்கும் நிலை, அவர் சார்ந்த அத்தனை ஸ்தாபானங்களிலும் இல்லை என்பது நோக்கத்தக்கது. அவர் சகல தரப்பினருடனும் மனித நேயத்துடன் பண்பாகப் பழகும் தன்மை உடையவராகத் திகழ்ந்தார். 1980 இல் அவரோடு பழகும் வாய்ப்பு கிடைத்தது. தோழர்கள் அந்தனி ஜீவா, இளஞ்செழியன், ஓ. ஏ. ராமையா போன்றவர்களுடன் சி. வி. யை சந்தித்து பலதடவை உரையாடும் வாய்ப்புகள் கிடைத்தமை அரிய நிகழ்வாகும்.

எந்த ஒரு மலையக தலைவரும் செய்யாத அரும்பணிகளை பல்வேறு துறைகளிலும் சேவையாற்றி எழுபது ஆண்டுகள் தனது வாழ்வை அர்த்தமுள்ளதாக்கிச் சென்றுள்ளார். அவரது நாமம் என்றும் நினைவு கூரப்படவேண்டும்.

☼

கவிமணி சி.வி. ஓர் இலக்கிய போராளி

– கந்தப்பளை தாமரை ஏ. யோகா

மாணிக்கம் விளையும் மனங்களை மயக்கும் எம் மலைதாயின் மடியில் விளைந்த நாங்கள் எல்லோரும் அன்பாக அழைக்கும் இலக்கிய போராளி எங்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை. இவர்களின் இந்த 100 ஆவது ஜனன நிகழ்வினையொட்டி அவரைப் பற்றி எண்ணற்ற கட்டுரைகள், விவரணப் படங்கள், நூற்றாண்டு வீழா, முத்திரை வெளியீடு என்ற எண்ணற்ற பல நல்ல அம்சங்கள் அவர் எம் மலையக மண்ணுக்கு செய்து இருக்கும் சேவை, பணிகளை கொண்டு அவரை கௌரவப்படுத்தி அவரின் நூற்றாண்டு ஜனன தின வீழாவினை மலையகம் மட்டுமல்ல இலங்கை பூராகவும் வீழா அரங்கேறிக்கொண்டிருப்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

சி.வி. அவர்களின் வரலாற்றை எத்தனையோ அறிஞர்கள், கல்விமான்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த வகையில் இவரின் வரலாறுகளை நாம் ஆராயாமல் அவரின் பன்முக ஆளுமைகளை இங்கு அலசி பார்ப்போம்.

சி.வி. என்ற மகான் ஒரு கல்விமானாகவும், மக்கள் சேவகனாகவும், தொழிற்சங்கவாதியாகவும், தேர்ச்சீமிக்க ஆங்கில புலமை கொண்ட ஆசானாகவும் இருந்திருக்கும் அதேவேளை சிறந்த இலக்கிய புலமை கொண்ட மலையகத்தின் ஆஸ்தான கவிஞராகவும் தன்னை எம் மலையக மண்ணின் மணிமகுடத்தில் நிலைநிறுத்தி உள்ளார்.

நாங்கள் ஏலவே மேற்குறிப்பிட்ட அவரின் பணிகளை தொகுத்துக்கொள்ளாமல் இறுதியாக நாம் அவரின் பன்முக ஆளுமையில் குறிப்பிட்ட கவி புலமையினை அலசி ஆராய போகின்றோம்.

இலங்கை இலக்கிய வரலாற்றில் மலையக இலக்கியம் அதன் தன்மைகள் அதன் வரலாற்று பார்வைகள் எவ்வாறு இருக்கின்றது என்பதனை ஆராய முற்படும்போது சி.வி. அவர்களை தொட்டுவிட்டுத்தான் மலையக எழுத்தாளர்கள் செல்ல வேண்டும் என்ற அர்த்தபுஸ்டியாக அசைக்க முடியாத நம்பிக்கைகள் காணப்படுகின்றது. காரணம் சி.வி.யின் கவிப் புலமையும் இலக்கிய ரசனையும் அந்தளவுக்கு கலாரசனை மிக்கதாக காணப்படுவதே இதற்கு காரணமாகும்.

சி.வி வாழ்ந்த காலத்திலே மற்றுமொரு கவிஞரான தலாத்து ஓயா கணேசன் வாழ்ந்தார். இவரும் மொழிப்பெயர்ப்பு இலக்கியங்களை படைப்பதில் மிகவும் கைதேர்ந்தவராக காணப்பட்டார்.

அவற்றோடு சிறுகதை துறைக்கு கவிதை எழுதவரும் படைப்பாளிகள் எந்தளவுக்கு

புதுமைப்பித்தன் படைப்புகளுக்கு கொடுக்க வேண்டுமோ அந்தளவுக்கு கவிதை துறைக்கு கவிபாடுவதற்கு வரும் கவிஞர்கள் சி.வி. அவர்களின் எழுத்தோட்ட ஓவியங்களை வாசித்து நுகர்ந்து அதனை தொட்டுவிட்டு செல்ல வேண்டும் என இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். காரணம் அது அவரின் எழுத்துக்களால் செதுக்கப்பட்ட மலையக மக்களுக்கான மற்றும் படைப்பாளிக்கான விலைமதிக்க முடியாத "முத்துக்கள்" என்கின்றன.

இதனால்தான் சி.வி. அவர்களை இலக்கிய போராளி என்கின்றனர். எங்களுடைய மலையக இலக்கியங்களை தனித்துவமானது என கருதிய இவர் அதனை அழகியல் இலக்கியமாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

சி.வி. அவர்கள் வங்க நாட்டு கவிஞரும் இலக்கியத்திற்கு முதன் முதலில் இந்தியாவிலே நோபல் பரிசு பெற்றவருமான ரவிந்திரநாத் தாகூர் அவர்களின் கவிதை, படைப்பு இலக்கியங்களில் அதித அரவணைப்பு கொண்டார். இவரின் பாதிப்பே சி.வி படைப்பிலக்கியங்களை படைப்பதற்கு காரணமாக இருந்தது.

தாகூர் அவர்களின் ஆக்க இலக்கியங்கள் உலக தரத்தோடு கைகோர்த்தற்கான காரணம் இவரிடம் காணப்பட்ட ஆங்கில புலமையில் இவரின் படைப்புகள் காணப்பட்டதுதான் காரணம்.

அவ்வாறே சி.வி. யின் படைப்புகள் இன்றைய 21ஆம் நூற்றாண்டு சர்வதேச ரீதியாக பேசப்படகின்றது என்றால் அதற்கு காரணம் எம் மலையக மக்களின் இன்ப துன்பங்களை கண்ணீராக சுமந்து அதனை கருவாக கொண்டு அதனை ஆங்கிலத்தில் எழுதி உலக மக்களுக்கும் உலக தலைவர்களுக்கும் எடுத்து காட்டிய பெருமை இவரை மட்டுமே சாரும். ஆதலால் இவரை ஓர் இலக்கிய போராளி என குறிப்பிடுவது மிகவும் பொறுத்தமானதாகும். அதாவது "தேயிலைத் தோட்டத்திலே..." என்ற கவிதை படைப்புதான் இவரை உலகத்தோடு பேசவைத்த அற்புதமான படைப்பு. அது மட்டுமல்லாமல் பெரும் புகழ் ஈட்டி கொடுத்தது எனலாம்.

அடுத்ததாக மேலைத்தேய கவிஞரான வால்ட்விட்மின் மற்றும் ஷெல்லி போன்றவர்களால் எவ்வாறு பாரதி கவரப்பட்டானோ அவ்வாறே சி. வி. யும் தாகூர், ஜோர்ஜ்கீட் மற்றும் எட்டயப்புர கவிஞரான பாரதியாலும் வெகுவாக கவரப்பட்டார் என்பது உலகறிந்த உண்மை எனலாம்.

இங்கே நாம் ஒரு விடயத்தைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பாரதியானவன் தனது மக்களின் சமூக விடிவுக்காக பல பாடுபொருட்களை கொண்டு பல கவிதைகள் பாடினான். இதன்மூலம் மக்களை விழிப்படையச் செய்தான். அவ்வாறான ஒரு கவிதையை இங்கு தருகின்றோம்.

"ஏழையென்று அடிமையென்று
எவரும் இல்லை ஜாதியில் - இழிவு கொண்ட
மாந்தர்யென்பது இந்தியாவிலே இல்லை"

அற்புதமாக சமத்துவக் கொள்கையை பாடினான். இதனால்தான் பாரதி 21 ஆம் நூற்றாண்டின் தலைமை கவிஞன் என போற்றப்படுகின்றான். இதே சாயலைக் கொண்டு

சி.வி.யும் இவ்வாறாக பாடுகின்றான்.

"புழுதிப்படுக்கையில்
புதைந்த எம் மக்களை – போற்றும்
இரங்கற் புகழ்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் - கல்லறை இல்லை..."

பாரதிக்கும் சி.வி.க்கும் அதிகமான ஒற்றுமைகள் காணப்படுகின்றது. அதாவது சி.வி.யின் கவிதைகள் மொழிப்பெயர்க்கப்பட்டதன் பின்னர்தான் பாரதியின் கவிதைகளுடன் ஒப்புநோக்குகின்றோம்.

பாரதி தம்மக்கள் சுதந்திரமாக, சமத்துவமாக அடிமைப்படாமல் வாழ வேண்டுமேயென குறிப்பிடும் அதேவேளை சி.வி.யும் பல நூற்றாண்டுகள் கடந்தும் எம் மக்களின் வாழ்வில் விடிவில்லையே. இறந்த பிறகுகூட அவர்களுக்கு கல்லறைகூட இல்லையென இவரும் தம்சமூக மேம்பாட்டுக்காக இருட்டறையில் தூங்கிகொண்டு தம் மக்களின் அபய குரல்களை உலகுக்கு ஒலிக்க வேண்டும் என விண்ணப்பம் செய்தது.

பாரதி பாமர மக்கள் புரிந்து விளங்கி கொள்ளக்கூடிய வகையில் பாக்களையும், கவிதைகளையும் பாடினார். அதேபோன்றுதான் கவிமணியும் மலையக மக்களின் கலை, கலாசார, வீழுமிய பண்பாட்டு அம்சங்களை அவர்களின் வாழ்வியல் பதிவுகளை நாட்டார் இலக்கியங்களை அனைத்து இன மக்களும் சுவைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு படைத்திருப்பது சிறப்பம்சமாகும். அதுமட்டுமல்ல பாரதிமேல் கொண்ட அளவற்ற பாசத்தினாலும் அவரின் கொள்கையினாலும் கவரப்பட்ட சி.வி. அவரின் பெயரில் மடக்கும்புரவில் பாரதி பாடசாலை ஒன்றை அமைத்தது அவர் எம் சமூகத்தின் மேல் வைத்திருக்கும் சமூக ஈடுபாட்டை காட்டுகின்றது.

அத்தோடு கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "பிறப்பினால் எவருக்கும் பெருமை வராதப்பா, சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும் என்ற உண்மையான விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அதாவது சி.வி. அவர்கள் பிறந்ததற்கு ஏதாவது செய்ய வேண்டும் பல முனைகளில் பதிவுகளை மேற்கொண்டாலும் அவரின் இலக்கிய பதிவுகள்தான் அவர் பிறந்து வளரந்து செய்த சேவையினால் அவரை பேசுகின்றோம். சி.வி. எழுதிய கவிதைகளில் என்னை மிகவும் நெகிழ வைத்த அந்த வரிகள்

"ஆழப்புதைந்த தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும் ஏறிமிதித்து..."

இந்த வரிகளை வாசிக்கும்போது என் மனம் சலனம் அடைகிறது. என் நரம்புகள் முறுக்கேருகின்றது. காரணம் தேயிலை செடிகளோடு நாளந்தம் பேசிக்கொண்ட அந்த மனிதன் தேயிலை செடிக்கு அடியிலே புதைக்கப்படுகின்றான். அந்த பிணத்தின் மேல் ஏறி அந்த மகன் நிற்கின்றான் எனவும் அதன்பொருள் காணப்படுகின்றது.

அந்தளவுக்கு எம்மக்களின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களை அவர்களுடனே இருந்து அனுபவித்து ஏனைய மக்களும் வாசித்து நுகர்ந்து கொள்ள வேண்டும் என எளிய நடையில் கொடுத்திருப்பது சி.வி.யின் இலக்கிய கலாரசனையை எடுத்துக்காட்டுகிறது

அத்தோடு சி.வி. இன்றைய காலத்திலும் பேசப்படுவதற்கு காரணம் பல படைப்புகளை எமக்கு தந்துள்ளமையாலாகும். இனிப்படமாட்டேன், நாடற்றவர் கதை, மாமன் மகனே, வீடற்றவன் என்பன எடுத்துக்காட்டுகளாகும்.

சி.வி.யை பற்றியும், அவரின் படைப்புகள் பற்றியும் லெனின் மதிவானம், தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், மல்லிகை சி குமார், பேராசிரியர் அருணாசலம் மற்றும் எத்தனையோ கவிஞர்களும், கல்விமான்களும், புத்திஜீவிகளும், தங்களுக்கு ஏற்ற வகையில் கௌரவப்படுத்தியுள்ளனர்.

இறுதியாக இவ்வருடத்தின் முதல் பகுதியில் (2014) மலையக பெருந்தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு வீழா எடுக்கப்பட்டு அவரை கௌரவப்படுத்தியதுபோல் இவ்வருடம் எங்கள் கவிமணி அமரர் சி.வி.க்கு நூற்றாண்டு வீழா எடுத்து அவரை கௌரவப்படுத்துகின்றோம்.

☼

மலையகம் பெற்றெடுத்த மாபெரும் கவிஞன் சி. வி. வேலுப்பிள்ளை

– எஸ். இராமையா

தலவாக்கலை வட்டகொடை மடக்கொம்பரை என்றாலே அதற்கு ஓர் தனித்துவம் உண்டு. இம்மண்ணில்தான் பல்வேறு துறைசார்ந்தவர்கள் பிறந்து சாதனை படைத்துள்ளார்கள்.

கவிஞர்கள், அரசியல்வாதிகள், தொழிற்சங்கவாதிகள், ஆசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் என்று பல துறைகளில் பரிணமித்து வந்துள்ளார்கள், வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் சிறந்த முன்னோடியாக திகழ்ந்தவர் அமரர் சி. வி. என்றழைக்கப்படும் கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளை அவர்களாவார்.

பெரிய கங்காணி மகனாக பிறந்தும் தொழிலாளர் வர்க்கத்திற்காவே தமது வாழ்வை அர்ப்பணித்தவர் ஆங்கில மொழிமூலம் கல்வி கற்று, சிறந்த எழுத்தாளராக, கவிஞராக, சிறுகதை எழுத்தாளராக மிளிர்ந்தவர்.

இவரின் புலமைக்கு சான்றாக பல விடயங்களை இங்கு குறிப்பிடலாம்.

1. The Boarders Land
2. Lililess Life
3. The Holocoust

ஆகிய மூன்று நாவல்களும், Born to Labour கட்டுரை தொகுதியும், In the the garden (தேயிலைத் தோட்டத்திலே) என்ற கவிதைத் தொகுதியும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

1920 ஆம் ஆண்டுகளில் மலையக தொழிற்சங்க முன்னோடி கோ. நடேசய்யர், மலையக சமுதாயத்திற்காக தொழிற்சங்கத்தை ஸ்தாபித்து மலையக மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினார். 1930 ஆம் ஆண்டிற்கு பிறகு சி.வி. மலையகத்தில் மாற்றத்தை கொண்டுவர, அவர் தனது கவிதை கட்டுரை மூலம் பெருந்தோட்டத்துறை மக்களின் அவளங்களை எடுத்துரைத்துள்ளார்.

தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் மக்களிடையே மிகுந்த பாசம் கொண்டுள்ளார். அதனால், இந்த மண்ணிற்கு வெள்ளையர்களால் கொண்டுவரப்பட்டு, அவரை பராமரிக்கும் முறைகளையும், அவர்கள் படும் துன்பங்களையும் வெளிப்படுத்த தனது ஆங்கில கவிதை, கட்டுரை மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

இவரின் கருத்துக்களை ஆங்கிலேயரும், ஆங்கிலம் தெரிந்த சிங்களவர்களும் பெருந்தோட்டம் பற்றிய உண்மை நிலையினை அறிந்து கொள்ள முடிந்துள்ளது. இதற்கு உதாரணமாக இவரின் Born to Labour என்ற கட்டுரையை வாசித்த சண்டே டைம்ஸ் ஆசிரியர் எப்.டி. சில்வா இப்படி சொல்கிறார்.

"மலையக மக்களிடையே சோகம் ததும்பிய அழகு இருக்கின்றது. இந்த மக்களை அந்நியராக அபிப்பிராயப்படும் மக்கள், இந்த உழைப்பாளர் கூட்டத்தினரால் உருவாக்கப்பட்ட தேயிலைச் செடிகளையும், அகன்ற வாகனப் பாதைகளையும், நீண்ட ரெயில்வே பாதைகளையும், நீண்டு வளைந்த பாலங்களையும் அழிப்பதற்கு தயாராயிருக்கின்றார்களா?"

என்று கேள்வி எழுப்பும் இவர்,

"இந்த மக்களின் உழைப்பை ஏற்றுக்கொண்டோம். அதனால் ஏற்பட்ட வளத்தை அனுபவிக்கின்றோம். இந்த உழைப்பான மக்களின் உணர்வுகளை மதிக்கவும், இந்நாட்டின் தேசிய ஓட்டத்தில் அவர்களை இரண்டற கலக்கவிடவும் நாம் நம்மைத் தயார் செய்து கொள்வது அவசியம். இதற்கு இவரது "உழைக்கப் பிறந்தவர்கள்" நூல் (Born to Labour) என்று கூறியுள்ளார். (ஆதாரம் - மலையக தமிழாராச்சி மாநாடு. ஆய்வுக்கட்டுரைகள் - பக்கம் 221)

In the tea Garden (1954) என்ற கவிதைத் தொகுதியில் இவர் தமது மக்களின் துயரங்களை வெளிப்படுத்தியுள்ளார். இவரது கவிதைகளை மறைந்த மலையகக் கவிஞர் சக்தீ பாலையா மொழிபெயர்த்த நூலில் இடம்பெற்ற ஒருகவிதை, இவரின் துயரத்திற்கும் துணிச்சலுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

"... புழுதிப் படுக்கையிலே
புதைந்த என் மக்களை
போற்றும் இரங்கல்
புகழ் மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பிரிந்தவர் நினைவு நாள்
பகர்வாரில்லை..."

சி.வி. அவர்கள் ஆங்கிலத்தில் புலமைப் பெற்றிருந்தாலும் ஆணவம் கொண்டதில்லை. தான் பிறந்து வளர்ந்த மக்களிடையே வாழ்வதையே வெகுவாக விரும்பினார். இவரின் எளிமையான வாழ்வு சகலரும் விரும்பும் கவிஞனாக, அரசில்வாதியாக, தொழிற்சங்கவாதியாக மதிக்கப்பட்டார்.

தொழிற்சங்கவாதி

ஆரம்பத்தில் கவிஞனாக, எழுத்தாளனாக இருந்த சி.வி. தொழிற்சங்கவாதியாகவும் சேவையாற்றியுள்ளார். இலங்கை இந்திய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், தொண்டமான், அசீஸ், இராசலிங்கம் போன்ற தலைவர்களோடு இவரும் அக்காங்கிரஸ் இணைந்து சேவையாற்றினார்.

எனினும், பின்னர் கருத்து வேறுபாடு காரணமாக அசீஸ், D. நடேசன், ரொசாரியோ ஆகியோருடன் இணைந்து "ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்" என்ற தொழிற்சங்கத்தை ஆரம்பித்து சேவையாற்றினார்.

ஆனால் பின் தொண்டமானும் அசீஸ் அவர்களும் மீண்டும் 1960 ஆம் ஆண்டு இணைந்தனர். ஆனால் மீண்டும் பிளவு ஏற்பட்டு 1965 ஆம் ஆண்டு பிரிந்தனர்.

இதன் பிறகு இ.தொ.கா. விலிருந்து V.K. வெள்ளையன் பிரிந்து "தொழிலாளர் தேசிய சங்கம்" அமைத்தார். சி.வி. அவர்களும் 1966 ஆம் ஆண்டு தொ.தே.சங்கத்தில் இணைந்து இறக்கும்வரை அச்சங்கத்திலே சேவையாற்றினார்.

அரசியல்வாதி

1947 ஆம் ஆண்டு நடைப்பெற்ற சட்டசபை தேர்தலில் போட்டியிட்டு தலவாக்கலை தொகுதியில் வெற்றிப் பெற்றார். இந்த தேர்தலில் மலையகத்திலிருந்து ஏழு அங்கத்தினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

எனினும், இத்தேர்தலுக்கு பின்னரே மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. ஏழு அங்கத்தவர்கள்கள் தெரிவு செய்யப்பட்டதின் காரணமாக குடியுரிமை சட்டம் கொண்டுவரப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டது. சட்ட மன்றத்திலேயே இப்பிரேரணைக்கு எதிராக உரையாற்றி இடதுசாரி இயக்கத் தலைவர்களோடு இணைந்து அப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்தவர். அதன்பிறகு அவர் தொழிற்சங்கத்திலே தன்னை அர்பணித்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் மக்களின் உயர்விற்காக பாடுபாட்டார். அவர் வாழ்ந்த காலத்தை விட, அவரின் மறைவிற்கு பின்னரே அவர் தொழிலாளர் வர்க்கத்தை ஊக்குவிக்க எடுத்த முயற்சிகள் பாராட்டப்பட்டு வருகின்றது எனலாம்.

இவ்வாறு பல்வேறு துறையில் மிளிர்ந்த இவருக்கு ஓர் நினைவாலயம் கூட கட்டப்படவில்லை என்பதை பதிவு செய்ய வேண்டும்.

வேலுப்பிள்ளை என்ற தனி மனிதனுக்கு கட்டப்படும் நினைவாலயமாக இருக்காமல், இந்நாட்டிற்கு தமது உடல், ஆவி, இரத்தம், வியர்வை எல்லாவற்றையும் அர்ப்பணித்த இந்திய வம்சாவளி தமிழர்களின் நிலைவாலயமாக இருக்க வேண்டும்.

அவர் வாழ்ந்த வீட்டையாவது ஓர் நினைவு இல்லமாக மாற்றி, மலையக மக்களின் அவல வாழ்க்கையை எடுத்துக்காட்டும் வரலாற்று இல்லமாக அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அவரின் நூற்றாண்டு விழா சிறப்புற அமைய எல்லா கவிஞர்களும் எழுத்தாளர்களும் மக்களும் இணைந்து இது ஓர் வரலாற்று விழாவாக மாற்ற வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

☼

சி.வி. பிறக்கட்டும்

– சுப்பையா ராஜசேகர்

தமிழகத்திலே பிறந்து தரணியெல்லாம் புகழ் பரப்பிய தமிழன் இடைக்காலத்திலே வாழ்ந்தவர், பஞ்சத்தால் பரிதவித்து, "நாடுவிட்டு நாடு வந்தவன் துயர்தனை கூற நானிருக்கிறேன்" என இலங்கையின் மத்திய மலைநாட்டு வட்டகொடையின் மடக்கும்புரைதனில் தோன்றியவன் எம் மக்கள் கவி சி.வி. வேலுப்பிள்ளை.

வங்கக்கவியிடம் "விஸ்மர்ஜினி" எனும் ஆங்கில இசை நாடகத்தை தனது பதினெட்டாம் வயதினியே சமர்ப்பித்து ஆசிப்பெற்றவர். 1930 களில் மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஒருவர் ஆங்கிலத்திலே கவிதைத் தந்துள்ளார் என்றால் அது, என்ன மறக்கக்கூடிய விடயமா?

வாழ்வைத் தேடிவந்த தென்நாட்டுத் தமிழர்கள் இங்கு வதைப்பட்டு உழன்று கொண்டிருந்த காலப்பகுதி. இந்தச் சூழ்நிலையிலும் வேலுப்பிள்ளை என்ற ஓர் இளைஞன் ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்று, கவிதைகள், கவிதை நாடகங்கள் எழுதி உயர்ந்திருந்தார் என்றால், அது எத்தனை சாதனை நிறைந்த விடயம்.

1930 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவரது எழுத்துக்களில் ஆழ்ந்த இரக்கம் தழுவியே காணப்பட்டது. 1950 இற்கு பின்புதான் இயலாமையினால், ஏற்பட்ட ஆத்திரத்துடன் கலந்த சோசரசம் சொட்டும் கவிதைகள், மலையக மக்களின் துயர் கண்டு ஊமைக்குயிலாய் வெந்து நொந்துக் கவியாய் தெரிந்தார். அவரிடம் பொங்கியெழுந்த எண்ண அலைகள் சுனாமியின் சீற்றம் போல் எழுத்தில் பொங்கியெழுந்த புரட்சியை காணமுடியவில்லை.

தலவாக்கலை பிரதிநிதியாய் 1947 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராக, பாராளுமன்றம் சென்றபோதும் கற்றவனுக்கே உரிய தன்னடக்கத்துடன் இந்திய பாணியில் ஷெர்வானி உடையணிந்து மிகக் கவர்ச்சிகரமாக பிரதிநிதிகள் சபையில் சி.வி. வேலுப்பிள்ளை வீற்றிருந்தார் என சொல்லின் செல்வர் இரா.சிவலிங்கம் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மலையக நாட்டார் பாடல்கள் குறித்து அவ்வப்போது பத்திரிக்கைகளிலும் சிற்சில ஆய்வுக் கட்டுரைகளும், வானொலியில் விவரணச் சித்திரங்களும் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆயினும் மலையக நாட்டுப் பாடல்களை உண்மையாய் பிரதிநிதித்துவப்படுத்துவதும், அதிகாரப்பூர்வமானதும், நம்பத் தகுதியுமான தொகுதியொன்று இதுகாறும் வெளிவந்திருப்பதாக தெரியவில்லை. அத்தகைய தொகுதிகளை வெளியிடும் தகுதி திரு சி.வி. வேலுப்பிள்ளை அவர்களுக்கு மாத்திரமே இருந்தது. ஆசிரியராய், தொழிற்சங்கவாதியாய், பாராளுமன்ற உறுப்பினராய், அரசியல்

பிரமுகராய், இலக்கிய கர்த்தாவாய், பத்திரிக்கை எழுத்தாளராய், இவையாவற்றுக்கும் மேலாக அப்பழுக்கற்று மனிதாபிமானியாய் வாழ்ந்தவர். வேலுப்பிள்ளைக்கு நாட்டுப் பாடல்களில் இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல. அவரது ஊனுடனும், உதிரத்துடனும் ஒன்றாகி கலந்துவிட்ட ஒன்றாகிப் போனவரது பாடல்கள் அல்லவா அவை.

மலையக மக்களின் பேச்சு வழக்கு, சொல்நயம், இசைப்பாங்கு சுவைப்பட அமைந்துள்ள மலையக நாட்டார் பாடலை நன்னோர் நயக்கத்தவகையினில் தொகுப்பாக தந்த அம்மக்களின் வாய்மொழி இலக்கியங்களை முதன்முதலாக வெளிக்கொணர்ந்தவர் சி.வி. அவர்கள்தான். ஆங்கிலப் புலமை மூலம் இந்த மக்களின் வாழ்க்கையை பிரசார வடிவில் உலகுக்கு அறிமுகப்படுத்தும் எண்ணத்தில் எழுதினார். அதனை அனைவரும் உணரவும் செய்தார்.

சி.வி. தனது கவிதைக் குவியல்களுக்குள் தனது ஆத்திரத்தையோ, புரட்சிகளையோ, எரிமலை வெடிப்புச் சிதறல்களையோ அதிகம் வெளிப்படுத்தாவிடினும் மலையக மக்களது மனக் கசப்புகளையும், அதிகமாக அவலங்களையும் கையறு நிலையையும் இவற்றுக்கெல்லாம் ஏதுவானவர்களின் அசாகயத்தனத்தையும் அழுத்திச் சொல்லும் கவிஞராக அல்லவா இருந்தார். இக்கவிதைகள் சுவைக்கும் கவிஞர்களை உள்ளங்களில் தொழிலாளர்கள்மீது இரக்கத்தையும் அவர்களை இந்நிலைக்குத் தள்ளப்பட்டவர்களினதும் சுரண்டல் பேர்வழிகள் மீது அடக்காத ஆத்திரத்தையும் வெறுப்பையும் விரைவாக மூட்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

அன்னாரது கவிதைகளை படிப்பவரது மனங்களில் இரத்தக் கண்ணீரைத் தேக்கும் சோக கீதமே அங்கே அதிகமான கவிதைகளில் முனைப்புற்றுக் காணப்படுகின்றன. எனவே, சி.வி. யின் பல கவிதைகள் இம்மக்களது அவலச் சுவையினையே அள்ளி இறைக்கின்றன எனலாம்.

கவிதா சக்தியும் தம் மக்கள்பால் கொண்ட ஈர்ப்பும் ஒன்றெனக் கலந்த ஊறித் தோய்ந்த உள்ளங் கொண்டவர்தான் சி.வி. விடுதலை வேட்கையின் மிகுதியால் அடிமைப்பட்டிருக்கும் மலையக மக்களுக்காக தம் எழுத்தினையே அர்ப்பணித்தவர் களில் சி.வி. வேலுப்பிள்ளை முதன்மையானவர் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

உழைக்கப் பிறந்தவர்கள் (விவரண சித்திரம்)

சி.வி.யின் இலக்கிய எண்ணங்களில் இந்த மக்களின் சடங்கு சம்பிரதாய வாழ்க்கையை, பண்பாட்டு கலாசார பாரம்பரியங்களை அழகுமிளிர தன் கதையில் உலவும் மாந்தர்கள் மூலமாகச் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

ஆங்கில வார இதழான "த சீலோன் ஒப்சேவர்" பத்திரக்கையில் "லைவ் இன் த பிளான்டேசன்ஸ்" (உழைக்கப்பிறந்தவர்கள்) என தனது எண்ணக்கருக்களை தொடராக எழுதினார். அதில் இரண்டாவதாக வந்ததுதான் (Golden Earring) "கோல்டன் இயரிங்" இதனை "தங்கத்தோடு" எனும் தலையங்கத்தில் திரு. செயஸ்டியன் அவர்கள் மாவலி சஞ்சிகையில் வந்ததை மீள பிரசுரமாக "இடி" எனும் வாராந்த பத்தரிக்கையிலும் வந்தது.

பின்பு சி.வி.யின் "கோல்டன் இயரிங்" என்றக் கட்டுரையை "தங்கத்தோடு" என்ற

பெயரில் "தேயிலைத் தேசம்" எனும் கட்டுரைத் தொகுதியில் திரு.மு.சிவலிங்கம் எழுதியிருந்தார். இந்தத் தங்கத்தோடு என்ற விவரணச் சித்திரத்தை பின்பு 8ஆந் தர மாணவர்களுக்காக பாடப்புத்தகத்தில் ஒன்பதாம் பாடமாக வெளிவந்தமை சிறப்பம்சமாகும்.

வீடற்றவன் நாவல்

"வீடற்றவன்" நாவலை, 1962 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீரசேகரியில் தொடர் நவீனமாக வெளிவந்தது. அந்நாவல் தொடராக வெளிவந்தபோது பலராலும் பெரிதாக பேசப்பட்டது. பொதுவாக பத்திரிக்கைகளில் வருகின்ற சிறு கதைகளுக்கோ அல்லது தொடர் நாவல்களுக்கோ சிறந்த ஓவியங்கள்தான் இடம்பெறும். ஆனால் வீடற்றவன் நாவல், வீரசேரியில் ஓவியங்களுக்குப் பதிலாக புகைப்படங்களை சேர்த்திருந்தது.

சி.வி. வேலுப்பிள்ளை அவர்களால், மலையக மக்களின் அவல வாழ்க்கையும், தொழிற்சங்கத்தை ஏற்படுத்துவதில் ஏற்படுகின்றன சிரமங்களையும் அதன் காரணமாக, 1957 ஆம் ஆண்டு காலப்பகுதியில் "டயகம" தோட்டப்பகுதியில் ஏற்பட்ட போராட்டத்தில் பொலிசாரின் தோட்டாவுக்குப் பலியான "ஏப்ரகாம்சிங்கோவின்" மரணத்தைப் பற்றிய தகவல்களையும் இதில் இணைந்து சிறப்பாக எழுதப்பட்டிருந்தது.

இனிப்படமாட்டேன் கடைசி நாவல்

1962 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வீரகேசரி ஞாயிறு வார இதழில் "இனிப்படமாட்டேன்" நாவல் தொடராக வெளிவந்தது. அதன் பின்னர் அதனை தமிழ் நாட்டில் மீனாட்சி பதிப்பகத்தார் நூலாக்கி வெளியிட்டனர். இனிப்படமாட்டேன் நாவல் பத்திரிக்கையில் தொடராகவரும்போது சில காரணங்களுக்காக ஓரிரு அத்தியாயங்கள் வரவில்லை. ஆனால் அது நூலுறு பெற்று வெளியானபோது அது முழுமைப் பெற்றிருந்தது. அதன்பிறகுதான் பத்திரிக்கையில் வாசித்தவர்களுக்கும் ஒரு முழுமையான நாவலை வாசித்து முடித்த திருப்தியும் ஏற்பட்டது. இந்நாவலுக்கு "தொ.மு.சி. ரகுநாதன்" அவர்கள் அணிந்துரையை வழங்கியிருந்தார்.

சி.வி. அவர்கள் இந்நாவலில் தனது சுயசரிதையையும் இணைத்திருந்தார் என்பது பலருக்குத் தெரியாத வீடயம். இந்நாவலில் தானும் ஒரு கதாபாத்திரமாகவே வந்தார். இதுவே சி.வி. எழுதிய கடைசி நாவல் எனவும் கருதப்படுகின்றது.

சி.வி. வேலுப்பிள்ளையை பற்றி எழுதும்போது அவர் ஒரு மதவாதியாகவே சித்தரிக்கப்படுகின்றார். அவரோடு வாழ்ந்தவர்களுக்கு மட்டுமே அவர் யார் என்பது புரியும். சி.வி. என்றுமே மதவாதத்தைக் கைக்கொண்டவராக இருக்கவில்லை. இலங்கையில் முக்கிய இடதுசாரித் தலைவர்களுடன் தான் அவருடைய செயற்பாடுகள் இருந்தன.

மலையகத்தின் முத்த கவிஞர், எழுத்தாளர், சிந்தனையாளர், அரசியல் மற்றும் தொழிற்சங்கவாதி எனப் பன்முக ஆளுமைகளைக் கொண்டவர் சி.வி. வேலுப்பிள்ளை மட்டுமே. ஆங்கிலத்தில் எழுதும் ஆற்றல் கொண்டிருந்தார். அவருக்குப் பின் அவ்வாறு ஒருவர் மலையகத்தில் தோற்றம் பெறாதது நமது துரதிஷ்டமாகும்.

சி.வி. ஆங்கில எழுத்துலகில் ஓரிடத்தை எட்டியவர். தமிழ் எழுத்துலகில் ஓரிடத்தையும் தட்டிக் கொண்டவர். மலையக எழுத்துலகில் ஓர் உயரிய பீடத்தை அமைத்துக் கொண்டவர். மலையக தொழிற்சங்க வரலாற்றில் பெயரைப் பதித்துக் கொண்டவர்.

மலையக தொழிற்சங்க வரலாற்றில் சி.வி. இற்குரிய ஏடுகள் புறட்டப்படாமல் விடப்படலாம். ஆனால், எழுத்துலகில் அவரின் ஆக்கங்களை கொண்ட ஏடுகள், தாம் எம் மொழிகளில் எழுதினாரோ அம்மொழிகள் உலகில் உள்ளவரை புரட்டப்படும் என்பதில் ஐயமில்லை. சி.வி.யின் சிந்தனையில் துளிர்த்த எண்ணக்கலவைகள் கவிதையாய், கட்டுரையாய், சிறுகதையாய், நாவலாய், இன்னும்பிறவாகி ஆங்கிலத்திலே வடித்தப்பின்தானே இந்த அகிலத்திற்கு எம்மவர் நிலை வெளித்தெரிந்தது.

அவர் சிறந்த அரசியல்வாதி, பழுத்த வேதாந்தி, பண்பட்ட எழுத்தாளன், எழுத்தாளர்களுக்கெல்லாம் வழிகாட்டி, ஆங்கிலத்தை நன்குணர்ந்தவர், அவ்வாங்கிலத் தாலேயே கவிதைப்படைத்து அனைவரையும் சொக்க வைத்த ஜாலக்காரர், தெளிவுப் பெற்ற கவிஞன், தமது கதைகளிலும் கட்டுரைகளிலும் தம் மக்களது இன்பம் துன்பம், அவலங்களை வெளிச்சமிட்ட கோமான், மலையக எழுத்தாளர் வரிசையிலே முதல் தேசியக் கவி எங்கள் சி.வி. வேலுப்பிள்ளை என்பதில் ஐயமே இல்லை.

வீரகாவியம் படைப்பதற்காக சி.வி. வேலுப்பிள்ளை அவர்களது நூற்றாண்டு வீழாவில் எமது அஞ்சலியாக அவர் மீண்டும் பிறக்கட்டும் என்ற தொனியில் தரணிக் கெல்லாம் எடுத்து ஓதுவோமே.

- மலையகம் மாண்புற தோன்றிய மக்கள் கவி பிறக்கட்டும்
- முன்னோடி பரம்பரையின் முத்தகவி பிறக்கட்டும்
- பாரதிப் பாடிய எங்கள் பாவலன் பிறக்கட்டும்
- கூலிப்பட்டாளம் என இழிவுப்படுத்திய கூட்டத்திற்கு, கூர்வாளாய் இருந்தவன் பிறக்கட்டும்
- வீரகாவியம் படைத்த எங்கள் வீரகவி பிறக்கட்டும்
- கவிமழை மூலம் காவியம் படைத்த காவலன் பிறக்கட்டும்
- அடிமைப் பிடியினின்று அகற்ற பரணிபாடி பாவலன் பிறக்கட்டும்
- அடிமையாய், அகதியாய், இன்னலில் இருந்து மலையக மக்களை உலகுக்கு வெளிச்சமிட்டுக் காட்டிய கவிப் பிறக்கட்டும்
- மண்வாழ்வு முடிந்து வீட்டாலும் மாறாத பெயருடன், மறையாத புகழுடனும், மங்காச் சிறப்புடனும் விளங்கும் பேரொளி பிறக்கட்டும்
- தோட்ட மக்கள் ஒரு சமூகம் அல்ல. அவர்கள் வாழ்வியல் சிறப்புகள் அற்ற ஒரு கூலிப்பட்டாளம் என்று இழிவுப்படுத்திய கூட்டத்திற்கு தனது ஆரம்ப படைப்புகளில் இருந்தே துடைத்துக் காட்டிய பெம்மான பிறக்கட்டும்
- பருவத்தால் பெய்த மழைப்போல் காலத்தால் தோன்றிய கவிஞன் பிறக்கட்டும்
- மலையகம் தந்த மாசில்லா தங்கக் கவி பிறக்கட்டும்
- மீண்டும் பிறக்கட்டும் ☼

சி. வி. யின் இலக்கிய நோக்கும் பணியும்

– லெனின் மதிவானம்

கடந்த செப்டம்பர் பதினான்காம் திகதி சி. வி. என அறியப்பட்ட கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளையின் (14-09-1914 - 19-11-1984) நூற்றாண்டாகும். இலங்கையின் மலையகத்தைப் பிறப்பிடப்பிடமாகப் கொண்ட அவர் மலையக இலக்கியத்தின் தலைமகனாக மாத்திரமன்றி, தொழிற்சங்க இயக்கத்திற்கு வித்திட்ட வீடிவெள்ளிகளில் ஒருவராகவும் மலையக மக்களால் மதிக்கப்படுகின்றவர். அவரது நூற்றாண்டையொட்டி பின்னோக்கி பார்க்கும் பொழுது, முன்னெப்போதும் இல்லாத அளவில் தற்போது சி. வி. ஆய்வுக்கும் மதிப்பீட்டிற்கும் தேடலுக்குமான மிகவும் வாய்ப்பான ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது. இதற்குக் காரணங்கள் பல. மலையக தேசியத்தையொட்டிய இயக்க வளர்ச்சியின் காரணமாகவும் பொதுவான கலாசார எழுச்சியின் பெறுபேறாகவும் இத்தகைய ஆய்வுத் தேவையொன்று தோன்றியிருக்கின்றது. இருப்பினும் சி.வி. குறித்த காத்திரமான ஆய்வுகள், மதிப்பீடுகள், விவரணங்கள், செய்திகள், நினைவுக் குறிப்புகள் என்பன வெளிவரவில்லையாயினும் சில குறிப்பிடத்தக்க எழுத்துக்கள் பிரசுரமாகியிருக்கின்றன என்பது மனங்கொள்ளத்தக்க வையாகும். அவ்வாறு குறிப்பிடத்தக்கவற்றுள் பெரும்பாலானவை முற்போக்கு மார்க்சியர்களால் எழுதப்பட்டவையாகும். இர.சிவலிங்கம், மு.நித்தியானந்தன், சாரல் நாடன், தெளிவத்தை ஜோசப், அந்தனி ஜீவா, ஓ.ஏ. இராமையா, லெனின் மதிவானம், சுப்பையா இராஜசேகர், மல்லியப்புசந்தி திலகர் முதலானோரின் எழுத்துக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். சாரல் நாடனின் 'சி.வி. சில சிந்தனைகள்' என்ற நூலே சி.வி. பற்றிய தேடலுக்கு காத்திரமான அடித்தளத்தை வழங்கியது எனலாம். இவ்வெழுத்தாளர்களிடையே தத்துவார்த்த வேறுபாடுகள் இருப்பினும் சி.வி.யின் பன்முகப்பாட்டை வெவ்வேறு விதங்களில் வெளிக்கொணர்பவையாக அமைந்திருக் கின்றன.

சி.வி.யின் சமூக முக்கியத்துவத்தையும் மலையக இலக்கிய கதியில் அவரது ஆக்கங்கள் செலுத்தும் பாதிப்பினையும் நோக்குகின்ற போது சி.வி.பற்றிய தேடல் வளர் நிலையிலேயே உள்ளதாக தோன்றுகின்றது. சி.வி தாம் எழுதிய அனைத்து நூல்களிலும் எழுத்துக்களிலும் தமது பெயரை சி.வி வேலுப்பிள்ளை என்றே உபயோகித்துள்ளார். ஆனால் இதுரையிலாக அவர் பற்றி வெளிவந்த எழுத்துக்களில் சி.வி.வேலுப்பிள்ளை (ஸி என்ற எழுத்துக்கு பதிலாக சி என்ற எழுத்தே பயன்படுத்தப்பட்டுள்ளது) என்றே உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இவ்விடயம் பாரிய விளைவுகளை ஏற்படுத்த வில்லையாயினும் அத்தவறு தொடர்வது ஆய்வு நாகரிகத்திற்குரியதல்ல. சி.வி. ஆசிரியர், பத்திரிகையாளர், அரசியல்வாதி, இலக்கியகர்த்தா எனப் பல்துறைசார்ந்த ஆளுமைகளைக் கொண்டவர். அவரது

நூற்றாண்டு நிகழ்வை ஒழுங்கமைப்பதற்காக ஹட்டனிலே திரு மு. நேசமணி தலைமையில் சி.வி.நூற்றாண்டு நினைவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு சில முன்னோடி செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். மக்கள் பண்பாட்டுகழகம், மலையக கலை இலக்கிய பேரவையினர் அமைத்துள்ள சி. வி நூற்றாண்டு நிவைவுக் குழு இன்னும் இது போன்ற அமைப்புகள் பல கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டு நடத்தியுள்ளனர். அவ்வாறே கடந்த வாரம் சி.வி.நூற்றாண்டு நிகழ்வை முன்னிட்டு தொழிலாளர் தேசிய சங்கத்தினர் சிறப்பானதொரு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். நூற்றாண்டையொட்டி மாவலி சிறப்பிதழையும் முத்திரையும் வெளியிட்டிருந்தனர் என்பது பாராட்டுதலுக்குரியதாகும். அவ்வாறே அவரது நூற்றாண்டை முன்னிட்டு சில சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இதனை மனங்கொண்டு சி. வி. பற்றி மேலும் நுனிந்து நோக்க வேண்டியுள்ளது.

சி.வி. யின் எழுத்துக்கள்

சி.வி.யை நாம் புரிந்து கொள்வதற்கும் ஆராய்ச்சிக்குட்படுத்தவும் எம் முன்னுள்ளவை அவரது எழுத்துக்கள் தான். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், அவரது கடிதங்கள், குறிப்புக்கள், நூல்வடிவம் பெறாத கட்டுரைகள், ஆக்கப் படைப்புக்கள், பத்திரிகைகளுக்கு வரைந்த கேலிச் சித்திரங்கள் இதுவரை முறையாகக் கிடைக்கவில்லை. சில ஆவணங்கள் மல்லியப்பு சந்தி திலகரிடமும் சுப்பையா இராஜசேகரிடமும் இருப்பதை பார்வையிடக் கூடியதாக இருந்ததில் மகிழ்ச்சி. அவர் 'சாக்குக்காரன்' என்ற சிறுகதையை எழுதியிருப்பதாக 'தாக்கம்' இதழில் சி.எஸ்.காந்தி குறிப்பிட்டிருக்கின்றார். வீரகேசரியில் வெளிவந்த அக்கதையை திரு.அந்தனி ஜீவா சேகரித்து வைத்திருப்பதாக என்னிடம் கூறியிருக்கின்றார். இலங்கையில் பாடசாலை கலைத்திட்டங்களிலும் பாடநூல்களிலும் சி.வி.யின் படைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. சி.வி.யின் சில நூல்கள் அச்சுறுப்பெற்றுள்ளன. இவ்வாறு வெளிவந்த நூல்களையும் இப்போது பெற முடியாதுள்ளது. மேலும் இது தொடர்பான தகவல் தெரிந்தவர்களைத் தேடியறிவதும் சிரமமாக உள்ளது. அவர்களில் சிலர் இன்று மறைந்து விட்டமை இன்னொரு துரதிஷ்டவசமான நிகழ்வாகும். இவ்வேளையில் அவரது அனைத்து படைப்புகளையும் தொகுத்த அடக்கத் தொகுப்பொன்று வெளிவரவேண்டியது காலத்தின் தேவையாகும்.

அறிமுக வசதிக்காக அவரது எழுத்துக்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்வது வசதியாக அமையும்.

1. நாட்டார் பாடல்கள் சேகரிப்பு
2. கவிதை
3. நாவல்
4. பிற முயற்சிகள்

நாட்டார் பாடல்கள் சேகரிப்பு

சி.வி.பெரியாங்கங்காணியான தனது தாத்தாவின் வீட்டில் வசித்ததனால் நாட்டார் பாடல்களை இரசிக்கவும், அவற்றினைச் சேகரிப்பதற்குமான சூழ்நிலை கிடைத்தது

என அவரே பல சந்தர்ப்பங்களில் பதிவு செய்திருக்கின்றார். ஒரு காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தமது விசேட தினங்களில் பெரிய கங்காணியின் வீட்டிற்குச் சென்று, நாட்டார் பாடல்களைப் பாடிப் பரிசு பெறும் வழக்கம் மலையகத்தில் காணப்பட்டது. மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான சேகரிப்பு, ஆய்வு என்பன ஆங்காங்கே திட்டுக்களாகவும், தீவுகளாகவும் இடம்பெற்ற போதிலும் அவை முழுமை அடையாத நிலையே காணப்பட்டது. சி.வி அவர்கள் மலையக நாட்டார் பாடல்கள் சிலவற்றைச் சேகரித்து 'மலைநாட்டு மக்கள் பாடல்கள்' என்ற தலைப்பில் வெளியிட்டமை இத்துறையில் குறிப்பிடத்தக்க சாதனையாக அமைந்து காணப்படுகிறது.

உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு இம் மக்களின் நம்பிக்கைகள், விருப்பு-வெறுப்புக்கள், மகிழ்ச்சி, துன்பம், அவர்தம் உறுதிப்பாடு என்பவற்றைப் பிரதிபலிக்கும் நாட்டார் பாடல்கள் தொடர்பான சேகரிப்பு, ஆய்வு என்பன முக்கியத்துவமுடையவையாகின்றன. அத்துடன் இன்றைய மக்கள் இலக்கியம் யாவும் மக்களிடம் காணப்படும் நாட்டார் வழக்காறுகளும், உரையாடல்களும் வளமிக்க மொழியில் பட்டை தீட்டப்பட்டே உருவாக்கமடைகின்றன. இத்தகைய பின்னணியில் தான் பாரதியின்-கார்க்கியின் படைப்புக்கள் உருவாக்கமடைந்தன.

சமூகவுணர்வுடனும் நாட்டார் பாடல்கள் குறித்த சரியான பார்வையுடனும் சி.வி.இம்முயற்சியினை மேற்கொண்டுள்ளார். இவருக்குப் பின்னர் மலையக நாட்டார் பாடல்கள் சேகரிப்பில் ஒரு நீண்ட இடைவெளி காணப்படுகின்றமை கவனிப்புக்குரியது. அண்மையில் மு.சிவலிங்கம் சி.வி. யின் தொகுப்பில் அடங்காத சில மலையக நாட்டார் பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டார். இந்நூல் மலையக நாட்டார் இலக்கியத்திற்கான புது வரவாகக் காணப்பட்ட போதிலும், அவற்றில் சில வீரசம் மிக்க பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களெல்லாம் சி.வி.க்கு தெரியாது என்பதல்ல சி.வி. மிக நிதானத்துடனும் சமுதாயப் பார்வையுடனும் தொகுத்தமை யினாலேயே அவற்றைத் தமது தொகுப்பில் தவிர்த்திருக்கின்றார் எனக் கருத இடமுண்டு.

கவிதை

கவிஞரின் ஆளுமையை மதிப்பிடுவதற்கு அவரது கவிதைப் படைப்புக்கள் மிக முக்கியமானவையாகும். கவிதைத்துறைதான் அவரை இலக்கிய உலகில் கணிப்புக்குரியவராக்கியது. இவரது கவித்துவ ஆளுமையை விஸ்மாஜினி (Vismajini) என்ற கவிதை நாடகம் மூலமும் வே:வேயர் (Wayfarer) என்ற வசன கவிதைத் தொகுப்பு மூலமாகவும் அறியலாம். 'விஸ்மாஜினி', 'வே:வெயர்' என்ற இரண்டு நூல்களிலும் சி.வி.யின் சொல்லாட்சிகளைக் காணலாம்" என்பார் சாரல் நாடன். எனினும் அவரது கவித்துவ ஆளுமையின் உன்னத அறுவடையாக அமைந்தது In Ceylon Tea Garden என்ற தொகுப்பாகும். ஏனைய கவிப்படைப்புக்கள் யாவும் இத்தொகுப்பை எழுதுவதற்கான படிக்கற்கள் எனக் கூறின் அது மிகையாகாது. இத்தொகுப்பு முதலில் இரசிய மொழியிலும், பின்னர் தமிழ் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டது. இவ்விடத்தில் முக்கியமானதொரு விடயம் கவனத்தில்

கொள்ளத்தக்கது. அதாவது சி.வி.ஆங்கிலத்தில் எழுதிய படைப்புகள் தமிழில் மொழிமாற்றம் செய்யும் போது ஏற்பட்ட இடர்பாடுகள் - மயக்கங்கள் முக்கியமாவை யாகும். உதாரணமாக 'In Ceylon Tea Garden' என்ற கவிதைத் தொகுப்பை சக்தி பால ஐயா இலங்கைத் 'தேயிலைத் தோட்டத்திலே' என மொழிபெயர்ப்பு செய்ததாகக் கூறப்படுகின்றது. சக்தி பால ஐயாவின் நூலில் சி.வி.யின் கவிதைகளில் காணப்பட்ட இயல்பான மண்வாசனைப் பண்பும் அவற்றோடு இணைந்த சொற்களும் உள்ளடக்கப்படவில்லை. சக்தி பால ஐயாவின் கவிதைத் தொகுப்பினை மொழிபெயர்ப்பு என்று கூறுவதை விட தழுவல் எனக் கூறுவதே பொருந்தும் (இது தொடர்பாக விமர்சனங்கள் எழுந்தபோது, சி.வி.யின் படைப்பின் தாக்கத்தினால் தனது ஆக்கம் வெளிப்பட்டதேயன்றி மொழிபெயர்ப்பென தாம் குறிப்பிடப்படவில்லை என்று சக்தி பால ஐயா தனிப்பட்டவகையிலும் சில கூட்டங்களிலும் கூறியதைக் கேட்டிருக்கின்றேன்). சி.வி.அரசியல்வாதியாக, தொழிற்சங்கவாதியாக இயங்கியவர். இலக்கியத் தளத்தில் மட்டுமே இயங்கியவரான சக்தீ பாலையா இத்தகைய உணர்வுகளை எவ்வாறு எதிர் கொண்டார் என்பதும் சுவாரசியமானதொரு வினாதான் (லெனின் மதிவானம் - 2010). மிக அண்மையில் சி. வி. நூற்றாண்டை முன்னிட்டு தொழிலாளர் தேசிய சங்கத்தினரால் வெளியிடப்பட்ட சி.வி.நூற்றாண்டு சிறப்பு மலரில் திரு. பி. பி. தேவராஜ் சி.வி. யின் சில கவிதைகளை மொழிப்பபெயர்த்துள்ளார். இம்மொழிப்பெயர்ப்பு சி.வி. யின் ஆங்கில கவிதைகளுடன் பெரிதும் ஒத்துப் போகின்றது என்றே கூற வேண்டும். அவரது முழுக் கவிதைத் தொகுப்பும் இத்தகைய பின்னணியில் மொழிப்பெயர்க்க வேண்டியது காலத்தின் தேவையாகும். சி.வி.யின் 'In Ceylon Tea Garden' தொகுப்பில் அடங்கியுள்ள கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது மலையக கலாசாரத் தளத்தையும் மக்களின் உணர்வுகளையும் ஒன்றாக இணைத்துக் காதலிக்கின்ற பண்பினை காணலாம்.

நாவல்

சி.வி.யில் எழுதிய நாவல்களில் 'எல்லைப்புறம்', 'பார்வதி', 'வாழ்வற்ற வாழ்வு', 'காதல் சித்திரம்', 'வீடற்றவன்', 'இனிப்படமாட்டேன்' ஆகிய நாவல்கள் நேரடியாக தமிழில் எழுதப்பட்டவை. ஏனையவை யாவும் பொன். கிருஷ்ணன் சுவாமியால் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டவை. இவற்றில் 'காதல் சித்திரம்', 'வீடற்றவன், 'இனிப்படமாட்டேன், 'வாழ்வற்ற வாழ்வு' ஆகிய நாவல்கள் நூலுருப் பெற்று வீட்டன. ஏனையவை யாவும் நூலுருப் பெறவில்லை. இவரது நாவல்களில் 'வீடற்றவன்', 'இனிப்படமாட்டேன்', 'வாழ்வற்ற வாழ்வு' ஆகிய நாவல்களே எனது பார்வைக்குக் கிட்டியதால் இந்நாவல்களை அடிப்படையாகக் கொண்டே சி. வி.யின் இலக்கிய ஆளுமையை மதிப்பீடு செய்ய முனைகின்றேன்.

'வீடற்றவன்' இவரது மிக முக்கிய நாவல்களில் ஒன்றாகும். மலையக மக்களிடையே தொழிற்சங்க அமைப்பை தோற்றுவித்து அதனை ஸ்தான மயப்படுத்துகின்ற போது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைச் சித்திரிக்க முனைவதாக இந்நாவல் அமைந்து காணப் படுகின்றது. வாழ்வற்ற வாழ்வு என்ற நாவலும் தொழிற்சங்க இயக்க செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒருவரின் வாழ்வை இயல்பாக சித்திரிப்பதாக அமைந்துள்ளது.

'இனிப்படமாட்டேன்' இவரது இறுதி நாவலாகும் 1984இல் வெளிவந்தது. இந்நாவலையும் சி.வி.யின் வாழ்க்கையையும் உற்று நோக்குகின்றபோது இது ஒரு சுயசரிதையாக அமைந்த நாவலே என்ற உணர்வு வாசகனில் ஏற்படுவது தவிர்க்க முடியாததொன்றாகும். இந்நாட்டில் தமிழர் ஒருவர் சிங்களப் பெண்ணை மணம் முடித்து வாழுகின்ற போது ஏற்படுகின்ற முரணையும் அவ்விருவருக்கும் பிறக்கும் மகனுக்கு சமூகத்தில் ஏற்படுகின்ற முரணையும் சித்திரிப்பதாக இந்நாவல் அமைகின்றது. குறிப்பாக 80களில் தோற்றம் பெற்ற இந்த நாவல் இக்காலகட்டத்தில் மலையகத்தில் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகளைச் சிறப்பாகச் சித்திரிக்கின்றது என்ற போதினும் அதன் மறுபுறமாக மலையக சமூக இருப்புக்கான உணர்வு எவ்வாறு நிலை கொள்ளப்படுகின்றது என்பதை வெளிக் கொணரத் தவறிவிடுகின்றது. இதனை இக்காலகட்டத்தில் வெளிவந்த ஆனந்த ராகவனின் "நண்பனே என்றும் உன் நினைவாக" என்ற சிறுகதை மிக நேர்த்தியுடன் சித்திரிக்கின்றது எனலாம்.

சி.வி. யின் பிற முயற்சிகள்

சி.வி.யின் இலக்கிய நோக்கினை மதிப்பிடுவதற்கு 'முதற்படி' (கட்டுரைத் தொகுப்பு) Born to Labour (உழைக்கப் பிறந்தவர்கள் - விவரணத் தொகுப்பு) ஆகிய நூல்களும், அவ்வப்போது பத்திரிகைகளில் வரைந்து வெளியிட்ட கேலிச் சித்திரங்களும் முக்கியமானவைகளாகும். முதற்படி என்ற நூல் மலையகத் தமிழர் பற்றிக் கூறுகின்ற சிறிய கட்டுரைத் தொகுதியாகும். மலையகத் தமிழர்களிடையே இலங்கை - இந்திய காங்கிரஸ் உருவாகியது பற்றியும், அது இம்மக்கள் குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடுகின்றது. இந்நூலில் பின்வரும் வரிகள் கவனத்தில் கொள்ளத்தக்கவை:

"ஆரிய திராவிடர்களாகிய நாம் சிங்கள சகோதரர்களுக்கு ஆங்கில மோகம் தணியலாயிற்று அறிவு புலர்ந்தது"

"நாமிருக்கும் நாடு நமதென்ப
தறிந்தோம் - இது
நமக்கே யுரிமையா மென்ப
தறிந்தோம்"

என்ற நாதத்தின் எதிரொலி இங்கு பிறந்தது. என்றாலும் ஆங்கில மோகம் நம் சுய அறிவைக் கொலை செய்வது வழக்கம். இதிலிருந்து சுகமடைவது சற்றுக் கஷ்டமாவதால் சிங்களவர்களுக்கு வாழ்க்கைப் போராட்டத்தில் அயர்வும், ஏமாற்றமும் ஏற்பட்டது. இது மட்டுமா? மூலதனமும் வியாபாரமும் இந்திய வர்த்தகர்களிடம் பொன் விளையும் இறப்பர் - தேயிலை தோட்டங்களின் வெள்ளையர் கையில் அந்நியர் இலங்கையில் நடத்திவரும் சுரண்டல் கைங்கரியத்திற்கு ஆயுதமாக இருப்பவர்கள் இந்திய தொழிலாளர்கள் என்பது தான் இவரின் அபிப்பிராயம். மற்றொரு புறத்தில் யாழ்ப்பாணத் தமிழர்கள் அயர்வு தெரியாத் திறமையால் கோட்டை பிடிப்பது போல எல்லா உத்தியோகங்களையும் கவர்ந்து வந்ததிலிருந்து சிங்களவர்கள் மனம் வெதும்பி இருக்க வேண்டும். இந்நிலையில் நாமிருந்தால் எப்படி நடந்து

கொண்டிருப்போம் என்பதற்குச் சிங்களவர்கள் இந்தியராக இருந்தால் உடன் பதில் சொல்வார்கள் (முதற்படி பக் 10).

பேரிவாதத்தையும் காலணித்துவத்தையும் விமர்சத்திற்குள்ளாக்குகின்ற அதே சமயம், இனக் குரோதமின்றிச் சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட வேண்டும் என்ற உணர்வையும் தருகின்றது இந்நூல். மலையக மக்களின் நிலைமைகளை சிங்கள மக்களுக்கு தெளிவுப்படுத்துவதுடன், பொது எதிரிக்கு எதிராக ஐக்கியப்பட வேண்டிய தன் அவசியத்தையும் சி. வி. தெளிவுற அறிந்திருந்தார் என்றே கூற வேண்டும். அவ்வாறே அவரது Birth of Ceylon Indian Congress என்ற கட்டுரை இலங்கை - இந்திய காங்கிரசின் தோற்றம், உழைக்கும் மக்கள் தொடர்பில் அவ்வமைப்பு மேற் கொண்ட போராட்டங்கள் பற்றி விபரிக்கின்றது. மேலும் அவரது The C.I.C Union becomes the C.W.C என்ற கட்டுரை இலங்கை - இந்திய காங்கிரஸ் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்றவகையில் எவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாக மாறியது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

சி.வி. வழிப்போக்கன் என்ற புனைபெயரில் எழுதிய தேயிலைத் தோட்டத்திலே என்ற தொடர் சித்திரத்தில்தான் மலைநாடு என்ற சொல் முதன்முதலாக பயன்படுத்தப் படுகின்றது எனச் சிலர் கூறுகின்றனர். இக்கூற்றில் பல வாதப்பிரதிவாதங்கள் காணப் பட்ட போதும் அவர் மலையகம் என்ற சொல்லை வெறும் புவியியல் அர்த்தத்தில் மாத்திரத்திரமன்றி அதன் உள்ளார்ந்த அர்த்தத்தையும் உணர்ந்தே பயன் படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. இம்மக்களின் தேசிய உணர்வை - இருப்பை கவனத்திலெடுத்தே அத்தகைய சொல்லை உபயோகித்திருப்பதாவே படுகின்றது இந்த உணர்வை அவரது படைப்புகளிலும் காண முடிகின்றது.

சி.வி.யின் முக்கியமான பிறிதொரு நூல் Born to Labour என்ற விவரணத் தொகுப்பாகும். இதனை மாவலி பத்திரிகையில் திரு.பி.ஏ. செபஸ்டின் தமிழில் மொழிபெயர்த்து தொடராக வெளியிட்டுள்ளார். குழந்தை பிறப்பு முதல் இம்மக்களின் வாழ்க்கை, மக்களிடையே காணப்பட்ட கலை, கலாசார நிகழ்வுகள், அவர்களுடன் உறவு கொண்ட மனிதர்கள், உறவுத்தன்மை என்பன சிறப்பாகச் சித்திரிக்கப் படுகின்றன. ஆங்கிலத்திலும், மலையக மண்வாசனை மிக்க நடையை சி.வி. கையாண்டுள்ளார். அந்த வகையில் 'In Ceylons Tea Garden' என்ற கவிதைத் தொகுப்பினைப் போல இந்நூலும் முக்கியத்துவமும் சிறப்பும் உடையதாகும். மலையக மக்களின் துன்பம் தோய்ந்த வரலாற்றினை எடுத்துக் கூறும் இவரின் பிறிதொரு நூல் 'நாடற்றவர் கதை" ஆகும்.

சி.வி.யின் இலக்கிய நோக்கு

சி.வி.யின் படைப்புக்கள் அனைத்திலும் சிலாகித்துப் பேசப்படுகின்றதொரு வீடயம் மலையக மண்ணின் மனம் கமழும் பேச்சு வழக்கு முறையைத் தனது படைப்புக்களில் சிறப்பாக கையாண்டுள்ளமையாகும். இவர் எழுதத் தொடங்கிய காலகட்டத்தில் தேசிய இலக்கியக் கோட்பாடு, இலங்கைத் தேசிய இயக்கம் என்பன தத்துவார்த்தப் போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்னதாக கோ.நடேசய்யரால் இலங்கைத் தேசியத்தின் தனித்துவமிக்க கூறாக மலையக மக்கள் உணர்வு கொள்ள

வழிப்படுத்தியமை, வேறொரு கருத்தியல் தளத்தில் இளஞ்செழியனால் தொடரப்பட்டிருந்தது. மார்க்சியர்கள் இதனை புதிய பரிமாணத்தில் விருத்தி செய்திருந்தனர். இச்சந்தர்ப்பத்தில் மொழித் தூய்மை வாதத்திற்கு எதிராகப் பேச்சு மொழி இலக்கியத்தில் கையாளப்பட்டது. இத்தகைய காலப் பின்புலத்தில் சி.வி.யின் படைப்புக்களும் இத்தகைய மக்கள் சார்பு பண்பினை ஆதரித்தமை அவரது எழுத்துருக்களின் தனிச் சிறப்பாகும். இத்தகைய பேச்சு மொழியினைக் கையாண்டமை அவரது படைப்புக்களை அழகுபடுத்தியது எனலாம்.

சி.வி. அரசியல் பண்பாட்டுத்துறையில் இயங்க தொடங்கிய காலத்தில் மலையகத்தில் மக்கள் இயக்கம் புதிய பரிணாமத்தை எட்டியதுடன் அது அம்மக்களின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடத் தூண்டியது. அதன் முதல் வெளிப்பாடாகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக மற்றும் தொழிலாள பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய கணக்குப்பிள்ளைமார்கள், கங்காணிகள், கண்டக்கையாக்கள் ஆகியோரின் கொடுமைகளை எதிர்த்துப் போராடினர். தொழிலாளர்களுக்கு எதிராக நின்ற தோட்ட உத்தியோகத்தர்கள் (குறிப்பாக கணக்குப்பிள்ளைமார்கள்) பலரின் கைகள் வெட்டப்பட்டன. பலர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இது அக்காலகட்டத்தில் ஏற்பட்டிருந்த அரசியல் கொந்தளிப்பையும் எழுச்சியையும் காட்டுகின்றது.

இவ்விடத்தில் முக்கியமானதோர் ஒப்புவமை வசதிக் கருதி சி.வி.யின் கவிதைகளை மீனாட்சியம்மாள் நடேசய்யரின் கவிதைகளுடன் ஒப்பு நோக்குவது பொருத்தமானதாக அமையும். சி.வி.யின் முக்கிய படைப்பு "In Ceylon Tea Garden" என்ற கவிதைத் தொகுப்பாகும். 1948களில் மலையக மக்களின் வாக்குரிமைப் பறிக்கப்பட்ட போது அத்தகைய ஜீவகாருணியமற்ற செயலுக்கெதிராக இலங்கை - இந்திய காங்கிரஸ் சத்தியாக்கிர போராட்டத்தை ஒழுங்கமைத்திருந்தது. அச்சத்தியாக்கிரக போராட்டத்தில் சி.வி.யும் கலந்துகொண்டார். அப்போராட்டம் ஏற்படுத்திய உந்துதலினால் பிரவாகம் கொண்டதே மேற்குறித்த கவிதைத் தொகுப்பாகும். மலையக மக்களின் வாழ்வு, இருப்பு என்பன குறித்து அக் கவிதைத் தொகுப்பு அழகுற வெளிக் கொணர்கின்றது. அதேசமயம், மலையக மக்களின் வாக்குரிமைப் பறிப்பு தொடர்பாகவோ அல்லது சத்தியாக்கிரக போராட்டம் தொடர்பாகவோ எந்த பதிவும் அக்கவிதைத் தொகுப்பில் அடங்கியிருக்காதது தூரதிர்ஸ்டவசமான தொன்றாகும். மீனாட்சியம்மாளை பொறுத்த மட்டில் மலையக மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளையும் சட்டங்களையும் தமது கவி வரிகள் கொண்டு நேரடியாகச் சாடுகின்றார். தமது பாடல் தொகுப்பின் முன்னுரையில் அவரது பின்வரும் கூற்று கவனத்தில் கொள்ளத்தக்கது: "இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமை வரவர மிகவும் மோசமாகிக் கொண்டே வருகிறது. இலங்கைவாழ் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தீரமுடன் போராடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்திய மக்களுக்கு எதிர்காலத்தில் வரவிருக்கும் ஆபத்தை உணர்த்தி அவர்களிடையே அதிலும் முக்கியமாக இந்திய தோட்டத் தொழிலாளர்களிடையே பிரச்சாரம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அத்தகைய பிரசாரம் பாட்டுக்கள் மூலமாகச் செய்யப்படின் அதிக பலனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமையை பாட்டுக்களின்

மூலம் எடுத்துக் கூற முன் வந்துள்ளேன். இந்தியர்களைத் தூக்கத்தில் ஆழ்ந்து விடாது தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்குத் தீவிரமாகப் போராடும் அவர்களை இப்பாட்டுகள் தட்டியெழுப்பும் என்பதே என் அவா."

அம்மையாரின் பாடல்கள் தொழிலாளர்களை சார்ந்ததாகவும் அவர்களை விடுதலை உணர்வுக் கொள்ள வைப்பதாகவும் அமைந்துள்ளது. அந்த வகையில் சி.வி.க்கு வந்தமையாத ஆற்றல் மீனாட்சியம்மாளுக்கு வாய்க்கப் பெற்றுள்ளமை திடுக்கிட வைக்கும் அளவுக்கு அவரது அரசியல் தொழிற்சங்க இலக்கிய செயற்பாடுகளுக்கு வளம் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

அவ்வாறே 'வீடற்றவன்' என்ற நாவல் தோற்றம் பெற்ற காலச்சூழலில் (1960களில்) மலையக மக்களிடையே வீறு கொண்டெழுந்த எழுச்சிகள், போராட்டங்கள் போன்றவற்றை இந்நாவல் உள்வாங்கத் தவறி விடுகின்றது. மலையக வரலாற்றில் மறக்க முடியாத போராட்டங்களான மடக்கும்பர, மேல்பீல்ட், பதுளை கீனாகலை முதலிய தோட்டங்களில் இடம் பெற்ற போராட்டங்களைக் குறிப்பிடலாம். சி.வி.பிறந்து வளர்ந்த மடக்கும்பர தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தைக் கூட அவரது படைப்பில் வெளிக் கொணர முடியாது போனமை துரதிர்ஸ்டவசமான நிகழ்வாகும். இதற்கு மாறாக கோர்ட், வழக்கு முதலியவற்றின் மூலமாக இம்மக்களுக்கு விடுதலை வாங்கி கொடுக்கலாம் என்ற பார்வையை அவரது படைப்பு முன்வைக்கின்றது. இப்போக்கு அக்காலத்தில் பாரம்பரியமான தொழிற்சங்க இயக்கங்களின் நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. அந்தவகையில் ஒரு போக்கினைச் சுட்டிக் காட்டுகின்ற நாவலாசிரியர் அதன் மறுபக்கத்தைச் சுட்டிக் காட்டத் தவறி விடுகின்றார். நாவலின் கதாநாயகன் இராமலிங்கம் இறுதியில் பலாங்கொடை காட்டில் "கடவுளே எனக்கு போகும் வழி தெரியவில்லையே" எனப் புலம்புவது இந்நாவலின் சோர்வு வாதத்திற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். 'வீடற்றவன்' மட்டுமன்றி, அவரது ஏனைய படைப்புகளும் தோட்டத் தொழிலாளர்களின் போர்க்குணத்தைக் காட்டத்தவறுகின்றன என்பதே விமர்சனத்திற்குரியது. தொழிற்சங்கப் போராட்டம் குறித்த படைப்புகளை வெளிக் கொணரத் தவறிய அவரது அரசியல் செயற்பாட்டில் அத்தகைய போராட்டங்களையும் கலக உணர்வுகளையும் வரவேற்பவராக இருந்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. 1956 ஆம் ஆண்டு மாற்று தொழிற்சங்கத்திற்கான உரிமை கோரிய போராட்டம் டயகம தோட்டத்தில் நடைபெற்றது. இப்போராட்டத்தில் ஏப்ரகாம் சிங்கோ என்ற தொழிலாளியொருவர் உயிர் நீத்தார். இப்போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர் சி.வி.என்பதை பல பதிவுகள் வெளிப்படுத்தியிருக்கின்றன. ஒருவகையில் சி.வி.யின் அரசியல் பங்களிப்பு குறித்து ஆய்வு செய்கின்ற போது அவரது எழுத்துக்களில் இடம்பெறாத இன்னொரு ஆளுமையை தரிசிக்கக் கூடியதாக இருக்கும்.

மலையக இலக்கியத்தில் பொதுவாகவே காணப்படுகின்ற குறைபாடொன்றினை சுட்டிக் காட்டுவது அவசியமானதாகும். அவ்விலக்கியத் தொகுதி மலையக மக்களுடைய வாழ்வை வெளிக்கொணர்ந்த அளவு அவர்கள் செய்த கலகங்களையும் போராட்டங்களையும் வெளிக்கொணரத் தவறியிருக்கின்றது. ஓர் ஒப்புவமை வசதி கருதி வடபுலத்து படைப்புகளோடு ஒப்புநோக்குவோம். வடக்கில் எழுந்த தொழிற்சங்க

போராட்டங்களை நீர்வை பொன்னையனுடைய படைப்புகள் வெளிப்படுத்தி யிருக்கின்றன. அவ்வாறே அங்கு எழுந்த சாதியத்திற்கு எதிரான போராட்டங்களை கே. டானியலின் எழுத்துக்கள் பிரதிபலித்து நிற்கின்றன. இவ்வகையில் மலையகத்தை நோக்குகின்றபோது மலையகப் படைப்பாளிகளின் படைப்புகளில் சமூக இயக்கங்களும், போராட்டங்களும் படைப்பாக்காத நிலை காணப்படுகின்றது. எனினும் முச்சந்திப் பாடல்கள் என (பெ. முத்துலிங்கத்தின் தொகுப்பு அவதானத்துக்குரியது) மலையக மக்கள் சார்ந்த இயக்கங்களையும் போராட்டங்களையும் ஓரளவு பதிவாக்க முனைந்திருப்பதாகவே தோன்றுகின்றது.

முழுவுரை

சுமார் ஐம்பது ஆண்டு காலமாக எழுத்துலகில் தம்மை இணைத்துக் கொண்ட சி.வி. மலையக மக்களின் வாழ்வியலைப் படைப்பாக்கித் தந்ததில் மிக முக்கியமான பங்களிப்பினை வழங்கியுள்ளார். இதன் காரணமாகவே அவர் மலையக இலக்கியத்தின் முன்னோடியாகவும் வழிக்காட்டியாகவும் திகழ்கின்றார். எனினும் அவரது காலத்தில் நிகழ்ந்த முனைப்புற்ற போராட்டங்களையும் எழுச்சிகளையும் அவரது படைப்புகளில் காணமுடியாதுள்ளது துரதிஷ்டவசமானதொன்றாகும். இந்த பின்னனியில் சி.வி.யின் எழுத்துக்களை நோக்குகின்ற போது கொடுமைகளைக் கண்டு குமுறுகின்ற ஒரு மனிதாபிமானியின் நெஞ்சம் தெரிகின்றது. ஆனால் இம்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கும் தத்துவார்த்த பார்வை இல்லை என்பதும் தெரிகின்றது. முடிவாக சி.வி. பற்றிய ஆய்வுகளை சமூகவியல் பார்வைக்கு உட்படுத்துகின்ற போது அவரது வெற்றிகள் மட்டுமல்ல தோல்விகளும் அடுத்த தலைமுறையினருக்கு ஆதர்சனமாக அமையும். இதுவே சி. வி. என்ற மாமனிதனுக்காக நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

☼

பாடசாலை மாணவர்களுக்கான கவிதையாக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை

தேயிலைத் தோட்டத்திலே...

உச்சி சரிந்த வெயில்
நிழல்களாய் மலை முகடுகளில்
படியிறங்கி வரும்!
வீரிட்டு விரியும் வான் வெளிகள்
மேகங்களை அள்ளித் தூவும்!

மலைக்காடுகளில் வழிந்தோடி
சில்லென்று சிறுநதிகள்
பாயும்!
நிலவொளியில் அரும்புகள்
நறுமணம் வீசும்!

வானம் துண்டுத் துண்டாய்
மூங்கில் கீற்றுக்களிடையே
சிதறிக்கிடக்கும்!
இவற்றுக்கிடையில்
முருங்கையும்...
சவுக்கையும்...
பச்சைத் தேறிகளை
பராமரித்துக் கொண்டிருக்கும்!

இப்படித்தான்
இயற்கையை இதமாக்கியுள்ளது
எங்கள் தேயிலைத் தோட்டம்!

வியர்வையும்...
உதிரத்தையும்...
உரமாக அர்ப்பணித்து
நீ வளர்தெடுத்த
தேயிலைத் தோட்டம்,
ஒவ்வொரு அடிவைப்புகளிலும்
உன்னை நினைவுகூர்ந்து
கொண்டுதான் இருக்கின்றன!

எங்கள் உரிமைக்காக
எழுத்துகளில் சீண்டல்கள்
கொடுத்த சி.வியே
உன் ஜீவியத்தின்,
சிறப்பை யார்தான்?
யதார்த்தப்படுத்தி
கொண்டார்கள்!

மலை தாண்டி
கடல் தாண்டி
கனல் வீசத் தொடங்கியது
உன் கலைத்தாண்டவம்!

மக்கள் கவிமணியே
நம் பரம்பரை
அனுபவித்த அவஸ்தைகள்
அமரசழருஷ்டியாக ஆக்ரோஷப்படுத்தியே,
உன் தேயிலைத் தோட்டத்திலே...
என்ற கவித்துவம்தான்!

மொழிகளோ,
அதற்கு எல்லைகள்
இல்லையென
சிதைவுறா வண்ணம்
வாழ்க்கையை சித்தரித்த
புலவனல்லவா...
நீ!

ஊரடங்கு சட்டத்தால்
உன் மரண ஊர்வலம்
சஞ்சலமாக்கப்பட்டபோது,
"இந்த தேயிலை தோட்டம்"
உன் இறப்பின்
இருப்புவரை
கூடவே வந்தது!

அதோ,
ஓங்கி வளர்ந்த
கருப்பன் தேயிலையும்...
நீண்டு நீடித்திருக்கும்

லயக்குடிலும்...
உன் முகவரியை
சொல்லிக் கொண்டிருக்கிறது!
எங்கள் உரிமைகள்
மீட்டுகின்ற ஒவ்வொரு
பொழுதிலும்...
"இந்த தேயிலைத் தோட்டத்திலே"
"சி.வி. என்ற நாமம்"
உலாவிக் கொண்டுதான்
இருக்கும்!

குருசாமி தர்சணகுமார் (தரம் 11)
தெய்வகந்தை தமிழ் வித்தியாலயம்,
சாமிமலை.

☼

திறந்தப் போட்டிப்பிரிவில் கவிதையாக்கத்தில் முதலாம் இடம் பெற்ற கவிதை

இழிப்படமாட்டேன்

இருநூறு வருடமாய்
எதையும் பிரசவிக்காமல் -
எங்கள் எதிர்பார்ப்புகள் ஏற்க்கப்பட்டாயிற்று..,

கிள்ளப்பட்ட கொழுந்தாய்
எங்கள் வாழ்க்கையும் தினம்தாய் மனப்பான்மையுடன்
அரைக்கப்பட்டுவிடுகிறது.

எங்களின் உயரத்தை
எவருமே ஏற்றுக்கொள்வதில்லை.
கவ்வாத்து போல் எங்கள் -
உணர்வுகளும், உரிமைக்குரல்களும்
கவனமாக கத்தரிக்கப்படுகின்றன.

பாடுபட்டு பண்படுத்திய நிலம்
கண்முன்னே பறிபோகிறது.
எங்கள் மண் மைந்தர்கள் மட்டும் -
மாற்றாந்தாய் மனப்பான்மையுடன்
பார்க்கப்படுகின்றனர்.

எங்கள் தோப்பின் சில
மூத்த மரங்கள்
அறுபதுகளில் அடியோடு பிடுங்கப்பட்டுவிட்டன.
எங்கள் வழித்தடங்கள் தந்த
வடுக்களில் அரசியல் செய்யும் -
அக்கிரமகாரர்களுக்கு இனி இடமில்லை

மலைகளில் அட்டை இனங்கள் அனந்தம்
இரத்தத்தை..,
வியர்வையை..,
உழைப்பை..,
உயிரை உறிஞ்சி – எங்கள்
உணர்வை மிதிக்கின்றன.

பேச்சுரிமை..,
வீட்டுரிமை..,
வாக்குரிமை என எல்லாம்
எங்களுக்கு மட்டும் - வேறுவிதமாய்
வரைவிலக்கணப்படுத்தப் படுகிறது.

தேயிலைக் கட்டிய பசுமையைத்தவிர –
வேறெந்த பசுமையுமில்லை,
எங்களுக்கு எல்லா சுகமும்
தூரத்துப்பச்சைதான்,

அரைபடும் வாழ்க்கையில் -
எங்கள் அஸ்திவாரமே
அந்நியப்பட்டுவிட்டது.
கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல்
எங்கும் இருள் -
எல்லா இடங்களிலும் சுளீரென எரியும்
நெருப்பு – எங்கள் அடுப்புகளில்
சுமாராய்த்தானும் எரிவதில்லை!

பாடுபட்டவனுக்கே பாரிடம் -
நாங்கள்பட்ட பாட்டுக்கில்லை ஓரிடம்.
களை வைத்தவனெல்லாம் காலுன்ற இடமுள்ளது.
பாவம் -
பயிர்வைத்தவனுக்கு உலை வைப்பதா?
இந்த தாய்மரத்தில் -
எங்கள் கூடுகளுக்கு மட்டுமா இடமில்லை?

ஏய்த்துப் பிழைப்பனவுக்கு மட்டும்
ஏகபோகமா...?
மாறாதது மாற்றம் மட்டுமே..!

எல்லாத்திக்கிலும் அடிப்பட்டாயிற்று...
அப்படியே அமுங்கிப்போன –
எங்கள் உரிமைக்குரலை உரக்கச்சொல்லுவோம்.
அடையாளத்தை தொலைத்து
அரசியல் அநாதைகளாய் -
மறுக்கப்பட்ட மனிதத்தின்
மாற்று வடிவமாய் வாழ்ந்தது போதும்.
இனிப்படமாட்டோம்...!

காலம்...
எங்கள் கல்வியில்,
சிந்தனையில்,
செயல்களில்,
எத்தனையோ மாற்றங்களை செய்துள்ளது.
இந்தப்பாடு இனியில்லை.

தட்டித்திறக்காத தாள்
தகர்க்கப்படும்.
மடமைகள் களைய
கல்வி வீதைகளை காலந்தாழ்த்தாது தூவுவோம்.
வரப்போகும் வீடியலில் -
இந்த தேக(ச)த்தின் நலனுக்காய்
புற்றரித்த இடங்களை புனிதப்படுத்த
வைத்தியனின் கத்தியாய் வரட்டும் புரட்சி!

ராதாகிருஸ்ணன் உமேஸ்நாதன்
காசல்ரி பீரிவு, ஒஸ்போன் தோட்டம், ஹட்டன்

☼

பாடசாலை மட்டப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

மலையக இலக்கிய வளர்ச்சியில் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் வகிபங்கு

ஏறத்தாழ நூற்றாண்டுக்காலம் அடிமையிருளில் முழ்கியிருந்த தோட்டத் தொழிலாளர் மத்தியில் 1920 களிலிருந்து விழிப்புணர்வு ஏற்படலாயிற்று. இத்தகையதொரு சூழ்நிலை யில் மலையகத் தொழிலாளர் மத்தியிலும், மலையகத்தமிழ் இலக்கிய உலகிலும் பெருவளர்ச்சி ஏற்படுவதில் முன்னின்றுழைத்தவர்களுள் அமரர் சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் விதந்துக்கூறத்தக்கவர் ஆவார். தோட்டத் தொழிலாளரின் விழிப்புக்கும் மலர்ச்சிக்கும் தமது செயற்பாடுகள் மற்றும் எழுத்துக் களால் தனது இறுதி மூச்சுவரை அயராதுழைத்த கருணையுள்ளம் படைத்த கடவுளின் புதல்வனாகவும் மலையகத்தமிழ் இலக்கிய உலகில் திகழ்ந்தார்.

தோட்டத்தொழிலாளர்களை மந்தைக்கூட்டங்களாக கருதி அவர்களை ஆட்டிப்படைத்த பெரிய கங்காணிமார்களுள் ஒருவரின் பேரனாகப்பிறந்து, அவரது அரவணைப்பிலேயே வளர்ந்த சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் கங்காணிமார்களின் மனோபாவம் படைத்தவராக அன்றி, தொழிலாளர்கள் தம் கவிமணியாகவும் வாழ்ந்தார்: செயற்பட்டார்: பணிகளாற்றினார். இவரும் ஒரு தொழிலாளியின் புத்திரன் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

"……கூடை தலைமேலே, குடிவாழ்க்கை கானகத்தில்" என்ற பாடலினூடாக "மலையக மைந்தர்கள் பிறந்த பொன்னொடும் வளர்ந்த நன்னாடும் வெறுத்து ஒதுக்க ஆண்டான் வர்க்கத்தினரின் உடமைகளாய் நூற்றைம்பது வருட நீண்ட கொடிய ஆண்டுகள் வாழும் வாழ்க்கை கண்ணீரால் எழுதப்பட்ட ஒரு பெருங்காப்பியம் ஆகும்" எனக்கூறும் வேலுப்பிள்ளை அவர்கள், தொழிலாளர்களின் துயரம் துடைக்கவே தன் இறுதி மூச்சுவரை எம்மவரின் மலையக தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக பாடுபட்டார்.

தேயிலை பறிக்கும் அற்புத கரங்களை உள்ளத்தூய்மையோடு நேசித்த அவர், தொழிலாளர்களின் அன்பனாகவும், நண்பனாகவும், சிறந்த வழிகாட்டியாகவும், ஆசானாகவும், தொழிற்சங்க வாதியாகவும், பாராளுமன்ற அங்கத்தவராகவும், பத்திரிக்கை எழுத்தாளராகவும், அரசியல் பிரமுகராகவும், மக்கள் கவிமணியாகவும், நாவலாசிரியராகவும், நாட்டுப்பாடல்களின் தொகுப்பாசிரியராகவும், பன்னூலா சிரியராகவும், இவையாவற்றுக்கும் மேலாக மானுட நேசனாகவும் விளங்கினார் என்பதை வரலாற்றின் காலத்தால் அழியாத சுவடுகள் மூலம் தெளியலாம். மலையகத்தமிழ் இலக்கியத்தின் பல துறைகளிலும் அவர் தமது கைவண்ணத்தை திறம்பட காட்டியுள்ளார். ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு மேலாக அலுப்புச் சலிப்பின்றி எழுதி குவித்த அவர், மலையகக்கவிதையுலகிலும் நாவல் இலக்கிய

துறையிலும், நாட்டாரியல் துறையிலும் தமக்கென ஒரு தனிமுத்திரியையை பொறித்துள்ளார். மலையகத் தோட்ட தொழிலாளர் பற்றி நாவல் எழுதியவர்களுள், அவர் ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட பல நாவல்களை எழுதியவர் என்ற பெருமை அவரையே சாரும். மலையகத் தொழிலாளர் பற்றிய முதல் நாவல் அவர் எழுதிய "வாழ்வற்ற வாழ்வு" (1960) என்பதாகும். அத்துடனமையாது பார்வதி, காதல், சித்திரம், வீடற்றவன், இனிப்படமாட்டேன் ஆகிய பல்வேறு நாவல்களையும் அவர் எழுதியுள்ளார்.

மலையக இலக்கிய உலகில் சி.வி. வேலுப்பிள்ளைக்கு தனிப்பெருமையை தேடிக்கொடுத்தவற்றுள், அவரது கவிதைகள் முதன்மையிடம் வகிக்கின்றன. "In Ceylon's Tea Garden" (1952) என்னும் அவரது புகழ்பூத்த கவிதைநூல் முதலில் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு பின்னர் மலையான், சக்தி அ. பாலையா ஆகியோரால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

மலையக தோட்ட தொழிலாளர்களாகிய எம்மவரின் வாழ்வும் வரலாறும் "இருளிலே அகப்பட்ட விளக்கு" போன்ற கோக காவியம் ஆகும். அச்சோக காவியமே அவரது கைவண்ணத்தில் கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும், நாவல்களாகவும், நாடங்கங்களாகவும், நாடற்றவர் கதைகளாகவும், விவரண கட்டுரைகளாகவும், வசன கவிதைகளாகவும் பரிணமித்துள்ளன. அவரது "VISMAJAN" பாடல் சார்ந்த நாடகமாகும். இது தமிழில் எழுதப்படுவதற்கு முன்னர் முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இது போன்றே "The Borders Land (நாவல்), Wayfarer (வசன கவிதை தொகுப்பு), Born to Labour (விவரணக்கட்டுரை) முதலியனவும் முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பின்னர் முறையே எல்லைப்புறம், வழிப்போக்கன், உழைக்கப்பிறந்தவர்கள் என இவரால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

சி.வி. வேலுப்பிள்ளையின் ஆக்கங்களுள் அதிகமானவை, முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு பின்னர் அவராலும் பிறராலும் தமிழாக்கம் செய்யப்பட்டன. கணிசமானவை, அவராலேயே தமிழில் எழுதப்பட்டன. அதே சமயம், ஆங்கிலத்தில் அவை வெளிவந்தமையினாலேயே தோட்டத் தொழிலாளர் பெருமக்களின் அவலங்களை வெலியுலகும் அறியும் வாய்ப்பு கிடைத்தது. அத்துடன், அத்தகைய ஆக்கங்கள் பல ஆங்கிலம் தெரிந்த சிங்கள அறிஞர்கள் முதல் வெளிநாட்டவர் வரை பலரதும் பாராட்டுக்களை பெற்றுள்ளன. அவ்வாறு வெளிவந்த பாராட்டுரைகளுள் முக்கியமானவற்றை அமரர் சாரல்சாடன் அவர்கள் தமது "சி.வி. சில சிந்தனைகள்" என்னும் நூலில் ஆங்காங்கே காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையகத்தோட்ட தொழிலாளர்களின் வரலாறு பற்றி ஆங்கிலத்தில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றிலுள்ள முக்கிய குறைபாடுகளை சுட்டிக்காட்டி, தொழிலாளர்கள் பற்றிய சீரிய வரலாற்று நூலை விரிவாக எழுத விழைவோருக்கு வழிகாட்டும் வண்ணம் அமைந்துள்ளது. அவரது "நாடற்றவர் கதை" எனும் நூலாகும். அளவிற் சிறியதாக இருப்பினும் தொழிலாளர் வரலாறு பற்றிய அரிய தகவல்கள் பலவற்றைக் கொண்டுள்ளது.

சி. வி. வேலுப்பிள்ளையின் ஆக்கங்களுள், முதன் முதல் நூலுருப்பெற்றது

"முதற்படி" என்னும் நூலாகும். தோட்டத் தொழிலாளர் பற்றிய கட்டுரைத் தொகுப்பாக இந்நூல் விளங்குகின்றது. கதை என்ற சஞ்சிகையும் இவரால் நடத்தப்பட்டது. அவரது சிறுகதை ஒன்றும் வெளிவந்ததாக கூறுவர். அவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம். அவற்றுள் பல கட்டுரைகளின் முக்கியத்துவம், சிறப்பு முதலியன பற்றிச் சாரல்நாடன் தமது நூலில் சிறு அளவுக்கேனும் விரிவாக ஆராய்ந்துள்ளார். இக்கட்டுரைகள் "மலைநாட்டுத்தமிழ் மக்கள் தலைவர்கள்", "மலைநாட்டுத்தமிழ் மக்களின் உரிமைப்போர்த்தளபதிகள்" என்னும் தலைப்புகளில் அமைந்துள்ளன.

சி.வி. வேலுப்பிள்ளையின் இலக்கியப்பணிகளுள் சிகரம் வைத்தாற்போல் அமைவது யாதெனில், மலையக நாட்டார்பாடல்களைத் தொகுப்பதில் அவர் மேற்கொண்ட முயற்சியே எனலாம். மலையகத்தில் இத்தகைய ஒரு முயற்சியை அவரே முதன்முதலில் மேற்கொண்டார். அவரது தொகுப்பு முயற்சி முழுமை பெறாவிடினும், மிக வேகமாக மறைந்துக்கொண்டு வரும் நாட்டார்ப்பாடல்களைத் தேடித்தொகுக்க வேண்டிதன் அவசியத்தை உணர்த்தும் எண்ணம் அவரது "மலைநாட்டு மக்கள் பாடல்கள்" என்னும் தொகுதி அமைந்துள்ளது எனலாம்.

சி.வி. வேலுப்பிள்ளை அவர்கள் பெறுமனே இலக்கியக் கருத்தாவாக மட்டும் விளங்காது மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் விமோசனத்தின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் பலவற்றிலும் நேரடிப் பங்கு கொண்டு தியாகங்கள் பலவற்றை செய்தவர். உண்மையில், அவர் அஹிம்சை வழியிலான போராட்டக் களத்திற் பீறிட்டு கிளம்பிய உன்னதமான ஓர் இலக்கிய கர்த்தாவேயாவார். முக்கியமான போராட்டங்கள் பலவற்றில் அவர் நேரடிப்பங்கேற்ற போதே அவரது சிறந்த ஆக்கங்கள் பல தோன்றின என்பதை சாரல் நாடன் தமது நூலில் ஆங்காங்கே பொருத்தமான முறையில் சுட்டிக்காட்டுயள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக வரலாற்றிலே அதுவும் மலையகத் தொழிலாளர் வரலாற்றிலே முதன்முதலில் மலையக தொழிலாளர்களின் அறியாமையையும் தாழ்வுற்று வறுமை மிகுந்து வீடுதலை அற்று கெட்டு நானமாகி விட்ட அவர்களது இரங்கத்தக்க அடிமை நிலையையும் அதற்கான காரணங்களையும் எளிய முறையில் தனது எழுத்தாலும், செயலாலும் அவர்களுக்கு சுட்டிக்காட்டி, அவர்களை விழிப்புற்று கிளர்ந்தெழச் செய்வதில் அயராது பாடுபட்டவரும் கலை - இலக்கியத்தை அதற்கேற்ற ஆயுதமாக பயன்படுத்திவரும் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களே ஆவார். இவ்வகையில் பரந்த அளவில் மலையக நாட்டுப்புற தொழிலாளர்களின் விழிப்புணர்வுக்கும் எழுச்சிக்கும் முதலில் வித்திட்டவர் அவரேயாவர்.

இவ்வாறு தோட்டத்தொழிலாளர்களின் விமோசனத்தையே முக்கிய நோக்காக கொண்டு செயற்பட்ட சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் புகழ் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டு உலகின் எத்திசையெங்கும் சூரியனைப்போல் பரவ வேண்டும் என சூரியகாந்திகளாகிய எம்முள்ளங்கள் வேண்டி நிற்கின்றன.

நன்றி!.

குமார் மதிவதினி

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை.

திறந்த மட்டப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை

சி.வி. யின் இலக்கியத்தில் முற்போக்கு செல்நெறி

"அதிகார வர்க்கத்தின் ஒடுக்கு முறையும், அடக்கு முறையும், சுரண்டலும், சூறையாடலும் எங்கு தலைதூக்கி நின்றாடுகின்றதோ, அங்கு ஓங்கி ஒலிக்கும் ஓங்கார குரல்தான் இந்த முற்போக்கு இலக்கியம்" என்கிறார் இலங்கையின் மூத்த எழுத்தாளர் நீர்வை பொன்னையன் அவர்கள்.

ஒரு சமூகத்தின் விடுதலைக்காக இலக்கியத்திலேயே போராட வேண்டும். தர்மத்தின் பக்கம் நின்று, சத்திய வேட்கையுடன் தமது சிருஷ்டிகள் மூலம் உருக்கமான செய்திகளை சொல்லவேண்டும் இதுவே இலக்கியத்தின் கடப்பாடு.

ஒரு காலக்கட்டத்தில் தொழிலாளர்களை மந்தைக் கூட்டங்களாய் ஆட்டிப் படைத்த பெரியாங்கங்காணி பரம்பரையில் பிறந்த, கண்ணப்பன் வேல்சிங்கம் வேலுப்பிள்ளை (1914 – 1984) என்பவரைத்தான் நாம் செல்லமாக சி.வி. என்று அழைக்கின்றோம்.

"கூடை தலைமேலே, குடிவாழ்க்கை காணகத்திலே" என்ற நிலையில் பிறந்த பொன்னாடும் வளர்த்த திருநாடும் வெறுத்து, உறவுகளை பிரிந்து, ஆங்கில ஏகாதிபத்தியர்களின் காலடியில் சிக்கி, சிதைந்துப்போன துயர் தோய்ந்த மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கண்ணீரால் எழுதப்பட்ட சோக வரலாறே சி.வியின் படைப்புகள்.

சி.வியின் படைப்புக்கள் மலையக இலக்கியத்திற்கு மட்டுமல்லாது, எனலாம்.

தமது ஆரம்ப கல்வியை, தாம் பிறந்த மாவட்டமான நுவரெலியாவில், ஹட்டன் □லண்ட்ஸ் மற்றும் நுவரெலியா திருத்துவக் கல்லூரிகளில் பெற்றுக் கொண்டார். உயர்கல்வியை கொழும்பு நாளாந்தாவிலும் பெற்றுக் கொண்ட இவரின் கல்வியின் மொழிமூலம் ஆங்கிலமாகவே அமைந்தது.

ஆங்கிலத்திலேயே கல்வியைப் பெற்றுக்கொண்டதால் தமது படைப்புகளில் பெரும்பாலானவற்றை ஆங்கில மொழியிலேயே படைத்திருந்தார். எம்மலர்களைப் பற்றிய செய்திகளை, சர்வதேச ரீதியாக கொண்டு சேர்க்க, இது ஒரு காரணமாகவும் அமைந்தது.

பாவப்பட்ட மக்களாகிய தோட்டத் தொழிலாளர் வாழ்வு இருள் மயமானது: துன்பம் நிறைந்தது: வேதனை மிக்கது.

பாவப்பட்ட மக்களாகிய தோட்டத்தொழிலாளர்கள் வாழ்வு இருள் மயமானது: துன்பம் நிறைந்தது: வேதனை மிக்கது: அவலம் சூழ்ந்தது: சோதனைகள் நிறைந்தது:

ஆனாலும் அவர்களிடம் வாழ்க்கைப்பற்றிய அவநம்பிக்கை கிடையாது. எத்தனை கேடுகள், கெடுபிடிகள் நடந்தாலும் வாழ்ந்தே தீருவோம். என்ற குடிப்பும், எதனையும் எதிர்கொள்ளும் தீரமும், அவர்களுக்குள்ளே மேலோங்கி நின்றதை தம் சீரிய படைப்புகள் மூலம் வெளிக்கொணர்கிறார்.

பெற்றதாய் எப்படி, தனது அன்புக் குழந்தைப்படும் வேதனைகளையும், துன்பங்களையும், வதைகளையும் கண்டு வெம்பி, வெம்பி, வெதும்பி, ஆற்றாது அரற்றி அழுகிறதோ, அதுப்போலவே சி.வியும் தொழிலாளர்கள் படும் வேதனைகளையும், துன்பங்களையும் தனது படைப்புகள் மூலம் சொல்லி அழுகிறார்.

சி.விக்கு முன்னர் கோ. நடேசய்யரே மலையக இலக்கிய முன்னோடியாக இருந்திருக்கிறார். ஆனாலும் அவரின் கால இலக்கிய சூழ்நிலை வேறு. அவருக்குப் பிற்பட்ட சி.வியின் இலக்கிய சூழ்நிலை வேறு.

ஆங்கிலேய ஆட்சியாளர்களின் எச்ச சொச்சங்களின் ஆக்கிரமிப்புகளும் அடாவடித்தனங்களும் ஒருபுறம். 1947 க்கு பின்னர் ஏற்பட்ட சிங்கள இனவாதம், இதனோடிணைந்த இனக்கலவரங்கள், துரைமார்களின் ஆவணம், அரசாங்கத்தின் இலட்சியம், பஞ்சம், வறுமை, மக்களின் ஆத்திரம், போட்டித்தொழிற்சிங்கங்களின் பொறாமை, சதி இவை போன்ற அனைத்து சக்திக்களுக்கும் ஆடுகொடுத்தே, தொழிலாளர்களின் பிரச்சினைகளை மையாமாக வைத்தும், அவற்றினால் மக்கள் படும் சொல்ல முடியா துயரங்களை சொல்லியும், அவற்றை தீர்க்க பாடுபடும் வண்ணமே இலக்கியம் படைக்க வேண்டும்: என்ற நிலையே சிவிக்கு ஏற்பட்டிருந்தது.

அனைத்து சக்திகளுக்கும் ஈடுகொடுத்தே இறுதிவரை இலக்கியம் படைத்திருந்தார். எவற்றாலும் அவர் துவண்டுபோன சந்தர்ப்பங்கள் இல்லை.

அறியாமையினால் சிக்கி கிடக்கும் தொழிலாளர் கூட்டத்திற்குள்ளேயே தாமும் ஒருவராக இருந்து, அவர்களின் எழுச்சிக்கும், உயர்ச்சிக்கும் பாடுபடத்துடிப்பது இவரின் படைப்புகளின் மூலம் எம்மால் அறிய முடியும்.

சி.வி. ஒரு இலக்கிய படைப்பாளிக்குப்பால் பல பாத்திரங்களை தன்னிடத்தே கொண்டிருந்தார். ஆசிரியராக, தொழிற்சங்கவாதியாக, பாராளுமன்ற அங்கத்தவராக, பத்திரக்கை எழுத்தாளராக, அவற்றுக்கெல்லாம் மேலாக மானுடம் நேய்ந்த நல்ல மனிதராக வாழ்ந்தார். அதனால்தான் "மானுடம் பாடும் ஒரு வானம்பாடியாக" இன்னும் பேசப்படுகிறார்.

எழுத்துக்களின் மூலம் ஒரு சமூகத்தின் தலைவிதியையே மாற்றியமைக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்த சி.வியின் படைப்புகளை நோக்கும்போது, பல்வகைப்பட்ட இலக்கியங்களைப் படைத்திருப்பது காணமுடிகிறது.

நாவல், குறுநாவல், கவிதைகள், நாட்டார் இலக்கியம், கட்டுரைகள், கவிநாடகங்கள், உரைநடை சித்திரம், வசன கவிதை தொகுப்பு, விவரணக் கட்டுரை, பேனா சித்திரங்கள், சிறுகதை, பத்திரிக்கை ஆக்கப்படைப்புகள் இப்படி பன்முக திறமை கொண்ட படைப்பாளியாக இருந்தாலும் இவை அனைத்தும், இலக்கிய படைப்பில் "மகாவலி கங்கைக்கு இரண்டு வாளி நீர் ஊற்றியதுப் போல" என

தன்னடக்கத்துடன் அடங்கிப்போகின்றார்.

இவரது படைப்புகளில் சிலவற்றை ஆராய்ந்து பார்க்க முற்படுகின்றேன். இவர் எழுதிய கவிதைகளில் அழியா புகழை பெற்றுக்கொடுத்த கவிதைதான் அவர் ஆங்கிலத்தில் படைத்த, "தேயிலை தோட்டத்திலே..." என்னும் கவிதை.

இக்கவிதையில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "ஆழப்புதைந்த தேயிலைச் செடியின் அடியிற் புதைந்த, அப்பனின் சிதைமேல் ஏழை மகனும் ஏறி மிதித்து, இங்கவர் வாழவோ தன்னுயிர் தருவன்" என தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகிறார்.

"றோஜா மலரிலும் வாடிய இதழ்களைப்போல இத்தொழிலாளர்களின் வாழ்க்கை வாடிக்கழிகிறதே. உயிரைக் கொடுத்து மண்ணை வளம்பெறச் செய்யும் அவர்களுக்கு ஒரு கல்லறைக்கூட இல்லையே...!

மலையக தொழிலாளர்களின் வாழ்வை சித்தரித்துக்காட்டும் சி.வியின் மேற்குறிப்பிட்ட வரிகளில், யாரோ சிலர் நலன்வாழ, உயிரையும் கொடுத்து உழைக்கும் இம்மக்களுக்கு மிச்சமாக ஒன்றுமில்லையே...! என்பதை எம் கண்முன்னே நிறுத்துகிறார். இவைதவிர காந்திஜி, நூறாவது நாள் போன்ற கவிதைகளையும் யார்த்திருந்தார்.

இது போல் இவர் எழுதிய பல நாவல்களில் "வீடற்றவன்" என்பது இன்றும் புகழ்மிக்க ஒன்றாய் பேசப்படுகின்றது. பலம் பொருந்திய அடக்குமுறைக்காரர்களுக்கு எதிராக தோட்டத்திலே தொழிலாளர் கூட்டமொன்றை சேர்த்தான்: என்பதற்காக கதாநாயகனாக இராமலிங்கத்தை தோட்டம், தோட்டமாக வேலையில்லாமல் அலையவிட்டு, இறுதி இருப்பதற்கு இடமில்லாமல் நிர்க்கதிக்குள்ளான ஓர் கதை. அதாவது தொழிலாளி ஒருவனை துவசம் செய்து, வஞ்சம் தீர்த்த கதையொன்று.

உரிமைகள், சுநத்திரங்கள் என்று சொல்லி, ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எவர் குரல் கொடுத்தாலும் அவரின் நிலை இதுதான், என்பதனை பலம் பொருந்திய தோட்டத்துரைமார் கூறும் இக்கதையில், இராமங்கத்தின் குடும்பம் ஒட்டுமொத்த மலையக தொழிலாளர்களாக காட்டப்படுகிறது.

பிற்காலத்தில் பிற்காலத்தில் தொழிற்சங்கம் அமைத்து, உரிமைக்காய் போராட வழிவகுத்தது என்றும் கூறலாம். இந்நாவலைத்தவிர வாழ்வற்ற வாழ்வு, எல்லைப்புறம், பார்வதி, காதல், சித்திரம், இனிப்படமாட்டேன் என்பவற்றையும் படைத்திருந்தார். இனிப்படமாட்டேன் என்ற இறுதி நாவலில் சிங்கள தமிழ் முரண்பாடுகள் வளர்ந்து வந்தக் காலத்தில் படைக்கப்பட்டதாகும். சிங்களவர், தமிழர் திருமணத்தின் பின் அவர்களுக்கு பிறக்கும் பிள்ளைக்கு சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் சவால்கள் தொடர்பானது. இந்நாவல் அவரது வாழ்க்கை அனுபவமாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

சி.வியின் படைப்புகளில் மற்றுமொரு உயர் படைப்பாக கொள்ளப்படுவது "மலைநாட்டு மக்கள் பாடல்கள்" என்னும் நாட்டார் பாடல் இலக்கியமாகும். இவரே முதன்முதலில் இப்படியொரு தொகுப்பு முயற்சியை செய்திருந்தார். ஆழமான அனுபவ புதையலான இப்பாடல்களில் ஆழப்பதிந்த உண்மைகளே உண்டு. தென் இந்தியாவிலிருந்து ஏற்றிவரப்பட்டது முதல் காடுகளை அழித்து பெருந்தோட்டப்

பயிர்களாக்கியது வரையான எல்லா சம்பவங்களையும், அதனால் ஏற்பட்ட இழப்புகளையும், துன்பங்களையும் வாய்மொழியாக இப்பாடல் சொல்லும்.

அவர் எழுதிய கட்டுரைகளான மலைநாட்டுத் தமிழ் மக்கள் தலைவர்கள் மற்றும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் போர்த்தளபதிகள் என்பனவாகும். இளம் தலைமுறையினருக்கு முற்பொக்கு சிந்தனைகளை தூண்டக்கூடிய வண்ணமும் மலையகத்திற்கு சிறந்த எதிர்கால தலைவர்களை உருவாக்கும் பொருட்டும் இக்கட்டுரைகள் அவரால் படைக்கப்பட்டது.

குறிப்பாக வீடற்றவன் நாவல் மற்றும் மேற்குறப்பட்ட கட்டுரைகளுக்குப் பிறகு தோட்டப்புறங்களில் பல்வேறுமாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. குழுவாக தொழிற்சங்கம் அமைத்து, முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் தீர்க்க முற்படுதல், இதற்கு ஒற்றுமை அவசியம் என்பதை புரிந்திக் கொள்ளல், இதன் இன்னொருபடியாக இடதுசாரி இயக்கங்கள் தோன்றி மக்கள் போராட்டங்களை நடாத்தி அரசியல், தொழிற்சங்கங்களின் ஊடாக ஒரு சில பிரச்சினைகளை தீர்த்துக்கொண்டதோடு சில உரிமைகளை பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பேற்பட்டது.

மலையக இலக்கியத்தின் "கொடுமுடி" யாக திகழ்ந்த சி.வி அவர்கள் வீடற்றவன் என்னும் நாவலில் தனது முன்னுரையிலே பின்வருமாறு குறிப்பிடுகின்றார். இன்றைக்கு நூற்றறுபது (160) வருடங்களுக்கு முன் வந்த, வஞ்சிக்கப்பட்ட ஏழை இந்திய தமிழ் தொழிலாளர்கள், கப்பல் பிரயாணத்திற்கும் வழியில் உண்ட உணவுக்குமான கடனாக இருநூற்று எழுபது ரூபாவை (270.00) அடைக்க, அடரந்து வளர்ந்த தேயிலைக்குள் நூறு வருடங்கள் கடனாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் படும் வேதனையின் ஒரு சிறுதுளிதான் இந்த வீடற்றவன் நாவல் என கூறுவது மக்களின் வேதனை எந்தளவிற்கென்பதை எம் கண்முன்னே நிறுத்துகிறார்.

மலையகத்தின் "மாணிக்கம்" என அழைக்கப்பட்ட சி.வி. கவிதையொன்றில் "எதிர்காலம் கனவென ஆயினும், அழித்தெழுதாவோர் ஆக்கினைப் போல மண்வெட்டி கையேந்தியே..." அதாவது மக்கள் எவ்வளவு உணர்ச்சிக்கு பூர்வமான நல்வாழ்வு கிடைக்குமென கனவு கண்டாலும் அது பசுமரத்தாணிபோல் மாற்றியமைக்க முடியாத ஆயுதங்களான வலவாங்கு, முள்ளு, மண்வெட்டி என்பனவே மீண்டும், மீண்டும் கைக்கு வருகிறது. இக்கருத்துக்களின் ஊடாக இம்மக்களின் வாழ்க்கையில் மாற்றுத் தொழில், மாற்று சிந்தனை அவசியம் என்பதனை வேண்டி நிற்கிறார்.

பேராசிரியர் க. அருணாச்சலம் அவர்கள் சி.வியை மலையக "பாரதி" என்றும் மலையக இலக்கிய உலகின் "இமயம்" என்றும் குறிப்பிடுகின்றார். இலக்கியம் என்பது அவனது உண்மையான உழைப்பில் தோன்ற வேண்டும். அவ்விழக்கியத்தில் எழுத்தாளனது ஆன்மா கலந்திருக்க வேண்டும் என சி.வி ஓரிடத்தில் கூறியிருக்கிறார். நான் படைத்த படைப்பினால் திருப்தியடையவில்லை. படைக்க எடுத்துக்கொண்ட கருப்பொருளினாலேயே திருப்தியடைந்தேன் என்றார்.

அவரின் எழுத்தினை விமர்சகர், சிதம்பர ரகுநாதன் இவ்வாறு கூறுகின்றார். சி.வியின் எழுத்துக்கள் குமுறத்தொடங்காத எரிமலை என்றும் அவரது நடை அமைதியானது, ஆரவாரமற்றது. ஆனால் அழுத்தமானது. வாழைப்பழத்தில் ஊசி

ஏற்றினாற் போல் நாசுக்காய் பாயும் சக்தி மிக்கது.

1960க்கு பிறகு சி.வியின் பாணியையும், நடையையும் பின்பற்றி காத்திரமான வியத்தகு, எழுச்சிமிகு பரம்பரை உருவாகின. துடிப்பும், விழிப்பும் கொண்ட இவர்கள் தமது பேச்சிலும் கவிதைகளிலும் சீற்றத்தை வெளிப்படுத்தினர். சி.வியை முன்மாதிரியாகக் கொண்டும் ஏனைய முற்போக்கு வாதிகளோடு இணைந்து இலக்கியங்களைப் படைக்களானார்கள்.

தோட்டத் தொழிலாளர்கள் மேல் ஆழமும், அகலமும், கரிசனையும் ஏற்பட்டன. இதனை வெவ்வேறு காத்திரமான இலக்கிய வடிவத்தில் வெளிப்படுத்தினார். பத்திரிக்கைகளும் கூட பல பக்கங்களை மலையகத்திற்கென்றே ஒதுக்கிவிடுகின்றன. மலையகத்திற்கு விசேடமான சிறப்பு பத்திரிக்கைகளும் உண்டு. இதைவிட வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றனவும் தொழிலாளர் முற்போக்கு செய்திகளை வெளிப்படுத்துகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணக்கருத்தாவாக சி.வி. இருந்திருக்கிறார்.

சி.வி. அவர்கள் இலக்கியத்துக்கு அப்பால் பல நேரடி போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளார். மலையக தொழிலாளர் குடியுரிமை பறிக்கப்பட்ட போது இலங்கை இந்திய காங்கிரஸ் (தற்போதைய இ.தொ.கா) உடன் இணைந்து நூறுநாள் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றிபெற்றார். இதில் இவர் பங்கேற்பவனாகவும், பார்வையாளனாகவும், வழிநடத்துபவனாகவும் முக்கிய பங்கு ஆற்றியுள்ளார். பெண்களுக்கு எதிரான பல போராட்டங்களையும் முன்நின்று நடத்தியிருக்கிறார்.

இலக்கியத்துக்கு அப்பால் மக்களுக்காய் பாடுபட்டதை குறிப்பிடும் சில எடுத்துக்காட்டுகளே இவை. தொழிற்சங்கவாதி, இலக்கியவாதி இரண்டையும் இரு கண்களாய் கொண்ட இவரே மலையக இலக்கிய உலகின் "சிகரம்" என அடையாளப்படுத்தப்பட்டார்.

மலையகத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இலக்கியம் படைத்த சிறப்பு இவருக்குண்டு. பல வகைகளில் இலக்கியம் படைத்த பெருமையும், அதிக நாவல்கள் படைத்த பெருமையும் இவருக்குண்டு. இதைவிட வாய்மொழி இலக்கியத்தின் உயிர்நாடியான மலைநாட்டு மக்கள் பாடல்கள் உன்னும் நாட்டுப்புறப்பாடல்களை தேடித்தொகுத்த பெரும்சிறப்பும் இவரையே சாரும்.

தமிழ் இலக்கியத்தில் அதிகம் பேசப்பட்ட கா.சிவத்தம்பி அவர்களும் க.கைலாசபதியும், சி.வி. அவர்களை மலையக இலக்கியத்தின் "பிதாமகன்" என பெருமைப்படுத்தி கௌரவிக்கின்றார்கள்.

மலையக கலை இலக்கியப் பேரவை, 1982 இல் "மக்கள் கவிமணி" என்னும் சிறப்பு பட்டத்தை வழங்கி மலையக இலக்கியத்தின் "பொக்கிஷ மனிதராய்" போற்றியது.

மலையக முற்போக்கு இலக்கியத்தின் "விடிவெள்ளியான" சி.விக்கு நாம் செய்கிறதும், செய்ய வேண்டியதும் என்ன...? கடந்த ஆண்டு (2013) இறுதியில் கொழும்பு குமரன் புத்தக இல்லம் சி.வி பற்றிய ஆரோக்கியமான நூலொன்றை

வெளியிட்டிருந்தது. அவரைப் பற்றிய கட்டுரைகள், கவிதைகள் நூல்களிலும் பத்திரிக்கைகளிலும் எழுதுபவர்கள் பாராட்டுக்குரியவர்கள். இவர்கள் தமது பணியை தொடர வாழ்த்துக்கள்.

இன்னும் அவரைப்பற்றிய, அவரது இலக்கியம் பற்றிய விபரங்கள் நூல்வடிவில் வந்திராமை கவலைக்குரியதே. தமிழ் பாடநூல்களிலும் தமிழ்மொழித்தினப் போட்டிகளிலும் இவரின் படைப்புகளை சேர்த்துக்கொள்ள வேண்டுகிறோம்.

அவரின் நூற்றாண்டு விழாவை கொழும்பில் நடாத்திய மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் மற்றும் ஹட்டன் சி.வி. வேலுப்பிள்ளை ஞாபகார்த்த குழுவினருக்கும் சி.வி. யின் வாசகர் சார்பான நன்றிகளும் வாழ்த்துக்களும்.

சி.வி. யின் நாமம் என்றென்னும் நிலைபெறுக!

அழகு கனகராஜ்
இல 01, வைத்தியசாலை வீதி,
கிளைன்லயின கடைவீதி,
அக்கரப்பத்தனை.

EMINENT LITERATUS
LATE C.V. VELUPILLAI – T.R. GOPALAN

*I*mportance of being English writers in the field of Plantation Tamils literature

A towering figure in the plantation literature, known as C.V., Mr. C. Velupillai, played a significant role in his time.

Lived in Meddecombra estate Watagoda, educated in Nalantha College, Colombo, a bilingual literatus, like no other in this hills.

The first general election held in 1947, followed by the independent of Ceylon. Mr. C. Velupillai candidated in Talawakelle constituency under Ceylon Indian congress (CIC) headed by Hon Soumiyamoorthy Thondaman and elected to represent the parliament, accordingly.

After losing the parliamentary seats due to citizenship act C.V. is the one who started to live with pen and papers, the career already in practice after the departure of school.

Serious reader of Rabindranath Tagore creations, Rajaji, commander Rajah Proctor, Mulkraj, Martin Wickramasinghe and many others. His mindset favored writing than the political activities.

It is practicable generally and K. Ganesh, a strong reader and writers will not shine in politics and one or two may be as a microscopic.

Made constant letter correspondences with Indian scholars and he himself encourage developing his creations.

As an a poiet English poet wrote numerous short stories which were published in India and Ceylon journals, duly.

For his credit in Tamil wrote three novels, Veedatravan (a Homeless), Ini pada Matten (I don't fall again) are two of them.

His poems and tales have originality of south Indian culture and strength.

In his poem the serfdom thriues, the people and the scence of line rooms are so graphically showed with feeling and life, hit the hearts of many English readers.

With obscrrants eye sympathy for his characters. whose stories and poems are descvered to be read.

When analyzing his personal life it was not promising to follow his literary life by his descendents most of his copies of journal pieces, manuscripts, and book were not preserved by the family members.

To follow his nature of writing and as a poet one figure Mr. C.S. Gandhi a vetcran journalist serving in the field for many years. He has an admirable sence in English literature and Thamil as well. Homely and blood related to C.V. Mr. C.S. Gandhi, here, I think, his writings and translations in the media, are exceptionally fine.

The life history of C.V. had been writter and composed by the veteran writer Mr. Saral Nadan. He portayed C.V. Sila Sinthanaigal (C.V and some thinkings). The historian saral published another volume in the recent past, which was his last publication in his time.

Further, a tower in the short story writer in the Mr. M. Sivalingam, who has vast knowledge about the plantation workers, translated the "Tea Garden the English volume in Thamil under a title "Theyilai Thesam" (Nation of Tea).

A early translation of C.V.s anthology work done by Mr. Sakthi Baliya some time ago, which was highly dislussed.

Born to Labour and English anthology was a remarkable and creating a sense of inspiration.

"Mahavali" a pamphlet published by him in favour of N.E.W.U a trade union started with Mr. V.K. Vellayan, another scholar in the plantation.

Mr. Anthony Jeewa, editor of Kolunthu (The Bud) a long standing literary figure and an activist of plantation Literature wrote numerous essays about C.V. and assisted Mr. Saral Nadan, throughout his journal life in respect of C.V's documentation.

C.V's brother C. Subramaniyam was also a Thamil poet wrote some poems which gave the readers many inspirations. His son Mr. Gurubaran, preserved the prints and manuscripts for many years and after his death those were abandoned. But, however now we thank Mr. K. Rajasekaran who is the self interested to preserving C.V's collections to highlight C.V's productions though the digital screen. No wonder, though the plantation writers lacked their university qualifications, literary contributions made by them are intellect around the agoes readers.

I wish whole heartily, the memorial committee and its members, for handing the centenary with the numerous aspects of C.V. to mark the 100th birth day of a great writer and thinker in his time.

The C.V.s memorial committee and its members with their hard labour with great effort arranged a session to mark his 100th anniversary in Hatton would be a turning point to respect the many silent thinkers of our time. ☼

முத்திரையால் பெருமை பெரும் சி. வி. வேலுப்பிள்ளையின் மாட்சி

– சு. முரளிதரன்

ஹட்டன் நகரில் சி.வி.க்கு 2014.09.21 அன்று அவர் சார்ந்த தொழிற்சங்கம் அமைச்சர் வாசுதேவநாணயக்கார அவர்களின் தலைமையில் முத்திரையை வெளியிட்டது கண்டு மனதில் எழுந்த சிந்தனையும் எனது முன்னைய பொழுது போக்கினால் சேகரிக்கப்பட்ட முத்திரைகளும் இப்படி ஒரு பதிவை செய்யத்தூண்டியது. இப்படி ஒரு சிறுமுயற்சியை பேராதனை பல்கலைக்கழக நூலகர் மகேஸ்வரன் அவர்கள் நான் தொகுப்பாசிரியராகச் செயற்பட்ட மத்திய மாகாண சாகித்திய மலர் (2011) ஆக்கமொன்றின் ஊடாக ஆரம்ப முயற்சி செய்திருந்தாலும் இது அதிலிருந்துவீரியும் ஒன்றாகஅமைகின்றதெனலாம்.

ஆறுமுகநாவலர் தொடக்கம் இலங்கை தமிழர்கள் 21 பேருக்கு முத்திரை போட்டுள்ளது சுதந்திரத்துக்குப் பின்னான இலங்கை அரசாங்கம். அந்தவரிசையில் சி.வி. வேலுப்பிள்ளை அடுத்ததாக இடம் பிடித்து நமக்கு பெருமை சேர்க்கின்றார். இது இலங்கை வரலாற்றில் அவருக்கு நிரந்தர இடத்தை தந்துவிட்டது என்று சொன்னால் மிகையானதில்லை.



























அடுத்ததாக இந்தியவம்சாவளியினருக்காக சேவையாற்றியவர்கள் என்ற வரிசையில் இலங்கையில் இதுவரை முத்திரை கண்டவர்கள் ஐ.எக்ஸ். பெரேரா, அசீஸ், பெரி.சுந்தரம், தே. ராமனுஜம் மற்றும் தொண்டைமான் என்பதாகவே அமைந்துவிடும் நிலைமாறி மலையகத்தவர் பெருமை முன்னெடுத்தவராக முத்திரை கண்டுள்ளார் அமரர் சி. வி. வேலுப்பிள்ளை.







அதுமட்டுமா தமிழ் பணிபுரிந்தவர்கள் என்ற வகையில் இந்தியாவில் முத்திரை கண்டவர்கள் பலர் உள்ளார்கள். அவற்றிலே பாரதியார், பாரதிதாசன், கல்கி, நாமக்கல் ராமலிங்கம், ஜீவானந்தம், அறிஞர் அண்ணா, தந்தைபெரியார், கி. ஆ. பெ. விசுவநாதம், கண்ணதாசன் போன்றோர் நம்மோடு நெருங்கியவர்கள். அந்த வரிசையிலும் சி.வியின் முத்திரையை வைத்துப் பார்க்கும் போது நமக்கெல்லாம் நம்மையறியாமலே உள்ளம் சிலிர்ப்பதை உணரக்கூடியதாக இருக்கும்.



இதற்கும் மேல் இன்னொரு கண்ணோட்டத்தில் சி.வியை வைத்துப்பார்ப்பது தவறில்லை என்பதோடு நாம் அவர் பெருமையை எம்மட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை குறிப்பால் உணர்த்த அடுத்த முத்திரை வரிசையைத் தருகின்றேன்.



சி.வீக்கு முத்திரை போடமுனைப்புற்றவர்களுக்கு சில முகத்திரைகள் இருப்பதாக சுட்டப்பட்டாலும் அந்த சாதனை நிகழ்த்தப்பட்டதால் தானே நமக்கு அந்த ஆளுமையை இப்படி ஒப்புவுமை செய்ய இலகுவாக இருக்கின்றது என்பது நிதர்சனமாகும். எனவே இந்த நூற்றாண்டுகாலத்தில் அவர் முகம் தாங்கிய முத்திரையைப் பயன்படுத்தி நம்மவர்களுக்கு கடிதங்கள் அனுப்புவோம். தபால் தலையை பாதுகாக்கச் செய்வோம். இனி முத்திரை சேர்ப்பது பொழுதுபோக்கு அல்ல. அது வாழ்வியலோடும் கலந்ததாகட்டும். ☼

சி.வி. ஜனனதின நூற்றாண்டு நினைவு விழாக்குழு

தலைவர்	:	மு. நேசமணி
துணைத்தலைவர்	:	எஸ். கே. சந்திரசேகரன்
செயலாளர்கள்	:	சி. மொழிவரதன்
		இரா. சந்திரமோகன்
பொருளாளர்	:	கே. மெய்யநாதன்
அமைப்பாளர்	:	சிவலிங்கம் சிவகுமாரன்
நூலாக்கக்குழு தலைவர்	:	கவிஞர் சு. முரளிதரன்
போட்டிக்குழு தலைவர்	:	கே. இராஜ்சேகர் (ஆசிரியர் ஆலோசகர்)

செயற்குழு உறுப்பினர்கள்

பானா தங்கம், எஸ்.சிவசுந்தரம், டி.அய்யாதுரை, சை.கிங்ஸ்லி கோமஸ், எஸ்.சுப்ரமணியம், கே.ராஜசேகர், மோகன் சுப்ரமணியம், கந்தை கணேசமூர்த்தி, சுப்பையா ராஜசேகர், ஜே.அகில்ராஜ், எஸ்.சரவணபிரகாஸ், ஏ.லோறன்ஸ், எம்.முத்துவேல், ஏ.மெத்தியு, எம்.சிவலிங்கம், பி.எஸ். கிருஸ்ணன், எஸ்.ஜே.பபியான், ஆர்.நாராயணசாமி, மல்லிகை சி குமார், ஏ.சி.ஆர்.ஜோன், எஸ். முரளிதரன், தி.ராஜகோபால், ஜே.லெனின் மதிவானம், சி.சபாரத்தினம், எஸ்.நடேசன், என்.சண்முகம்பிள்ளை, எஸ். முருகையா, அந்தனி ஜீவா, டி.எஸ். டேவிட், தாமரை யோகா

நடுவர் குழு :

கவிதை : மல்லிசை சி. குமார், பானா தங்கம், ஜேம்ஸ் விக்டர், சிவலிங்கம் சிவகுமார், கே. கணேசலிங்கம், இரா. சந்திரமோகன்

கட்டுரை : மொழிவரதன், மு. நேசமணி, கே. கணபதிப்பிள்ளை, எம். மகேந்திரன், சிவனு மனோகரன், கே. இராஜ்சேகர்

பாடசாலை மட்ட கவிதை மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம்

கவிதை

முதலாம் இடம் : குருசாமி தர்சனகுமார், தெய்வகந்தை த.வி. – சாமிமலை, தரம் 11

இரண்டாம் இடம் : என். ஹரிகரன், சரஸ்வதி மத்திய கல்லூரி, புஸ்சல்லாவை, தரம் 12, வர்த்தகப்பிரிவு

மூன்றாம் இடம் : கி.சசிந்தாமேரி, ஹோலிரோசரி த.ம.வி., பொகவந்தலாவ, தரம் 13, கலைப்பிரிவு

ஆறுதல் பரிசுகள்

ரா. கார்த்திகேஷ் கொட்டகலை த.ம.வி., தரம் 13 ஏ, கலைப்பிரிவு

யு. கிரிஷானி கொட்டகலை த.ம.வி., தரம் 13 ஏ, கலைப்பிரிவு.

எப்.எம். பாத்திமா பர்சானா நோர்வூட் த.ம.வி, தரம் 13 கலைப்பிரிவு.

கட்டுரை

முதலாம் இடம் – : குமார் மதிவதனி, பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயம் தரம் 13 ஏ, கலைப்பிரிவு.

இரண்டாம் இடம் : புஸ்பராஜ் கிரிஷானி கொட்டகலை த.ம.வி., தரம் 13 ஏ, கலைப்பிரிவு

மூன்றாம் இடம் : எஸ். நிஷாந்தினி புனித கப்றியல் மகளிர் கல்லூரி – அட்டன், தரம் 12 கலைப்பிரிவு

ஆறுதல் பரிசுகள்

அருள்குமார் பவித்ரா சென்மேரிஸ் மத்திய கல்லூரி – பொகவந்தலாவ, தரம் 13, கலைப்பிரிவு.

சுந்தரம் கீர்த்திகா கிளனியோன் த.ம.வி. – தரம் 13, கலைப்பிரிவு.

திசைநாதன் சஜித்ரா ஹோலிரோசரி த.ம.வி. – பொகவந்தலாவ, தரம் 13, கலைப்பிரிவு.

திறந்த போட்டிப் பிரிவுகள்

கவிதை

முதலாம் இடம் : ராதாகிருஸ்ணன் உமேஸ்நாதன், காசல்றி பிரிவு, ஒஸ்போன் தோட்டம், அட்டன்.

இரண்டாம் இடம் : அருணாசலம் புஸ்பகுமார், டயகம மேற்கு, 3ஆம் பிரிவு, டயகம.


மூன்றாம் இடம் : எம். சந்திரமதி, ஸ்ரீபாத தே.க.க, பத்தனை.

கட்டுரை

முதலாம் இடம் : அழகு கனகராஜ், கிளாஸ்கோ த.வி, அக்கரபத்தனை.

இரண்டாம் இடம் : அ. மோகனகுமார், ஸ்ரீபாத தே.க.க, பத்தனை.

மூன்றாம் இடம் : எம். மனோரஞ்சனி, ஸ்ரீபாத தே.க.க, பத்தனை.



ஸி. வி. வேலுப்பிள்ளை

1914ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 14ம் திகதி இலங்கையின் நுவரெலியா மாவட்டத்தின் வட்டகொடை நகருக்கு அண்மையிலுள்ள மடகொம்பரை எனும் தோட்டத்தில் பிறந்தவர் ஸி.வி.வேலுப்பிள்ளை. தந்தையின் பெயர் கண்ணப்பன் வேல்சிங்கம், தாயார் குமரன் தெய்வானை. தாயின் தகப்பனாரான 'குமரன்' மடகொம்பரை தோட்டத்து பெரியாங் கங்காணியாவார்.

பெரியாங் கங்காணிக்குரிய வசதிகளுடன் அமைந்த பெரிய வீட்டு பேரப்பிள்ளையாக வளர்ந்த ஸி.வி.வேலுப்பிள்ளைக்கு முறையான கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு அமைந்தது. மடகொம்பரை தோட்டப் பாடசாலையில் கல்வியை ஆரம்பித்த ஸி.வி. ஹட்டன் மெதடிஸ்ட் கல்லூரியிலும் (ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி) சிலகாலம் நுவரெலியா புனித. திரித்துவ கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்து, தனது உயர் கல்வியை கொழும்பு நாலந்தா கல்லூரியில் நிறைவு செய்தார்.

ஆசிரியராக தொழில் தொடங்கிய ஸி.வி. வேலுப்பிள்ளை பின்னர் தொழிற்சங்கத் துறையிலும் அரசியலிலும் தன்னை இணைத்துக்கொண்டார். இலங்கை சுதந்திர நாடாளுமன்றத்தின் உறுப்பினரான இவர், இலங்கை இந்திய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியவற்றில் அரசியல் தொழிற்சங்க பணியாற்றியுள்ளார்.

ஆனாலும் சிறுவயது முதலே கலை இலக்கிய நாட்டம் கொண்டவரான ஸி.வி. வேலுப்பிள்ளை ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும் பின்னர் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலுமாக தனது படைப்பிலக்கியங்களைத் தந்துள்ளார். கவிதை, கவிதை நாடகம், நாவல், நடைச்சித்திரம், கட்டுரைகள் என பல்துறை இலக்கிய வடிவங்களிலும் தனது முத்திரையைப் பதித்தவர். மலையக இலக்கியத்தின் ஊற்றுக்கண் என சொல்லப்படும் வாய்மொழி வடிவிலான 'நாட்டார்' பாடல்களை சேகரித்து எழுத்து வடிவத்தில் பதிவு செய்த முதலவர் எனும் பெருமைக்குரியவர். இவரது ஆங்கில படைப்புக்களில் 'In Ceylon's Tea Garden' எனும் தொகுதியே மலைநாட்டு மக்கள் சார்ந்து அவர் எழுதிய முதல் கவிதை நூல். அதனை தமிழாக்கம் செய்ததன் மூலம் ஸி.வியை தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் கவிஞர் சக்தீ பால ஐயா. அதனைத் தொடர்ந்து பொன். கிருஸ்ணசாமி, செபஸ்தியன் போன்றவர்கள் முதல் மு. சிவலிங்கம் வரையானோர் ஸி.வியின் ஆங்கில படைப்புக்களை தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள். பின்னாளில் சில தமிழ் நாவல்களையும் கட்டுரைகளையும் ஸி.வி நேரடியாகவே தமிழில் எழுதியுள்ளார்.

எழுதுவதுடன் மட்டுமல்லாது பிற சமூகங்களுடனும் இலக்கியங்களுடனும் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்துள்ள ஸி.வி, 'கதை', 'மாவலி' முதலான கலை இலக்கிய சமூக சஞ்சிகைகளையும் ஆசிரியராக இருந்து வெளியீடு செய்துள்ளார்.

மலையக மக்களின் வாழ்வியலை ஐம்பதுகளிலேயே ஆங்கிலத்தில் எழுதி தமிழின் எல்லைகளுக்கு அப்பாலும் கொண்டு சென்ற ஸி.வி.வேலுப்பிள்ளை. அவர்களே மலையக இலக்கியம் எனும் தனியான மரபுக்கு வித்திட்டவராக ஆய்வாளர்களால் கணிக்கப்படுகின்றார்.